உ

திருச்சிற்றம்பலம்

திரு அருட்பிரகாச வள்ளலார்

என்னும்

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்

திருவாய்மலர்ந் தருளிய

திரு அருட்பா

௩. உரைப் பகுதி

இது

சென்னை

பி. ஏ., எம். எல்., (அட்வொகேட்)

ஆ. பாலகிருஷ்ண பிள்ளையால்

சுவாமிகள் அச்சிற் பதித்த முதற் பிரதிகளோடும்
சுவாமிகளைச் சூழ்ந்து அவர்களுக்கு ஆட்பட்டிருந்த
அன்பர்களின் கைஎழுத்து அல்லது அச்சுப் பிரதிகளோடும்
ஒத்திட்டு ஆராய்ந்தும் தொகுத்தும்

அடக்கவிலைப் பதிப்பாக

அச்சிடப்பட்டிருக்கிறது.

கலியுகாதி௵ ௫௦௩௨-ல் நிகழும் பிரஜோத்பத்தி௵
புரட்டாசி௴ ௨௩
9-10-1931

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1

திரு அருட்பாவின்
இந்த அடக்கவிலைப் பதிப்பின் நோக்கம்

முத்தியடைதற்காகவே திரு அருளால் கொடுக்கப்பட்டிருக்கும் இம்மனிதப் பிறவி அவரவர் அஜாக்கிரதையினால் அழிந்தொழிந்து போவது கண்டு அஞ்சி, ஆண்டவரிடம் அடைக்கலம் புகுந்திருக்கும் இத்தெய்வத் தமிழ் நாட்டிலுள்ள மகளிர் சிறுவர் வறியர் முதியர் சிறுதொழிலாளர் நோய்வாய்ப்பட்டவர் துறந்தார் இலக்கிய இலக்கணம் கல்லாதார் என்பவர் உள்ளிட்ட அடியார் இனங்கள் எல்லாம் எவ்வகைத் தடங்கலுமின்றி எளிதில் பெற்றுத் தம்தம் கையுறையாகக்கொண்டு நாணாளும் பயின்று பயின்று, எல்லாம் வல்ல தனித் தலைமைப் பெரும்பதியின் ஒப்புயர்வற்ற திருவடித் துணை கிடைக்கப்பெற்று, இப்பிறவிக்குரிய ஆன்ம இன்பம் அடையும் பொருட்டே, திருவருட்பாவின் இந்த அடக்கவிலைப் பதிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இப்பதிப்பில்
இதுகாறும் வெளிவந்திருக்கும் பகுதிகள்

க.	கீர்த்தனைப் பகுதி	விலை அணா	3.
உ.	வசனப் பகுதி	,,	4.
௩.	உரைப் பகுதி	,,	9.

திரு அருட்பா : ௩. உரைப் பகுதி

பொருளடக்கம்

எண்	பிரிவு	உட்பிரிவு	பக்கம்
	பாயிரம்	க. உரைப் பகுதிக் குறிப்பு ...	௪
		உ. ஆசாரிய ஸ்துதி ...	௫
		திருவருட்பா மகிமை ...	௮
		இன்று வருமோ என்னும் திருவருட்பா ...	256
க.	ஒழிவிலொடுக்கம்		
		1. ஒழிவிலொடுக்கப் பாயிர விருத்தி ...	1
		2. குறிப்புகள் ...	26
		அநுபந்தம் ...	33
உ.	தொண்டை மண்டல சதகம்		
		1. நூற் பெய ரிலக்கணம் ...	42
		2. வழிபடு கடவுள் வணக்கப் பாட்டுரை ...	63
		3. நூலும் அதன் மேற்கோள களும் ...	69
௩.	உலகெலாம் என்னும் மெய்ம் மொழிப் பொருள் விளக்கம்		
		1. மெய்ம் மொழிப் பொருள் விளக்கம் ஆமாறு ...	128
		2. மெய்ம் மொழிப் பொருள் விளக்கம் வருமாறு ...	138
௪.	பொன் வண்ணத் தந்தாதி ...		241
௫.	வேதாந்த தேசிகர் குறட்பா ...		243
௬.	தமிழ் ...		246
எ.	அகர உயிரின் இலக்கண நியாய விசார வினாக்கள் ...		250
௮.	இலக்கண வியனடை வழக்கப் பாடுறுத்துவிக்கும் பத்திரிகை ...		254

உ

பாயிரம்

க. உரைப் பகுதிக் குறிப்பு

இவ்வுரைப் பகுதியில் அடங்கியவற்றுள் பெரும்பாலன சுவாமிகள் தம்மைச் சிறுபோது தொடங்கி இடைவிடாது சூழ்ந்திருந்த அன்பர்கள் பற்பலரின் பலநாள் வேண்டுகோட்களைத் தொடர்ந்து முழுவதும் மறுக்கமனம் ஒருப்படாத பரம தாக்ஷிண்ய நிலையில் அவரவர் பொருட்டு அப்போதப்போது எழுதி உதவியன ஆகும். கோரிய அன்பர்களுக்கு நேர்முகமாக உபதேசித்த வழி இரண்டொன்று வெளி வந்தன போலும். கிடைத்தவரையில் இவற்றின் விவரங்களும் இப்பகுதியை இவ்வகையில் அச்சிட்டு வெளிப்படுத்துவதில் அடியேனுக்கு நிரஹங்கார நிலையில் நற்றுணையாக நிற்கும் ஆன்ம நேயர்கள் சிற்சிலர்தம் தகைமையும் திருவருட்பா அடக்க விலைப் பதிப்பின் வரலாறு என்பதில் விளக்கமாகக் குறிக்கப்படும். இது நிற்க.

இவை இலக்கியப் பயிற்சி இலக்கணம் தர்க்கம் முதலிய கருவிநூற் பயிற்சி வேதாகமத் தொடக்கமான திருமுறைப் பயிற்சி முதலிய நற்பயிற்சியுடைய சன்மார்க்க சாதகரே பயின்று பெரும்பயன் கொள்ளும் தரத்தனவாயிருப்பினும், என்போல் எவ்வகையிலும் எளியரும் சிவசம்பந்தம் பெற்றுத் தெளிந்த அறிவின் முடிவற்ற பரப்பையும் ஆழத்தையும் இரக்கத்தையும் நுட்பத்தையும் அடக்கத்தையும் ஆனந்தத்தையும் கண்டு வியந்து வியந்து உணர்ந்து உணர்ந்து அஞ்சி உள்ளடங்குவதற்கும், கல்விச் செருக்கால் கண்மூடி அஹங்கரித்திருப்பவர் அச்செருக்கு அறவே ஒழிந்து கண் திறந்து நிரஹங்காரிகளாய் தெய்வ சம்பந்தம் பெற்றுய்வதற்கும் பேருதவியாக நிற்கும் என்பதில் ஒரு சிறிதும் ஐயங்கொள்வதற்கில்லை.

திருவருட் பிரகாச வள்ளலார் திருவடி வாழ்க

உ. ஆசாரிய ஸ்துதி*

க

அகவல்

சீர்வளர் மேருத் தென்பாற் றிசையில்
பேர்வளர் நாவற் பெருந்தீ வத்தொளிர்
தொண்டநன் னாட்டுவாழ் துளுவவே ளாளர்
கண்ட முத்தமிழ்க் கல்விச் சாலைப்
பாலனத் தலைமை பரித்துள வள்ளல்
கோல மிகுத்த கொன்றையம் பதிமால்
உமைகா நதிகுலொத் துங்கன் சைவத்
தமைவுறு மன்ப னலர்குவ ளைத்தார்
மார்பன் முத்தைய வரொதயன் றேனு
கார்தரு நிகர்கொடைக் காவல னுவலர்
பொய்யா மொழியார் புகழ்தமி ழாகரன்
அய்யா சாமிவே ளகத்து விருப்பம்
மருவுறத் தொண்ட மண்டலத் திலக்கணை
வரிவடி வத்து வரையா வண்ணம்
அரிறப நாடி யமைத்தனன் பல்கலை
தெரிதரு முணர்ச்சியன் சிவனருள் புனையும்
மாறுறு வன்பன் மனமா சகன்றோன்
தேறுவா நளத்துத் திகழ்ந்தயன் முதலோர்
தெரிதற் கரிய சிதம்பர நகரிற்
பரிவுறு புலமைப் பண்பன்
இராம லிங்க மெனும்பெய ரோனே.

—காஞ்சிபுரம் மஹாவித்வான் சபாபதி முதலியார்.

---

* பின் வருபவை, தொண்ட மண்டல சதகம் முதன்முதல் 1854 ஜனவரியில் சுவாமிகள் துணையைக் கொண்டு அச்சான போது, அப்பதிப்பை வியந்து கூறிய சாற்றுக் கவிகளாகும்.

௨

விருத்தம்

தொண்டமண் டலத்தைத் தொண்டைமண் டலமாச்
சொலுமவர் புறங்கொடுத் திரியத்
தண்டமி ழியலின் விரித்துரை விளங்கத்
தந்தன னலகில்வே தாந்தத்
தெண்டிரை யறிவாம் பஃறியாற் கடந்து
சித்தமைம் பொறிசெலா தடக்கும்
அண்டரும் புகழ மிராமலிங் கப்பே
ரற்புத ஞானதே சிகனே.

—புதுவை சுப்பராய முதலியார்.

௩

அகவல்

மாமணி துதைந்த காமரு நெடுங்கடற்
றானை யுடுத்த மாநில வரைப்பிடை
யேழனுண் மேதகச் சூழு நாவலந்
தீவிற் கொழிதமிழ் மேவுநன் னாட்டில்
வான்றோய் புகழுறூஉஞ் சான்றோ ருடைத்தென
வவ்வைமூ தாட்டி யாய்ந்துமுற் பணித்த
வெவ்வளங் கட்கு மிருக்கையென் னிலைஇ
மன்னிய தொண்ட மண்டல சதகம்
பன்னிய பெருஞ்சீர்ப் படிக்கா சுப்பெயர்க்
கவிஞன் சொற்றதன் கவினெலா மெளிதிற்
புவியுளோ ருணர்வான் பூத்தகங் கனிவு
வளனுத வுறுபுகழ்த் திருவவே ளாளர்
நீங்கரு நலனெலா மோங்கிய சென்னையின்
மேதக வமைத்த கோதி லியற்றமிழ்ப்
போதக சாலை புரக்கும் புரவலன்

மாங்குயின் மடவார் தேங்குயிற் றிரளைக்
கற்பா னரும்பும் பொற்பார் செங்கிறத்
தடந்தளிர் பொதுளிய நெடுந்தழை யெகின்மிசை
மேவாப் பலகாற் கூவாப் பயில்வுறு
மன்றலந் தண்டலைக் கொன்றையம் பதியின
னதிகுலந் தருமுத் தைய நாபதி
சதுர்பெறு தனயன் றண்குவ ளைத்தா
ரணிமலை மார்பகத் தையா சாமிமா
றருகே னுகமஞ் சாற்றுநாற் பாத
மிருமையுந் தருமவை யியலுற வுஞற்றுநர்க்
கொருபெருந் தலையா யுயர்தரு சிதம்பர
மருவுமா நந்த வல்லி களிக்கு
நிராமயற் பரவு மிராமலிங் கப்பெயர்ப்
புலமையோ னன்கு புரிந்துளங் கொள்ளுபு
தொலைவற நேடிது சொற்பொரு ளுணைக்கி
வழுவா வியலின் வனைந்தீண்
டெழுதா வெழுத்திலிட் டினிதுநல் கினனே.

—புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார்.

௬

விருத்தம்

கலைநிலையுங் கலையுணரும் புலவர்நிலை கண்டான் [ன்
கவிநிலைகண் டான்றமிழின் கடற்கரையைக் கண்டா
சிலையெனவா டகச்சிலம்பைச் சிலைத்திடவே வாங்கிச்
சிலைத்தொருமுப் புரவலியைச் சிரித்தெழுந்த நாதன்
றலையெனவோர்ந் தன்னேன்றன் றிருப்பதத்தில் விரு
சத்தியமாண் பொறைஞாநந் ததுராம லிங்க [ப்புந்
நிலவியநா வலன்றெண்ட மண்டலமென் றேபோ்
நிறுவினன் புநிதரெலா நிச்சயங்கொள் வாரே.

—விருத்தாசலம் தியாகராஜ கவிராஜர்.

உ

திரு அருட்பா மகிமை

திருச்சிற்றம்பலம்

நேரிசை வெண்பா

தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோன் மாந்தர்கள்தம்
உண்ணீர் சிவம்விளங்க ஓங்குவிக்கும்—கண்மணியாம்
நங்கள் இராமலிங்கன் நல்லஅருட் பாமுறையைத்
துங்கமுற மாணு தொழு.

திருச்சிற்றம்பலம்

இது

மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம்

சிதம்பர சுவாமிகளால்

அருளிச் செய்யப்பட்டது.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருஅருட்பா

௬. உரைப் பகுதி

க. ஒழிவிலொடுக்கம்

1. ஒழிவிலொடுக்கப் பாயிர விருத்தி

சிறப்புப் பாயிரம்

நேரிசைவெண்பா

**வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன்
வள்ளன்மலர்த் தாடலைமேல் வைத்துரைத்தா-னுள்ளத்
தழிவிலடுக் குந்தேனை யன்பரெலா முண்ண
வொழிவி லொடுக்கநூ லோர்ந்து.**

இச்செய்யுள் கருதிற் றியாதோவெனின், இந் நூன்முகத் தாசிரியர் பெயர் முதலியவற்றைக் குறித்து நிற்றலிற் சிறப்புப்பாயிர வொழுக்க முணர்த்தல் கருதிற்றென்க.

வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன் - வள்ளன்மலர்த் தாடலைமேல் வைத்து என்பது:

வள்ளலாரென்னுந் திருப்பெயருடையவர், ஞானாசாரிய ரிருபராகிச் சமையவாதிகள் தருக்கச் செருக்குகள் பிறப்பட்டொழியப் பேரருணெறியான் வெற்றிகொண்டு சீகாழி யென்னுந் திருநகர்க்கண்ணே மெய்ந்நெறி விளங்க வீற்றிருந் தருளிய திருஞானசம்பந்தப் பிள்ளையாரது வள்ளற்றன்மையுடைய மலர்போலுந் திருவடிகளைத் தமது நன்முடிக்கண் ஓர் பொன் முடியாக அணிந்து.

ஓர்ந்து - உள்ளத் - தழிவிலடுக் குந்தேனை யன்ப ரெலாமுண்ண-வோழிவி லொடுக்கநூ லுரைத்தான் என்பது: அத்திருவடிகளின் அருட்டுணையால் தத்துவங்க ளனைத்துஞ் சடமென்றோர்ந் துணர்ந்து அவற்றைக் கடந்து தற்காட்சியோடு திருவருட் காட்சியுஞ் செய்து, அங்ஙனம் வாதனையா னசைந் தெழும் போதந் தோற்றுது அதனை யத்திருவருளொளியி னடக்கி ஆண்டு, மேன்மேலு மெழா நின்ற சிவாநந்தத் தேனைத் தாம் அநுபவஞ்செய்த வாறு அதன்கண் அன்புள்ள பக்குவருஞ் செய்தற் பொருட்டு, அச் சிவாநந் தாநுபவ அந்தரங்க மெல்லாம் வெளிப்பட்டு விளங்க,ஒழிவிலொடுக்கமென்று ஓர் உபதேச முறையை யுரைத்தருளினார் என்றவாறு.

வள்ளல் என்னும் பெயர் ஆசிரியர்க்குத் தாம் முன்னிருந்த கிரியாசாரிய நிலைக்கண் அவ்வாசாரிய மரபின் வழித்தாய் வந்த காரண வபிடேகச் சிறப்புப் பெயரென்க. அல்லதூஉம், பின்னர் ஞானாசாரியநிலைக்கண் தமதருண்ஞான நோக்கானியைந்த கண்ணுடைய வென்னுங் காரண விசேடண மேற்கொண்டு நின்ற இவ்வள்ளலென்னும் பெயர் ஈண்

டவ் விசேடணமிசை யெச்ச நிலையினிற்ப நின்ற தெனினும் அமையுமென்க.

இஃது வினை பண்பு முதலிய வடுத்த தொகை நிலைச் சொற்றொடராகாது தொகாநிலையாய்த் தனைத் தொடர் பயனில்லை யண்மைப் பொருளுணர்ச்சி யின்றி யிடையிட்டு நிற்கத் தான் செய்யுண்முதற் கண் தனித் திருந்தமையின் ஆற்றலின்றாலோ வெனின், அற்றன்று: கொடைமடங் குறித்த குணங்காரணமாக வந்த இவ்வள்ளலெனும் பெயர் தன்னுறுப்புகளுட் கொடை குணம் புக ழழகு வள மென்னு நல்வகை குறித்த பல்பொருட் பகுதி யாய வண்மையென்னு முதலுறுப்பான் ஆசிரியர்க் குளவாய அக்கொடை முதலிய அருட்குணங்களைக் குறிப்பிற் புலப்பட விரித்தலிற் பொருளாற்றல் உண்டென்க. அல்லதூஉம், இப்பெயர் உயர் பொருட்கிடனாய் உடனிலைக் கூட்டாய் ஒரு நெறி யசைத்தாய் ஓரினந்தழுவிப் பல்வகைக் குறிப்பிற் படர்ந்து முற்றியையு வண்ணப் பெருஞ் சொல் லாக நிற்றலிற் சொல்லாற்றலும் உண்டென்க. ஆயின், இவ்வாசிரியர் பெயர் இச்செய்யுளின் இடைகடைகளின் ஒன்றினிறுத்தாது முதலடி முதற்சீ ரெதுகைத் தொடைக்க ணிறுத்ததிற் குறித்த தியாதோவெனின், ஒன்றிரண் டெனக் கொண் டுறுமறை யாகம நன்றிருமுடிபி னடுநிலை நடாஅய்ப் புலம்பெறுதத்துவ நியதியிற்போந்து உண்மலந் தெறு மறிஞர் வாழ்த்திப்பரவும் ஆசிரி யர் சன்மார்க்க முதலிய மார்க்க நான்கனுட் டலை மையிற் றலைமையாய வுத்தம சன்மார்க்கத்தின ரென்பது குறித்த தென்க. இங்ஙனம் உத்தம சன்மார்க்கத்தின ரென்பதை யாசிரியர் கூறிய

"இதுவென்றதெல்லாம் பொய் யென்றான் "* என்னுந் திருவெண்பாவாற் காண்க. இஃதின்னும் விரிக்கிற் பெருகும்.

குருராயன் என்பது திருஞானசம்பந்தப் பிள்ளையார்க்குச் சிறப்பிற் சிறப்பாய காரணப் பெயராய் நின்று, ஓதியுணர்ந்து பன்னாட் பல சாதனங்களின் முயன்று முயன்று ஆசாரியத்தன்மை யொருவாறு அரிதிற்கிடைப்பப்பெற்று மோரோர் காலங்களின் அவத்தை வயப்பட்டு மயங்கு மற்றையாசாரியர் போலாது ஓதாமல் வேதாகமாதிகளை முற்று முணர்ந் திறைப்போது மோர் சாதனங்களின் முயன்றதின்றி ஞானாசாரிய வருளிலக்கணங்களனைத்துந் தாமே தம்பால் நிரம்பிநிற்ப அமர்ந்தனரென்பதூஉம், ஓதியுணர்ந்த அவ்வாசாரியர்க்கெல்லாம் அவரவரறிவின்கண் அருளுருவாய் நின்றறிவித்தும் ஆசாரியவுருவாய் வெளிநின்று அனுக்கிரசித்தும் நின்றனரென்பதூஉம், திருநோக்கஞ் செய்தன் முதலிய அறுவகைத் தீக்கையானுமன்றித் தமது திருவுருவைக் காண்டல் நினைத்தன் மாத்திரையே பக்குவரல்லாரும் பக்குவராய்ப் பயன்பெற நின்ற திருவருட் பெருமையரென்பதூஉங் குறித்ததென் றுணர்க. இங்ஙனம் ஓதாமல் வேதாகமாதி யுணர்ந்தமை முதலியவற்றை

---

* க. பொதுவிலுபதேசம் :

சச. இதுவென்ற தெல்லாம் பொய்யென்று னெனக்குப்
பொதுவன்றித் தங்குமிடம் போச்சு—அதுநாங்கா
ணென்று னதன்பே ரிரவைப் பகலாக்கு
மொன்றே பரம சுகமோ.

யாசிரியர் கூறிய "தன்மையு முன்னிலையும்" * என்னுந் திருவெண்பாவாற் காண்க.

அல்லதூஉம், குருராயன் என்பது வாதுவென்ற சம்பந்தன் என்பதற்கு மேனிற்கவைத்த விதப்புக் குறிப்பாற் பிள்ளையார் இவ்வவதாரத்தின் மேனின்ற அவதாரத்தினுங் குமார சற்குருவாய் அரனார்க்கும் அகத்தியனார்க்கும் உபதேசித்தருளிய ஆசாரியத் தலைமையுங் குறித்த தெனக் கொள்க. அருணகிரிநாதர்

தென்னவ னங்கனஞ் சூழ்காத் திரிநக சூலகரத்
தென்னவ னங்கனந் தப்பத நீட்டினன் செல்வமுன்பின்
றென்னவ னங்கநன் னீற்றாற் றிருத்திய தென்னவின்னந்
தென்னவ னங்கனங் கைச்சிலைக் கூனையுந் தீர்த்தருளே.†

என்றதனாற் பிள்ளையார் இவ் வவதாரத்திற்கு மேனின்ற அவதாரத்திற் குமாரசற்குரு வென்பது காண்க. கல்லாடம்

. . . . .
உழன்மதிற் சுட்ட தழனகைப் பெருமான்
வணங்கினின் றேத்தக் குருமொழி வைத்தோய்
. . . . .
குறுமுனி தேற நெடுமறை விரித்தோய்
. . . . .‡

---

* க. பொதுவிலுபதேசம்:
சஉ. தன்மையு முன்னிலையுந் தானுபய படர்க்கையுமா
யென்னொழிவி லின்புமா யின்புமிது—வென்றை
வேதாந்த சித்தாந்த மேபிறவா வீடென்று
றோதாமல் வேதமுணர்ந் தோன்.

† கந்தரந்தாதி, ருசூ. ‡ முருகக் கடவுள் துதி.

சித்தியார்

அருமறையா கமமங்க மருங்கலைநூ றெரிந்த
வகத்தியனுக் கோத்துரைக்கு மருட்குருவாங் குருவை

. . . . *

என்பவைகளால் அரனார்க்கும் அகத்தியனார்க்கும் உபதேசித்த ஆசாரியத் தலைமையை யுணர்க.

ஆயின், **குருவேந்தன்** என்னாது **குருராயன்** என்றது எது குறித்தற்கோவெனின், நான்கன் வேற்றுமையானடுத்து மிக்குயர் நெறிப் பொருண்மையின் வந்த காரகச் சிறப் பொருதலைத் தொடர்மொழிப் பெயராய இக்குருராயனென்பதன்கட் குருவென்பதன் முதனிலையெழுத்துத் தமிழியல் விதிப்படி மொழிக்கு முதலாகியும் ராயனென்பதன் முதனிலை யெழுத்துத் தமிழியல் விதியின்றி ஆரியவியல் விதிப்படி மொழிக்கு முதலாகியும் வந்து இருவகையியலுங் கோடலின், இதனைத் தம் பெயராகவுடைய பிள்ளையாருந் தமிழ்நூல் வடநூலென்னும் இருவகை நூற்கு முரியாரென்பது குறித்தற்கென்க. ஆசிரியர் "மறைப்புலவன் தமிழ்க் குரிசில் சீகாழிச்சம்பந்தன்"† என்றதனால் இருவகை நூற்கு முரியாரென்பது காண்கவென்க. அல்லதூஉம், பொருள் வேறுபடாது சிறிதே வடிவு வேறுபட்டு நின்ற குருராயனென்பது தன்னையுள்ளுநன்றி நோக்கினர்க்கு இலைமறை காய்போல்

---

* பரபக்ஷம், சுப்பிரமணியக் கடவுள் துதி.

† க. பொதுவிலுபதேசம் :
கக. சத்தியநிர் வாணத்தாற் றற்போதத் தாக்கறுத்து
வைத்து வழிகாட்டு மறைப்புலவன்—சுத்தன்
றமிழ்க்குரிசிற் சீகாழிச் சம்பந்த னென்பா
னெமக்கருளிச் செய்த திது.

ஜாவென்னுமுயிர்மெய்யோ டிருந்த தன் முன் வடிவ முட்கொண்டு விளங்கக் காட்டி நிற்கின்றதாகலின், இதனையுடைய பிள்ளையாருந் தமது கடவுட்டன்மை வேறுபடாது உத்தமபுருட வுருவங்கொண்டு நின்ற தம்மை அன்பான் உள்ளுன்றி நோக்கினோர்க்குக் குமாரசற்குரு வென்னும் பெயர் கொண்டு அளவி கந்த சூரியர் உதயம்போன் றொளிவீசுந் தம் முன் னுருவாய தெய்வத்திருவுரு வுட்கொண்டு விளங்கக் காட்டி நின்றனரென்று குறித்தற் கென்பதுமா மென்க. ஆளுடைய பிள்ளையார் புராணம்

மறையவர் திருவே வைதிக நிலையே வளர்ஞானப்
பொறையணி முகிலே புகலியர் புகலே பொருபொன்னித்
துறைபெறு மணியே சுருதியி னொளியே வெளியேவந்
திறையவ னுமையா ளுடனரு டரவெய் தினையென்பார். *

என்று மூவாண்டிற் பிள்ளையார் திருவருள் வடிவைக்கண்டு சீகாழியுள்ளார் வியந்துகூறிய வாறாய விச்செய்யுளால் உள்ளுன்றி நோக்கினர்க்குத் தம் முன்னுருவைக் காட்டி நின்றனரென்பது காண்க வென்க. இனி இன்றியமையாக் காட்டுளதேற் காட் டுவதன்றி மற்றைய விரிக்கிற் பெருகும் என்க.

அல்லதூஉம், குரு என்பத னீற் றுயிர்மெய் யோடு ராயன் என்பதின் முதலுயிர்மெய் புணராப் புணர்க்கையாய் நின்றதாகலின், இங்ஙனம் ஆனந்த வடிவாகிய பிள்ளையாருந் தாங்கொண்டருளிய மானிடத் திருவுருவோடு புணராப் புணர்க்கையாய் நின்றனரெனக் குறித்தற் கென்பதுமா மென்க.

அல்லதூஉம், குறிலிணைக் கெதிர் நெடில் குறி லெண்ணீடாக நிற்பவு மீற்றி னவ்வெண்ணீடின்றி

---

* கூஉ-வது பாட்டு.

யொற்று நிற்பவுந் தொடர்ந்த மொழியாகலிற் பிள்ளையாரும் பக்குவர்க்கு மறைப்பொருளாயும் அதிபக்குவர்க்கு அநுபவப் பொருளாயும் இவ் விரண்டினுங் கலவாது அதீதப் பொருளாயு நின் றனரென்று குறித்தற் கென்பதுமாமெனக. இங் ஙனம் குருராயனென்பதிற கு வ்வென்பது இருள், ரு வ்வென்பது அருள், ராயன் என்பது விளங்கச் செய்கின்றான் பொருளாம். இதனால் கு வ்வென்னு மசுத்தாவத்தையில் நின்றாரை ரு வ்வென்னுஞ் சுத்தாவத்தையில் தாம் நின்றவண்ண நிறுத்துகின் றோர் குரு ஆவர். இச்சுத்தாவத்தைக்கு ஆதார னாகியும் அதீதனாகியும் விளங்கி இவ்வவத்தையி னின்றும் அக் குருவாயினோர் தாழாத வண்ணம் அருள்செய்து நின்று அதீதப் படுத்துகின்றோன் ராயன் ஆவன் ஆகலின், இதனாலும் உணர்கவென்க.

எழுத்ததிப் பல்வகைக் குறிப்பிற் பொரு ணெறிபற்றி நின்ற நோக்கம் செறிவு நுட்பம் இங் கிதம் இன்பம் கம்பீரம் சிறப் புறுதி முதலிய நற் குணந் தழீஇய சொற்புண ரீதென்றே, ஆசிரியரும் "சரிதாதி நான்கினுக்கும்"* என்னுந் திருவெண் பாவி னிடைக்கட் குருராயனென்று இதன் பெரு மை தோன்ற வைத்தனரென்க. இஃது இன்னும் விரிக்கிற் பெருகுமென்க.

---

* உ. சத்திநிபாதத் துத்தமமொழிவு :

க. சரிதாதி நான்கினுக்குஞ் சாலோக மாதி
வருமா றெனக்களித்த வள்ளல்—குருராயன்
ஞானத்திற் பக்குவர்க ளல்வார்க் குபதேச
மானத்தையு நிகழ்த்தினான்.

வாதுவென்ற சம்பந்தன் என்பதிற் பொதுவானே வாதுவென்ற என்றது என்குறித்தோ வெனின், எண்வகைக் குன்றத் தெண்ணாயிரவராய பாயுடுக்கைப் பறிதலைச் சமணர்க ளொருங்கே கூடித் தென்மதுரைக்கட் செந்தமிழ்ப் பாண்டியனை முன்னிட்டுச் செருக்காற் செய்த சுரவாதம் அனல்வாதம் புனல்வாதங்கள் பிற்படத் திருநீற்றானுந் திருவாக்கானும் வென்று திறல்கொண்டமை யன்றியும், பரசமயகோளரி யென்று தானே யொலித்த திருச் சின்னத்தின் தெய்வப் பேரொலி கேட்டு உளம்பொறாது எதிரிட்டு மறித்த போதமங்கைப் புத்தநந்தியின் பொய்த்தருக்கமும் புழுத்தலையும் பொடிபட்டழியவும், பின்னருள்ளதுபோன் றில்லதைப்பற்றிச் சாக்கியக் குழுவுள் தலைவனாய சாரிப் புத்தன் சிற்சிலவகையாற் செய்த சமையவாதந் தலைதடுமாறவும், செந்தமிழ் வேதத் திருமுறை தாங்கி மேம்படும அறிஞரான் வெற்றிகொண் டமையும், திருவோத்தூரின்கண் அரனுக்கிடுபனை யாண்பனையாயிற்றே யென்று அசதியாடிய அமணக்குழூஉக்களின் வாய்வாதங்கள் மண்பட் டொழியத் தாம் திருவாய்மலர்ந்த திருக்கடைக்காப்புள் ஓர் மொழியானே அவ்வாண்பனை பெண்பனையாகச் செய்து விறல் கொண்டமையுங் குறித்ததென்க.

அல்லதூஉம், **வாது** என்ப திலக்கணையாகக் கொண்டு பெருமண நல்லூரின்கண் திருமண நல்விழாவைத் தரிசிப்பான் வந்த மக்கட்கெல்லாந் தொன்றுதொட் டிடைவிடாது உடனிழற்போற் சூழ்ந்துள பிறவிப் பெருவாதுகளனைத்தும் வென்றதூஉம், திருப்பாச்சிலாச் சிராமத்தின்கண் மழவன் மகளார்க்கு அடுத்த முயலக வாதுவென்ற

தூஉம், மருகற்கண் ஓர் வசியனுக்கு அடுத்த விடவாது வென்றதூஉம், இவை முதலியவுங் குறித்ததெனினுமாமென்க. வெற்றி கொண்ட பொருட்டிறன் முதலியவற்றுள் ஒன்றேனுந் தோன்றக் கூறாது இலேசானே வாதுவென்றதென் குறித்தோவெனின், பிறர்க்கு இங்ஙனம் வேறல் தம்மானுந் துணைமையானும் பற்பலநாட் பற்பலவகையின் முயற்சிசெயினு முற்றாதெனினும், பிள்ளையார்க்குச் செந்தமிழ் மொழியுந் திருவாக்கானே ஆண்டாண்டு அவ்வேறன் முற்றியதென்பதுகுறித்தென்க. **வாது** என்பது **குரு ராயன்** என்பதனோடுஞ் **சம்பந்தன்** என்பதனோடுஞ் சாராது நடுநின்றமையின், அத்துவித நெறியினுஞ் சேராது துவிதநெறியினுஞ் சாராது நின்ற பதிதவாதிகளது பயனில் வாதமெனினு மமையுமென்க.

எதிரேற்கப்பட் டெதிர்வினைக் கீழ்ப்பட மேற்கொள் வினையெழுச்சிப் பொருளின் வந்த வெல்லென்னும் பிறவினைப் பகுதியானடுத்த **வென்ற** என்னும் பெயரெச்சஞ் சம்பந்தனென்னும் பெயர் கொண்டுமுடிந்து, இங்ஙனம் வெற்றிகொண்ட பருவம் பிள்ளையார்க்கு இளங்குமாரப் பருவமெனக் குறித்ததென்க. என்னை ? எச்சமென்பது இளஞ் சேய் மேற்றாகலின்.

சம்பந்தன் என்பது பிள்ளையார்க்கு மூவகைவைக் கண் மூவுலகம் புகழப் பொற்பொடு புணர்ந்த அற்புதத் திருப்பெயராகலின், ஆண்டு பெருமானருளப் பிராட்டியா ரளித்த சிவஞானத் தெள்ளமுதருந்தி அச்சிவஞானத்திற்கு உரிமை பூண்டமை குறித்ததென்றுணர்க. ஆயின் சிவஞான சம்பந்தன் என்னாது சம்பந்தனென வைத்த தென்

கொலோவெனின்: சிவஞானமுமன்றிச் சிவானந்த மானந்தாதீதம் என்பவைக்கும் உரிமை பூண்ட தலைமைபற்றியும் அவற்றை உலகுயிர்க்கு இங்ஙனமென்றுணர்த்தி உரிமை செய்விக்கு மாட்சிபற்றியும் அங்ஙனம் வைத்ததென்க.

அல்லதூஉம், சுருங்கச் சொல்லுதல் வனப்பினாற் சம்பந்தனெனவே சிவஞான சம்பந்தனெனவுரிமைச் சிறப்பு வழக்கால் தானே தோன்றுமென வைத்ததெனினுமாமென்க. எங்ஙனமெனின், இந்திரனென்பது இறைமைச் சிறப்பு வழக்கால் தேவேந்திரனையும் உடையானென்பது பொருட் சிறப்பு வழக்கால் பொன்னுடையானையுங் குறிக்குமாகலி னென்க.

வள்ளன் மலர்த் தாள் என்னும் ஒருவகை வனப்பு இருவகைச்சந்தி மூவகைமொழித் தொகைச் சொற்றொடர்க்கண் வள்ளலென்னுங் குணிப்பெயர் வினைமுதற் றொழிற் பயனுறப்படு முடைமைக் குணப்பெயராய் நின்று பிள்ளையாரது திருவடிகள் தம்மை யடைந்தோர்க்கு வரையா தானந்தப் பேற்றை யளித்து அவரைத் தாங்கிக் கோடலைக் குறித்ததென்றுணர்க. அஃதேல் ஆனந்தப் பேற்றைத் தருதற்குந் தாங்கிக் கோடற்குங் கருத்தர் பிள்ளையாரன்றோ? அங்ஙனம் இருப்பத் திருவடிகட்கு இங்ஙனங் கூறல் எங்ஙனமெனில்: திருவடிகள் தம்மை வழிபடுவோர்க்கு இரங்கி இன்பமீதற்பொருட்டு எழுந்தருளும் பிள்ளையாரது படர்ச்சி நிகழ்ச்சிக் கருவியாய் நின்று அவரை யவ் வழிபடுவோர்பால் வருவித்தலானும், ஞான தீக்கை பண்ணுங்கால் அவர் சென்னியிற் சூட்டப்பட்டு ஐக்கியம் வரு

வித்தலானும், நித்தியானந்தப் பேறு வாய்க்கு மாகலின் இங்ஙனமென்க.

அல்லதூஉம், வாட்டமி லருளுங் கோட்டமில் குணனு மசையா நிலையு நசையாமனனும் வெகுளாப்பண்பும் விடாப்பேரன்புஞ் செவ்வியின் மரீஇ எவ்வெவர் எவ்வகை வேட்டனர் அவ்வகை விருப்பொடு குறிப்பின் வரையா தீதல் வள்ளற்றன்மை என்ப வாகலின், இவ் வள்ளற்றன்மையைத் தம்பால் அடைந்தோரிடை யடைவித் தருளுங் கருணை பற்றி யங்ஙனங் கூறியதெனினு மமையுமென்க. அஃதேதல் வள்ளற்றன்மை வழங்கு மலர்போலுந் திருவடி யென்றன்றோ வுரை விரித்தல் வேண்டும், அங்ஙன மின்றி வள்ளற் றன்மையுடைய மலர் போலுந் தாளென விரித்திருக்கின்றதே யெனின்; அங்ஙன மடைவித்தலும் வள்ளற் றன்மையே யாகலினு முடைய தொன்றன்றே யுதவப்படுமாகலினும் இங்ஙனம் விரித்தல் அங்ஙனங் கூறற்கு மமைதியாமென்க.

அல்லதூஉம், அருளின்றி யமையாத வள்ளற்றன்மைக் கவ்வருளே முதற்காரணமா மாகலின், ஆனந்தவடிவாராகிய பிள்ளையார் அவ்வானந்தப் பேற்றை யளிக்கும் வள்ளற்றன்மைக்கு முதற் காரணமாகிய திருவருட் சத்தியே திருவடியென்று குறித்தற்குக் காரணத்தைக் காரியமாக ஈண்டு உபசரித்த தெனினு மமையு மென்க.

அல்லதூஉம், எமது திருவடிகளை வழிபடின் வீட்டின்பமெளிதில் தருவேமென்று பிள்ளையார் விதித்தருளிய அருள் விதிப்படி யறிந்துவழிபடின், அவ்வழிபாட்டான் அவ்வீட்டின்பந் தாப்பெறுதல் உண்மையாகலின்,அவ்வுண்மை நோக்கி யீண்டு

கூறிய தெனினும், பிள்ளையார் திருமேனி முற்றுந் தெய்வத்தன்மை பூரணமாகலின் அதனை யறிவிக்க ஈண்டு கூறியதெனினு மமையுமென்க. திருவடிகட்கு அடையாய வள்ளலென்பதூஉம் ஆசிரியர் பெயராய வள்ளலென்பதூஉம், அடியிணை எதுகைத் தொடையாய் எழுத்தசை சீரொலி பொருளாதிகளா னொற்றுமைகொண்டு நின்று பிள்ளையாரது திருவடித் தீக்கைக்கும் ஆசிரிய ரதிபக்குவத் தன்மைக்கும் உள்ள வொற்றுமைப் பொருத்தம் விளக்கினவென்க.

வள்ளல் என்பது பிள்ளையார்க்குக் காரணச் சிறப்புப் பெயராகக்கொண்டு பொருள் கூறுவாரு முளர். அங்ஙனங்கூறின், இத்துணைச் சிறப்பின்று என்று மறுக்க. என்னெனின், அவயவச்சிறப்பானவயவிக்குணம் வெளிப்படுத்தலே பெரும்பாலு மின்பமாகலினென்க. இதனைப் " போற்றிமாலுன் முகனுங் காணாத புண்டரிகம்"* என்பதனாற்காண்க வென்க. வள்ள மலர்த்தாடெனப் பாடமோதி வள்ளம்போலுங் குவிந்த வாய்மலரென மலர்க் கடையாக வுரைவிரிப்பாருமுளர். அங்ஙனம் விரித்தலின் இத்துணைப் பெரும் பயனின்றென மறுக்க. இங்ஙன மின்னும் விரிக்கிற் பெருகுமென்க.

மலர் என்பது வள்ளற்றன்மையி னருகு வைத்தமையின், ஈண்டு நிறைதலுங் குறைதலுமாயுள்ள நீர்நிலைக்கண் தோன்றியும் அழிந்தும் விரிந்துங் குவிந்தும் வாடியும் நின்று வண்ணமும் நறையும் வாசமுஞ் சிறிதே சிறுபோது கொண்டு பறித்தலாதிய சிறு தொழிற்படு மலர்களை நீக்கி, ஆண்டு

* திருவாசகம், திருவெம்பாவை, உ0.

திரிபிலாத் தெய்வத் தெண்ணீர் நிலைக்கண் ஒழியா மலர்ச்சியும் அழியா மணமும் பொன்னிறப்பொலிவும் இன்னற வொழுக்கு மென்மையுந் தண்மையும் வியப்புறு முருவுங் கண்டோர் கண்கவர் காட்சியும் மாட்சியுங் கொண்டு முக்காலமுங் குன்று மலரைக் குறித்தமை காண்க. என்னெனிற் பிள்ளையார் திருவடிகள் மெய்ஞ்ஞான விளக்கமா யருண்மணம் வீசிப் பொன்னிறம் பொலிந்து ஆனந்த மொழுக்கி மெல்லென வுற்றுத் தண்ணெனக் குளிர்ந்து தரிசிக்கின்றோர் வியப்புறு முருவா யவரது விருப்ப நோக்கம் பரவ என்றும் ஒரு தன்மையவா யிருக்கின்றமையி னென்க. ஆயின் மலர்போலுந்தாளென்று உவமை விரிந்தபடி நிற்றற்கு இடங்கொடாது மலர்த்தாளென்ற தென்னெனின், அத்தெய்வத் திருமலர் தனைக் கண்டோர்க்குச் சிறிய விடயானந்தந் தருதலையன்றித் திருவடிபோற் சிவாநந்தம் தரமாட்டாச் சிறுமை நோக்கியென்க.

அல்லதூஉம், சுபவடிவாய் எவ்வகைச் சுபங்கட்கு முன்னின்றதனை விளங்குறச் செய்வதாய் மகிழ்வுடையோர் யாரு மேற்கொண்டணியப்படுவதாய் நிற்கு நன்மலர் போலுமெனக் கூறினு மமையும்; என்னெனின், திருவடிகள் அருள்வடிவாயானந்தப் பேற்றிற்கு முன்னின் றளிப்பதா யறிவுடையோர் தந்தலைமேற் கொண்டணியப்படுவதாய் நிற்றலினென்க.

அல்லதூஉம், மலரையடைந்த வண்டுகளதனது தேனுண்டு களிகொள்ளுதல் போற் றிருவடிகளை யடைந்தோரும் அருளானந்தம்பெற் றிறுமாத்தலினிங்ஙனங் கூறியதெனினு மமையுமென்க. இதனைத் தொகையுவமை யணியாகக் கூறலின்றி வள்

ளன் மலர்த்தாளெனக் கூட்டி யற்புதத் தொகை யுவமை யணியாகக்கொண்டு பொருள் கூறுவாரு முளர். அவர் கூறுங் கூற்றிற் பெரும்பய னின்றென மறுக்க. இஃதின்னும் விரிக்கிற் பெருகு மென்க.

தாள் என்பது அடிகட்கன்றியும் முயலுதற்கும் உண்ணின்ற பொருள் வெளிப்படாமைக்கும் அதனை வெளிநின்றோ ருட்சென்று கவரப்படா மைக்குங் காப்பாகக் காப்பினிற்குங் கருவிக்கு மணிதற்கணியி னிருகடையு மிணைத்து நிற்கு மிடைப்பூட்டிற்கு மிடனுகி வந்த பலபொருளொரு சொல்லாகலின், திருவடிகள் தம்மை யடைந் தோரை யானந்த நிலையுட் சேர்த்தலும் அங்ஙனஞ் சேர்ந்தோர் மீட்டு மவ்வானந்த நிலையினின்றும் போதவசைவு தோற்றி வெளிப்படாமைக்கும் அவத்தைகளுட் சென்று தாக்கிக் கவரப்படா மைக்குங் காப்பாக அருளுருவா யதன்முன்னிற்ற லுஞ் சிவத்துடன் சீவனை யிடைநின்று கூட்டுவித் தலுங் குறித்தது காண்க. இக்குறிப் புணர்த்த வன்றோ மலர்க்கா லென்னுது மலர்த்தா ளென்ற தென்றுணர்க.

தலைமேல் வைத்து என்பது ஆசிரியர் தம் ஆசாரியராகிய பிள்ளையார் திருவடித்தீக்கை செய் யத் தாம்பெற்றமை குறித்தது காண்க. அஃதேல், வைக்கப்பட்டு எனச் செயப்பாட்டுவினை யெச் சத்தா னிருத்தற்பாலதன்றோ வெனின், ஆசிரி யர்க்கு அத்திருவடிக் கண்ணேயுள்ள பிரியத் தொடர்ச்சியின் பெருமை தோன்ற இங்ஙனம் நின்று அங்ஙனங் குறித்ததென்க. இதற்கு இவ் வாறன்றித் தலைமேற் பாவனையான் வைத்தெனக்

குறித்ததென்று கூறுவாரும் உளராலோவெனின், அவ்வாறு கூறிற் பிள்ளையார் இந்நூலாசிரியர்க்கு ஞானாசாரிய ரென்பதும் இவர் ஞானதீக்கை யுடையாரென்பதும் விளங்குதலின்றி மற்றையாசிரியர் போல் எடுத்தநூ லினிது முடிதற்பொருட்டுப் பாவனையான் வழிபடுகடவுட் பழிச்சின ரென்றிலேசிற் கருதப்படுமாகலின் அங்ஙனங் கூறன் மரபன்றென்க. தலையில் வைத்து என்னாது தலைமேல் வைத்து என்றமையான், மறைமுடிக்கண்ணே வயங்காநின்ற அச்செல்வத் திருவடியின் சீர்மை தோன்றிற் றென்க.

ஓர்ந்து என்பதில் ஓர் என்னும் பிறவினை முதனிலை, அறிவு தனக்கெதிரிட்ட வுணர்ச்சிப் பொருட்கண் எதிரிடுவதுபோன்று எதிரிடா துள்ளாழ்ந்த அப்பொருட்டிற னெதிரிடப் பெயரும் புடைபெயர்ச்சியு மெதிரிட்ட பின்னர் விகற்பியா தெதிர்க்குந்தொறு மெதிரிடப் பெயரும் புடைபெயர்ச்சியுங் கோடலிற் கருவித்திறனுந் தன்றிறனும் அருட்டிறனும் உற்றுணர்ந் தவ்வுணர்ச்சி விகற்பியாது தேறி நின்றமையைக் குறித்தது காண்க. இக்குறிப்புத் தோன்றவன்றே திருவள்ளுவ நாயனாரும் "ஓர்த்துள்ள முள்ள துணரின்"* என்றுரைத் தொன்றறிக.

உள்ளத் தழிவில் என்பதில் உள்ள மென்பதன் பகரப்பதவியிற்றுப் பகுபதப் பொருளி னிடவாகு பெயரா யணுப்பொருட்கண் வந்த வுள்ளென்னும் பகுதி யுட்புறத்தும் அப்போதம் எழுஞ் சிற்றசைவும் பேரசைவுங் குறித்தது காண்க.

---

* திருக்குறள், மெய்யுணர்தல், எ.

உள்ளம் என்பது வாதனையா னுள்ளெழும் போதத்திற் காகுபெயராயது வள்ளலென்பது போன் றெழுகிசையாய் வர வுள்ள வழிவிலென் றது பொருந்திசையாய் வர உள்ளத் தழிவி லென்ற தென்கொலோவெனின்: வேற்றுமை வழி யாகலினும் போதவசைவு சார்பின்றி யமையாமை குறிக்கவேண்டு மாகலினும், சாரியையோடு புணர் த்தி யங்ஙனங் கூறியதென்க. அழிவு என்பதில் அழியென்னும் பொது வினைப் பகுதி முன்னர்த் தோற்ற நிகழ்ச்சிப் பின்னர் ஓர் காலத்தும் ஓரி டத்துமின்றிக் கெடுதற் பெயர்ச்சிக்கண் வந்ததாக லின், அப் போத நிகழ்ச்சி பின்ன ரெக்காலத் தும் உட்புறமென்னு மெவ்விடத்துந் தோற்ற நிகழ்ச்சியின்றி யொடுங்கியவாறு குறித்ததென் றுணர்க. இங்ஙனமன்றி உள்ளத்தழிவி லென்ப தற்கு மனத்தினசைவற்ற விடத்தெனப் பொருள் கூறுவாரு முளராலோவெனின், மனத்தி னசைவு போத வசைவறிற் றானே யறுமாகலினு மஃதறுத விடத் திஃதெவ்வாற்றானு மறுதாகலினும் அது பொருந்தாதென்க. இதனை ஆசிரியர் கூறிய "பற் றறுது போதும் பதறும்" * என்னுந் திருவெண்பா வாற் காண்கவென்க.

அடுக்குந் தேன் என்பதில் அடுக்கு மென்பது அடுத்தலென்னுந் தொழிற் பெயர்க்கண் தல்விகுதி தன்றொற்றுச் சந்தியொடுநீங்க வெதிர்காலப் பெய

---

* ௬. இயோகக்கழற்றி :

௧௫. பற்றறுது போதும் பதறும் பழக்கமதைக்
கற்றலென் றகக் கலக்காது—சற்றேநீ
தீண்டிவிடிற் றன்காண் செனன மரணமது
மாண்டுவிடி னீசிவமா வை.

ரெச்ச விடைநிலை யும்மை ககரமெய்ச் சாரியை யூர்ந்து தன்னொற்றுச் சந்திபெற் றாண்டுநின் றிறையு மிடைப்பாடுதோற் றாது செறிதற் பெயர்ச்சியும், அடுக்கலென் னுந் தொழிற் பெயர்க்கண் அல்விகுதி நீங்க அவ்வெதிர்காலப் பெயரெச்ச விடைநிலை யும்மை விகுதிநீங்க நின்று தன்வரவு கண்டோடிய குற்றுகரமூர்ந்த மெய்க்கண் ணேறி நின் றிறையு மிடைப் போதின்மை படாது பன்முறை மேன் மேலுறுதற் பெயர்ச்சியும் பொருளாகக்கொண்டிரு வகைப்பகுதி யொருவகை யெச்சமாக நிற்றலின், சிறிதும் இடத்தானுங் காலததானும் பிரிவு தோன் றாது செறிந்து பன்முறை மேன்மேலெழும் ஆனந் தத் தேனென்று குறித்த தென் றுணர்க.

உள்ளத்தழிவி லடுப்பது ஆனந்தமாகலிற் றேனென்பதை யுவமக்குறிப்பாற் சிவானந்தத் தேனென்றதென் றுணர்க.

தேனுண்ட வண் டசைவின்றி யத்தேன்மயமா யிருத்தல்போல, ஆனந்தானுபவத்தர் போதவசை வின்றி யிவ்வானந்த மயமா யிருத்தலி னுவமை யாகக் குறிக்கப்பட்டதென் றுணர்க. இதனை யொப்புமைக்கூட்ட மொட்டாதிகளாகக் கூறுவாரு முளராலோவெனின், அவ்வாறு கூறினும் பொருள் சிதையாமையி னொருவா றமையுமென்க. போத வசைவின்கண் தோற்றல் விடயானந்தமாகலில், போத வொழிவின்கட் டோற்றல் சிவானந்தமெனக் குறித்தற்கு உள்ளத் தழிவி லடுக்குந் தே னென்ற தென்றுணர்க. எங்ஙனமெனின், உள்ளத்தழியா மையினடாத்தே னென் றெதிர்மறுக்கப் படுதலி னென்க. மதுரம்பற்றித் தேனை யானந்தத்திற் குவ மை கூறுவாரு முளராலோவெனின், அது நாவிட

யமாயிறைப்போது நிற்றலின் இத்துணைச் சிறப் பின்றென்க.

அன்பரேலா முண்ண வென்பதில், அன்பர் என் பது பொருள் புகழாதியைக் குறித்துப் பயில் வோரை நீக்கிச் சிவானந்தம் எந்நாள் அடைது மென்றிடைவிடா ததனையே விரும்பிப் பயில்வோ ரைக் குறித்ததென் றுணர்க. எலாமென்பது சரி தாதி கன்ம மார்க்கங்களைக் கூறும் பிற நூல்க ளெல்லாம் பருவநோக்காது சாதிசமயாசார விகற் பங்களை நோக்கிச் சிலரை நீக்கியுஞ் சிலரை நிறுவி யும் அதிகரித்தல் போலாது, அச்சாதி சமயாதி களி னுயர்ந்தோர் தாழ்ந்தோ ரியாரேனும் பருவத் தராயின் இந்நூற்கு உரியராவரென்பது குறித்த தென் றுணர்க.

உட்கொள வென்னும் பொரு ளுட் கொண்டு பொருட்டுப் பொருளிற்போந்த உண்ணவென்னும் வினையெச்சம் ஆனந்தாநுபவத்திற்கு விடாத விலக் கணை யாயிற்றென் றுணர்க. என்னையெனில், உண் ணவிற் பசி நீங்கல்போல் ஆனந்தாநுபவத்திற் பசுத்துவ நீங்கலினென்க.

பயன் காரணம் பற்றிவந்த ஒழிவிலோடுக்கநூல் என்பது ஒழிவிலொடுக்க மென்னு நூல் ஒழிவி லொடுக்கந் தருநூலென விருவழிக்கும் பொதுவாய சந்தியான் வந்தமையில், தன்னை வேதாந்தத்திற் கும் சித்தாந்தத்திற்கும் பொதுவென்று குறித்த தென் றுணர்க.

ஒழிவிலோடுக்கநூ லுரைத்தான் என்பதில் வேற் றுமை சாரியை யுருபு முதலியவொன்றும் விரியாது நிற்றலின்,ஞானசாரமன்றிக் கருமாசார மொன்றும் விரியாத விந்நூலி னின்மலத்தன்மை தோன்றிற்

றென்றுணர்க. உரைத்தான் என்பது ஒருவர் மதி
நுட்பத்தால் தாங்கண்டறிந்த மாற்றுயர்ந்த பொன்
னின் றன்மையைப் பிறரு மறிந்து பயன்கோடற்
குக் கட்டளைக்கல்லி னுரைத்துக் காட்டல் போல்,
சுருதி குரு வநுபவத்தாற் றாமநுபவித் தறிந்த
சிவானந்தப் பேற்றின் றன்மையைப் பக்குவருமறி
ந்து பயன்கோடற்பொருட்டு நூற்க ணுரைத்துக்
காட்டினாரென்று குறிப்புறுத்திற் றென்றுணர்க.

என்னெனி னுரையென்பது பொன்னுரையும்
பொருளாகக் கோடலினென்க. உரைத்தான் என்
னும் பயனிலை செயப்படு பொருளினிறுதியி னியை
யாது செயப்படுபொருட்குங் கருவிப் பொருட்கு
மேல் தாடலை மேல்வைத்து என்பத னிறுதி
யிற் றொடர்ந்து நின்றதென்னெனின், சிவஞானத்
தீக்கை யுடையரா யுரைத்தாரென்பது மன்றித்
தமதாசாரியர் திருவடி சான்றாகத் தாங்கண்ட
வநுபவத்தை விளங்க வுரைத்தாரென்பதுங் குறித்
தற்கென்க. என்னை? தாடலைமேல் வைத்து எனவே
சான்றாகவைத்து என்பது தானே யமையுமாகலின்.

தலைமேல் வைத்து என்பதன்பின் நிற்கக் கடவ
தாய ஓர்ந்து என்பது செயப்படு பொருட்பி னிறுதி
நிலையாய் நின்றதென்னெனின், இந்நூல் கற்றோர்க்
குக் கருமங் குறைந்து ஞானமேலிடுதலுண்மை
குறித்தற்கென்க. எங்ஙனமெனின், அவ்வோர்ந்து
என்பது வினைக்குறையாகலினென்க. 'உள்ளத்தழி
விலடுக்குந்தேனை யன்பரெலா முண்ண வொழிவி
லொடுக்க நூலோர்ந் துரைத்தான்' எனக்கொண்டு
போதவொழிவின்கண் அடுப்பதாய வானந்தத்தை
யன்பரெல்லா மநுபவிக்கும் பொருட்டு வேதாகம

முடிபான ஞானநெறியை யாராய்ந்து ஒழிவி லொடுக்கமென் றோர்நூலை யுரைத்தார் எனப் பொருள் கூறுவாருமுளர். அங்ஙனங் கூறின் ஆசி ரியர் பரஞானமுடையா ரென்பது தோற்றாது: அபரஞான முடையாராகப் பொருள்படு மாகலி னும், அபரஞானத்தாற் கூறப்பட்ட நூல் மிகச் சிறவாமையானும்; அது பொருந்தா தென்க.

இந்நூலியற்றற் கேற்ற நற்பொரு ளுடைமையுஞ் சிறப்புப் பாயிர விலக்கணத்துள் ஆக்கியோன் பெயரேயென முதனிறுத்தப்பட்ட நிமித்தகார ணச் சிறப்புடைமையும் இச்செய்யுண் முடிபுக் கெழுவாயாந் தலைமையுடைமையும் பற்றி வள்ள லென முதனிறுத்தியதென்க. இந்நூலாசிரியர்க்கு ஆசாரிய ரிவரென்பது தோன்றற்கு அவ்வள்ள லென்பதன் புடை குருராயனென்பதை நிறுத்திய தென்க. இங்ஙனம் ஆசாரியரென்பவர் பிள்ளையார் என்பது தோன்றற்கு ஞானசம்பந்தனென வைத் தல் வேண்டுமாகலின் அந்த ஞானத்தைக் குறிக் கும் பாசவெற்றியாய 'வாதுவென்ற' வென்பது முன்கூட்டிச் சம்பந்தனென வதன்புடை நிறுத் தியதென்க. இரண்டாம் அடிக்கட் பிள்ளையார் தாள் கள் நிறுத்தத் தொடங்கி முன்னர் அத்தாள்களின் இயற்கை யருளென்று குறிக்க வள்ளலென்றும், அதன்வடிவம் ஆனந்தமென்று குறிக்க மலரென் றும் முறையேவைத்து வள்ளன் மலர்த்தாளென நிறுத்தியதென்க. தாள்களன்றியும் பிள்ளையாரும் அருளியற்கையரே யென்பது குறிக்கச் சம்பந்த னென்னுஞ் சத்தந் தோற்றியவுடன் வள்ளற் சத் தந்தோன்ற நிறுத்தியதென்க. இங்ஙனம் நிறுத்தி யவை சொற்பொருண் முறைநிலை. தாளென்பதற்

குந் தலையென்பதற்குமுள்ள சொற்பொருட் சம்பந்த வின்பம்பற்றித் தாடலையென்றும், தலை யென்பதற்கும் மேலென்பதற்குமுள்ள உரிமை நோக்கம்பற்றித் தலைமேலென்றும், மேலென்னு மிடப்பொருட்கு வைத்தற்றொழில் சிறந்ததுபற்றி மேல் வைத்து என்றும், வைத்து என்பதற்கும் உரைத்தானென்பதற்கும் இறுதியு முதலு மினமாதல்பற்றி வைத்துரைத்தா னென்றும் முறையே நிறுத்தியதென்க. இங்ஙனம் நிறுத்தியவை சொன்முறைநிலையும் சொற்பொருண் முறைநிலையுமாம். இங்ஙனம் முற்று முறைநிலை கூறப்புகின் மிகப் பெருகுமாகலி னொருவாறு காட்டினம். மற்றையவு மிவைகொண்டுணர்க வென்க.

இச்செய்யுட்பொருள் ஆசிரியரது அருளறிவின் மாட்சிமையை வெளிப்படையானுங் குறிப்பானும் விளங்க விரித்தலின் வாகைத்திணையுட் சால்பு முல்லைப் பொருளின்பாற் பட்டதென்க. என்னை? "சால்பு முல்லைப்பொருள்: வான்றோயு மலையன்ன சான்றோர்தஞ்சால்புரைத்தன்று"* என்பவாகலின்.

இச்செய்யுள் தன்னுட் செயப்படு பொருளாய் நின்ற நூற்சிறப்பைத் தன்னுறுப்புக்களானுங் குறிப்பாற் குறித்து நின்ற நன்றேக் குடைச் செய்யுளென் றுணர்க. அங்ஙனங் குறித்தவை யெங்ஙன மெனின் :—

இச்செய்யுள்தான் கலிப்பா வஞ்சிப்பா ஆசிரியப்பா வென்னு முப்பாவினுஞ் சிறந்த வெண்பாவாகலின், இக்குறிப்பால் இந்நூல் சரிதைநூல்

* புறப்பொருள் வெண்பாமாலை, அ. வாகைப்படலம், ௩௪.

கிரியைநூல் யோகநூல் என்னு மூன்றூலினுஞ் சிறந்த ஞானநூல் என்று குறித்தவென்க.

தான் ஈரைஞ்சிட்டிருவகைத் தலை தழீஇ யொழுகிசைச் செப்பலோசையான் வந்ததாகலின், இக்குறிப்பால் இந்நூல் ஆகம முடிவும் வேதமுடிவுங் கூறு மிருவகைநெறியு மொருவகை நெறியாத் தழீஇக் கொண்டிருந்தமை குறித்தவென்க.

தான் ஒன்றடுத்த விரட்டை முப்பத்தா றெழுத் துக்களைக் கொண்டு நிற்றலின், இக் குறிப்பான் இந்நூல் பாசமொன் றடுத்த தத்துவ முப்பத்தா றென்றும் முப்பத்தாறன் றன்மை யிவையென் றும் பகுத்தறிதல் வகையு முணர்த்துவ தெனக் குறித்தவென்க.

தான் நான்கடுத்த முப்பத்தாறசைகளை யசைத்து நிற்றலின், இக்குறிப்பா னிந்நூல் அத்தத்துவ முப் பத்தாறனையும் நியதி களைதன் முறையை யுணர்த் துவதெனக் குறித்தவென்க. அஃதேன் முப்பத் தாறன்மே னான்கடுத்த தென்னெனின், ஆன்ம தத் துவத்தின் வன்மை தோன்றற் கோரசையும், வித் தியா தத்துவத்தின் வலிதோன்றற் கோரசையும், நாததத்துவத்தின் பெருமை தோன்றற் கீரசையு மிருந்தனவென்க.

தான் பதினைந்துசீர் சீர்கொள நிற்றலின், இக் குறிப்பான் இந்நூல் ஆசாரியத்தன்மை சீடத்தன் மை பதித்தன்மை பசுத்தன்மை பாசத்தன்மை உப தேசத்தன்மை பக்குவத்தன்மை யோகநிவர்த்தி கிரியை நிவர்த்தி சரிதை நிவர்த்தி விரத்திவிளக் கம் துறவுத்தன்மை அருளவத்தைத் தன்மை வாதனை மாண்டார் தன்மை நிலையியல்பு என்னு

மிப்பதினைந்தனையுஞ் சீர்பெறக் கொண்டதெனக் குறித்ததென்க.

தானெழுவகைத் தளையி னியைந்ததாகலின், இக் குறிப்பான் இந்நூல் ஆன்மதரிசனம் அருட்டரிச னம் பரைதரிசனம் பரையோகம் பரையோக நீக் கம் போதவொழிவு இன்பப்பேறு என்னு மெழு வகை நிலையும் அறிவிப்பதெனக் குறித்ததென்க.

தான் தனிச்சொல்பெற்று நான்கடியுடன் நடந்த தாகலின், இக்குறிப்பான் இந்நூல் கூறு மொப்பற்ற ஞானமும் சுத்தச்சரிதை சுத்தக்கிரியை சுத்த யோகம் சுத்தஞானம் என நான்கு பாதத்தோடு நடப்பதெனக் குறித்ததென்க.

தான் ஒரூஉத் தொடையொடு முத்தொடையா னியன்றதாகலின், இக்குறிப்பான் இந்நூற் சுருதி குரு அனுபவ மென்னு மூன்று மொத்தியன்ற தெனக் குறித்ததென்க.

அல்லதூஉம், இச்செய்யுளடி நேரடியாய் விதித்த வெழுத்தெல்லையி னிகவாது நிற்றலின், இக்குறிப் பான் இந்நூல் மெய்வீட்டினெறித்தாய் அவ்வீட்டி னெறிக் கெல்லையாய ஞானத்தி னிகவாது நின்ற தெனினுமாமென்க. எல்லை என்னெனின், "பத் தெழுத்தென்ப நேரடிக்களவே, யொத்த நாலெழுத் தொற்றலங்கடையே"* யென்பவென்க. இங்ஙனங் குறித்தற்கன்றே இச்செய்யு ளீற்றடியி னூற்பெய ரை வேறடை கொடாது தனிமையி னிறுத்திய தென்க.

இச்செய்யுள் சிறப்புப் பாயிரத்ததாயி னப்பாயி ரத்திலக்கண மிதனுளிருந்தவா றெங்ஙன மென்

* தொல்காப்பியம், செய்யுளியல், ௩௮.

ணின் : வள்ளலென்பதனா லாசிரியர் பெயரும், குருராயன் வாதுவென்ற சம்பந்தன் வள்ளன் மலர்த்தா டலைமேல் வைத்துரைத்தா னென்பதனான் ஞானாசாரியராகிய பிள்ளையா ரருளுபதேச வழித்தென வுட்கொளப் படுதலின் வழியும், இந்நூற்றொடர் தமிழ்த் தொடராகலி னித் தமிழ் வழங்குநிலமே யிந்நூல் வழங்கு நிலமெனக் கருதப்படுதலின் எல்லையும், ஒழிவிலொடுக்கநூலென்பதனால் நூற்பெயரும், ஒழிவிலொடுக்கமென அன்மொழித் தொகைப் பெயர் மாத்திரையி னில்லாது நூலென விரித்தமையி னிந்நூலுந் தொகை விரியுடையதெனக் கருதப்படுதலின் யாப்பும், உள்ளத்தழிவிலென்பதனாற் கருதிய பொருளும், அன்பரெலாம் உண்ணவென்பதனால் அன்பரெலா முணற்பொருட் டிஃதியற்றுக வென்றுள்ளெழுந் தெதிரிட்டு நின்றது ஆசிரியரது பெருங்கருணையெனக் கருதப்படுதலிற் கேட்போரும், உள்ளத்தழிவிலடுக்குந்தேனென்பதனாற் பயனும் புலப்படுமாகலின்; அவை யிருந்தவா றிங்ஙனமென்க.

இப்பாயிரச் செய்யுள் முற்காலத்தது;

இவ்வுரை சி. இராமலிங்க பிள்ளையவர்களாற்

செய்யப்பட்டது.

1. ஒழிவிலொடுக்கப் பாயிர விருத்தி முற்றிற்று

2. நூற்கும் சிதம்பர சுவாமிகள் உரைக்கும் சுவாமிகள் எழுதிப்பதிப்பித்த குறிப்புகள்

(1) ஒழிவிலொடுக்க நூலின் உரை பாடத்திற் சிற்சில இடங்களிலுள்ள மறைச்சொற் பொருட்குத் தெளிசொற் பொருள்

பவுரிக்கூத்து-வலமிடமாகச்சூழ்ந்தாடுங் கூத்து. 1

குறுமன்னியர்—சிலரா லறிந்து மதிக்கப்படும் பிரபுத்துவ முடையோர். 1

மகாமன்னியன்—பலராலுமறிந்து மதிக்கப்படும் பிரபுத்துவ முடையோன். 1

பிரளயாகலர்—மும்மலங்களு ளொருமல நீத்தோர், அவர் பிரமன் முதலானோர். 2

ஞாதுரு-காண்பான், *ஞானம்*-காட்சி, *ஞேயம்*-காணப்பட்டது. 3

சூக்குமைவாக்கு-வார்த்தை தோன்றற்கு முதற் காரணமா யுந்தியிலே நாதவடிவாய் நிற்குமொரு சத்தி. 4

பகடிக்கூத்து—உள்ளதுபோன் றில்லாததைக் காட்டும் வெளிவேடம் அல்லது அகசியக்கூத்து. 4

---

1 க. பொதுவிலுபதேசம் :
க. "வேதாகமப் பவுரிவீசும்" என்னும் திருவெண்பா.

2 க. பொதுவிலுபதேசம்:
க. "வேதாகமப் பவுரிவீசும்" என்னும திருவெண்பா. இந்தக் குறிப்பின் விளக்கததை 33ஆவது பக்கததிற் காண்க.

3 ,, உ. "தன்னிழப்பை எனன கறுச சாதிப்பான" என்னும் திருவெண்பா.

4 ,, ஈ. "கூலித் தொழிலாளா" என்னும் திருவெண்பா.

பரஞானம்-அநுபவஞானம், அபரஞானம்-வாசக ஞானம். 5

அரிப்பாளன்—குப்பை முதலிய விடங்களிற் பொன் முதலிய அரித்தெடுக்கின்றோன். 6

கொழுந்தாடை—கரும்பி னுனித்தழை. 6

சாயாபுருடன்—தந்நிழலைப் பார்த்துப்பின் ஆகாயத்தை யுற்று நோக்குகின்றார்க்கு அவ்வாகாயத்தின்கட் புருட வடிவம்போற் றோன்றும் அந்நிழற் காட்சி. 7

பைமறித்தல்—உள்ளிருந்த சரக்கு வெளிப்படப் பை வாய்தொட்டு உட்புறமேற்பட்டும் வெளிப்புற முட்பட்டு மடங்கமடக்கல். 8

கிண்கிணி வாய்ச்செய்தலர்தல் - வட்ட வடிவாக முகங்கொண்டு மலர்தல். 9

பஃறுளை—பலதுளை. 10

பற்ற—பார்க்கிலும். 11

அருகித்தோற்றல்—சுருங்கித் தோற்றல். 12

பிரேரகம்—காரியப்படுத்தல். 13

பிரதிபலிதம்—எதிர்விம்பம். 14

---

5 ௧. பொதுவினுபதேசம் :
௪. "குட்டித் திரட்காரடி" எனனும் திருவெண்பா.
6 ,, ௫. "குருட்டரிப்பனாகும" ,,
7 ,, ௰. "சாயா புருடனைப்போல்" ,,
8 ,, ௰௨. "தாக்கற்ற பூரணதில்" ,,
9 ,, ௰௬. "ஆலிங்கனததிலே" ,,
10 ,, ௨௧. "முலையுண்ணி" ,,
11 ,, ௪௨. "தன்மையு முன்னிலையும்" ,,
12 ,, ௪௬. "மலையேறிப் போவாரக்கு" ,,
13 ,, ௫௨. "சத்தாதி தத்துவம்போய்" ,,
14 ,, ௫௪. "தத்துவத்தா ால்லார்" ,,

சகசமலம்—அனாதியாகியமலம். 15

கடா—வினா. 16

விட்டிசையா திசைத்தல்—நடுவே நில்லாமலொலித்தல். 17

நக்கினம்—நிருவாணம். 18

தேறிட்ட நீர்—தேற்றாங் கொட்டையாற் றெளிவிக்கப்பட்ட நீர். 19

கவுசனை—யாதாயினுமோர் பொருளை யுள் வைத்து மறைய மேன்மூடிக் கட்டு மேற்கட்டு. 20

சுழல்விறிசு—கொள்ளி வட்டம்போற் சுற்றுவதாய ஒருவகை மருத்துவாணம். இததேயத் திக்காலத்தில் சுழல்புறிசு என்று வழங்குகின்றது. 21

அநன்னியம்—அன்னியமல்லாமை. 22

நெற்பொலி—தூற்றுநெல். 23

தும்புசெறித்து—தும்பு அவிழ்த்து. 24

அநுபவிக்கச் சிதைக்கும்—அநுபவிக்க வறிகின்றபோதும். 25

---

15 ௧. பொதுவிலுபதேசம் :
௫௬. "நாயேறி வீழ்ந்தென்" என்னும் திருவெணபா.

16 ௨. சத்திநிபாததரத்தம ரொழிவு :
௨. "கினனரியைத் தொட்டவாபோல்" எனனும் திருவெணபா.

17 ,, ௩. "சும்மாதே பார்த்திருக்க" என்னும் திருவெண்பா.

18 ,, ௪. "முலைமுதிர" ,,

19 ,, ௰௭. "கல்லை யுருவாக்கும்" ,,

20 ௩. யோகக் கழற்றி :
௮. "உபதேசப் பித்தோ" என்னும் திருவெண்பா.

21 ,, ௰௪. "கூட்டிற குரங்கை" ,,

22 ,, ௰௮. "மணணை மலையை" ,,

23 ,, ௨௨. "பழக்கங் கொடியதுபாா" ,,

24 ,, ௨௩. "கட்டியநாண் விட்டாலும்" ,,

25 ,, ௩௰. "மறப்பு நினைப்பும்" ,,

அவித்தியாகதம்—அஞ்ஞான மயம். 26

முடிகளசமுத்தி : முடி - சிரசு, களசம் - நீக்கம், முத்தி - வீடு. 27

வாசியென்ற வார்த்தை—இது செய்க விடுக வென்று நியாயமாகக் கூறும் வார்த்தை. 28

வியாபகம்—கலப்பு, வியாத்தி—கலக்கப்படுவது. 29

விசர்க்கரித்தல்—விடுத்தல். 30

வெறு வீடர்—அநுபவிப்பதற் கில்லாமையால் விட்டோர் போன் றிருப்போர். 30-1

கறண்டல்—பற்களால் நெருக்கிப் புறண்டுதல். 30-1

சேட்டித்தல்—தொழிற் படுத்தல் அல்லது குணக்கேடான தொழில் விளைத்தல். 31

சிங்கி—விலங்கு 32

நாங்கூழ்-நாகப்பூச்சி யென்னு மோர் கிருமி. 33

விகளம்—மௌனம். 33

---

26 நி. சரிதைக் கழற்றி :
 40. "கயிற்றரவும்" என்னும் திருவெண்பா.

27 சு. விரத்தி விளக்கம் :
 2. "அறுசமயத்தோர்க்கும்" என்னும் திருவெண்பா.

28 ,, 10. "வாசிக்குச் சாவீரர்" ,,

29 ,, 8. "அறிந்துபற்றி நின்று" ,,

30 ,, 9. "கூரிருளின மின்மினி" ,,

30-1 எ. துறவு :
 10. "பட்டினத்துப் பிள்ளையினை" என்னும் திருவெண்பா.

31 ,, 11. "குரங்கிற்றுணிச்சி" ,,

32 ,, 12. "அங்கக்காரன்றுதிப்பும்" ,,

33 அ. அருளவத்தைத் தன்மை :
 நி. "கருவி கழல" என்னும் திருவெண்பா.

மடலெடுப்பு—பனைமடலாற் குதிரை செய்தேறுதல். [34]

ஐவரரசர்—பாண்டு மக்களாகிய தருமன் முதலிய ஐவர். [35]

மந்தகாசப் பிரகாசம்—புன்னகைப் பிரகாசம். [36]

---

(2) அடிக் குறிப்புகள்

"உள்ளவுரை நாயேற் குறச் செய்யும்" என்று பாடமோதலு முண்டு. [1]

ஈண்டு - இத்தோத்திரச் செய்யுட்கள் உரையாசிரியரால் இந்நூற்கு உரை இனிது முடிதற் பொருட்டு இயற்றப்பட்டன. [2]

பரிபூரணமே பரையாய் என்பதைப் பரிபூரணப் பரையேயாய் என்று கூட்டுக.[3]

இங்ஙனம் செய்யுட்கட் டாறுமென்னு மொருமையை யுரைக்கட் டாமாகி யெனப் பன்மையாகக் கூறியது என்னை எனின், பிள்ளையார் என்னும் திருவருட் பெயரின் பெருமை நோக்கி என்க. இவ்வாறு கூறியவற்றிற்கெல்லாம் விதி யிங்ஙனமென்றுணர்க.[4]

---

34 ௮. அருளவத்தைத தன்மை :
௯ "நடை தவார்ந்து" எனனும் திருவெண்பா.
35 ,, ௧௮. "சூலையும பேயும்" ,,
36 ,, ௫௮. "உருகு பரமசுக" ,,
1 காப்புச் செய்யுட்கள :
௫. "வள்ளலுரைத்த...தாள" என்னும் திருவெண்பா.
2 ,, இதன் திருத்தம் ஒன்றை "அமைத்துக்கொளல்" என்ற பிரிவிற் சாண்க.
3 ௧. பொதுவிலுபதேசம் :
௪௧. "அருளாலே தம்மை" என்னும் திருவெண்பா.
4 ,, ௪௨. "தன்மையு முன்னிலையும்" ,,

கதறல் கதற்றல் என விகாரமாயிற்று.5

அகந்தை யென்பது அந்தை யென்றிடைக் குறையாயிற்று.6

செட்டையாற் பரிசித்தன் முதலியன வவ்வம் முட்டைகடத்தம் பருவமடைதற் கென்றறிக.7

(3) அமைத்துக்கோளல்

காப்பின்கண் "ஈண்டு-இத்தோத்திரச் செய்யுட்கள்" என்றவையுள் ஆனைமுக னறுமுக னென்னுஞ் செய்யுளை யொழித்து வேறு கொள்க. 1

இக்கதையை யிப்பொருளுக் கென்றதை அக்கதை யிப்பொருளுக் கெனக் கொள்க. 2 இங்ஙனமின்னும் சில விடங்களிலுள: அவற்றையு மங்ஙனங் கொள்க.

மாறுபாடாய்க் கருதி என்பதில் செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சமாய ஆய் என்பதை செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சமாய ஆகவெனக்கொள்க. 2 இங்ஙனம் இன்னும் சில இடங்களிலுள: அவற்றையு மங்ஙனங்கொள்க.

வடசொற்களுள் ஞாநம் - ஞானம், ஆநந்தம் - ஆனந்தம் எனத் தமிழிற்குப் பொதுவுஞ் சிறப்புமாய நகர னகரங்கள் சிற்சிலவிடங்களில் விரவி

---

5 க. பொதுவிலுபதேசம்:
ருக. "நினைப்பு மறப்பறுத்து" என்னும் திருவெண்பா.
6 ,, ருரு. "சிந்தை பயமிலச்சை" ,,
7 உ. சததிநிபாதத் துத்தம ரொழிவு:
மரு. "பரிசித்துஞ் சிந்தித்தும்" என்னும் திருவெண்பா.
1 காப்புச் செய்யுட்களைக் குறித்த அடிக் குறிப்பு.
2 க. பொதுவிலுபதேசம்:
ச. "குட்டித் திரட்கரடி" என்னும் திருவெண்பா.

நின்றன. அவற்றைத் தமிழ்ச் சிறப்பு வழக்கு நோக்கி யமைத்துக் கொள்க. 3

இருப்பதுமன்றி அங்ஙன நின்று கேட்குமொழி பிரமோபதேச மொழியாகலி னென்பதும் சில வுரை பாடங்களி னுண்டு. 4

"ஞானத்திலின்பை நசிப்பித்து நானதுவா மூன த்தை யாரொழிவிப்பார்" என்பதற்கு, சுவாநுபவத் தான் ஞானநந்தத்தைப் பெற்று அதனை விடயச் சேற்றாற் கெடுப்பித்து விடயச்சேற்றி லழுந்தி நின்று அவ்வாநநதத்தை யடைதற் கேதுவாய்க் கூறும் ஞாநசாத்திரங்களைக் கேட்டறிந்த மாத்தி ரத்தினால் அவ் வாநந்தமய னு னென்று கூறும் என் பது சிலவுரை பாடங்களிலுண்டு : இது உரை வேறுபாடு. 5

2. குறிப்புகள் முடிந்தன.

---

3 க. பொதுவிலுபதேசம் :
 ரு. " குருட்டறிப்ப ரைக்கும் ", கம. "சாயா புருடனைப் போல்" என்னும் திருவெண்பாக்கள் முதலியன.

4 ,, அ. " தேனுண் டுமிழும் " என்னும் திருவெண்பா.

5 உ. சத்திநிபாதத் துத்தம ரொழிவு :
 சு. " வாதிவடத்தினமும் " என்னும் திருவெண்பா.

அநுபந்தம்

26-ம் பக்கத்தில் கண்ட "பிரளயாகலர்-மும்மலங்களுள் ஒருமல நீத்தோர், அவர் பிரமன் முதலானோர்" என்னும் தெளிசொற் பொருள் விளக்கம்

பிரளயாகலர் இருமலமுடைய உருத்திரர்கள் என்றும், சகலராவார் மும்மலமுடையராகிய பிரம விட்டுணுமுதற் கிருமி ஈறாகவுள்ள உயிர்கள் என்றும் *ஒரு சாரார் கூறலும், அதை ஆராயும் முகத்தான் மேற்கண்ட தெளி சொற் பொருளின் நுண்கருத்தை சுவாமிகளின் முதன் மாணாக்கராகிய தொழூவூர் வேலாயுத முதலியார் அவர்கள் விளக்கிக் காட்டிய வாசகம் வருமாறு :—*

பிரளயாகலர் இருமலமுடையார் ஆவார் எனில், இருமலம் உடைமையும் பிரளயாகலர் அவற்றை உடையராவாருமாயின், இருமலத்தையும் புசித்தற்கு உடைமையாகத் தேடியபின் உடையராவாரெனக் கூறியவாறாயிற்று. எனவே இருமலத்தைத் தேடுவாரெவரோ அவர்தாம் பிரளயாகலர் எனப்பட்டவர் என்று ஆம். என்னை? ஆவாரென ஆக்கவினை எதிர்காலம்பற்றி நிற்றலானும், உடையார் என்பது முக்காலத்திற்கும் பொதுவாகிய குறிப்புவினைமுற்று ஆதலானும், அது வினையாலணையும் பெயராகி அப்பெயர் மற்றொரு பெயரோடு ஒட்டுமாறு விளக்கும் பண்பு வாசகமாய் இறந்தகாலப் பெயரெச்சம் அடுத்து நிற்றலானும் என்க. அங்ஙனமாதலின், எம்மலத்தையும் ஒழிக்க முயல்வதே சிறப்பு எனவும், அங்ஙனம் ஒழித்தாரே புவனேசராகிய உருத்திர ராதியர் எனவும், வேதாகமங்கள்கூறி முறையிடவும், அதனை நோக்காது ஒழிக்கத்தக்க இருமலத்தையும் புசித்தற்கு உடைமையாகத் தேடுவார் உருத்திரர் என்று பொருள்படப் பிரளயாகலராவார் இருமலமுடைய

ராகிய உருத்திரர்களென்று கூறுவது மாறுகொளக்கூறல் முதலிய குற்றங்களுக்கு இடனாய் ஆற்றல் முதலிய கெட்டு நின்றது. இனி...அவ்வாசகத்தை நினைப்பினும் பெரும் பாதகங்களுள்ளும் பெரும்பாதகம் விளையும் என்க.

இங்ஙனமாகலி னன்றே மலம் துன்பஞ் செய்வன என்றும, அவை ஒழித்தற்பாலனவும் பிறவும் என்றும் யாவர்க்கும் பொருள் கிடைக்கப் பிள்ளையவர்கள் அம்மல மூன்றனுள் ஒன்று ஒழித்தார் என்றனர். ஆகவே, இனி இரண்டொழிப்பார் என்பது கூறாதமையும். ஆகலின் பிள்ளையவர்கள் கூறியதாகிய "மும்மலங்களுள் ஒரு மலநீத்தோர் பிரளயாகலர் - அவர் பிரமன் முதலானோர்" என்றதுவே "சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல் நவின்றோர்க்கினிமை நன்மொழிபுணர்த்தல் ஓசையுடைமை யாழமுடைத்தாதல் முறையின்வைப்பே உலகமலையாமை விழுமியது பயத்தல் விளங்குதாரணத்ததாகுதல்"* என்னும் பத்தழகினுக்கும் உதாரணமாய் நின்றதோர் வாசகமென்க...

ஆயின், பிள்ளையவர்கள் பிரமன் முதலாயினோரைப் பிரளயாகலர் எனக் கூறினர். அக்கருத்து என்னையெனில்: பிரளயாகலர் மூவகையாருள் ஒருவர் மலகன்ம பரிபாகராய் அவ்வண்ணமே இறை திருவருளான் முத்தி அடைவர் எனவும்; (மற்றொரு வகையார் (?)) அபக்குவ மலகன்ம சகிதராய் புரியட்டகம் பெற்றனராயினும், அவருட் சிறந்தார் மந்திரேசுரராய் புவனாதிபதித்துவம் அடைந்து, ககனேசாதி அஷ்ட மண்டலிகளாய்க் கலாதத்துவத்தினும் குரோதேசாதி எண்மராய்க் குணதத்துவ மஸ்தகத்திலும் வீரேச ஸ்ரீகண்டேசராய்க் குணதத்துவத்தின் கீழும் பிரமாண்டத்தின்மேலும் சதருத்திரராய்ப் பிரமாண்டாதாரர்களுமாய் வசிப்பர்—இவர் அதிகாரபோகார்த்தம் தூலமடைந்து சகலர் போல்வர் எனவும்; மற்றொரு வகையார் புரியட்டகமுடையாராய்க் கன்மானு

* நன்னூல், பொதுப்பாயிரம், கந.

குணயோனிகளை அடைவர் எனவும்; முற்கூறிய சதருத்திரர் பிரமன் முதலானோர் எனவும் கபாலீசன் முதலானோர் எனவும்—**மூலாகம** பேதங்கள் கூறுதலின், அவ்விரிவகையாமாறு விளங்கப் பிள்ளையவர்கள் சுருங்கக் கூறுதல் என்னும் அழகாதி பெறக் கூறியவாறென்க.

இக்கருத்தினை போஜதேவர் அருளிச்செய்த **தத்துவப் பிரகாசிகை**, அகோரசிவாசாரியர் அருளிச்செய்த **அதன் உரை**, காமிகபேதமான **மிருகேந்திரம், சித்தாந்தசேகரம், திருமந்திரமாலை** முதலியவற்றுள்ளுங் காண்க. இனி விஞ்ஞானகலர் சகலர் இலக்கணமும் பிறவும் இடம்பெற்றுழி விரிப்பாம்.

இனிச் **சித்தாந்த சேகரத்தில்** அஷ்டாதச சதவுருத்திரர் திருநாமங் கூறுமிடத்து,

> கபாலீசோஹ்யஜோ புத்நோ வஜ்ரதேஹப்ரமர்தந:
> விபூதிரவ்யயசசாஸ்தா || 1

என்று தொடங்கி,

> அதபூபூதகாலாகநி ருத்ரோஹாடக ஏவச
> கூஷ்மாண்டஜசச ஸத்யசச ப்ரஹமவிஷ்ணுச்ச ருத்ரக: || '' 2

என்று முடித்தவற்றுள் பிரமன் விஷ்ணு என்பவர்கள்

---

1 𑌕𑌪𑌾𑌲𑍀𑌶𑍋𑌹𑍍𑌯𑌜𑍋𑌬𑍁𑌧𑍍𑌨𑍋
𑌵𑌜𑍍𑌰𑌦𑍇𑌹𑌃𑌪𑍍𑌰𑌮𑌰𑍍𑌦𑌨𑌃।
𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌰𑌵𑍍𑌯𑌯𑌃𑌶𑌾𑌸𑍍𑌤𑌾॥

2 𑌅𑌥𑌭𑍂𑌤𑌕𑌾𑌲𑌾𑌗𑍍𑌨𑌿
𑌰𑍁𑌦𑍍𑌰𑍋𑌹𑌾𑌟𑌕𑌏𑌵𑌚।
𑌕𑍂𑌷𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑌜𑌶𑍍𑌚𑌸𑌤𑍍𑌯𑌶𑍍𑌚
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌶𑍍𑌚𑌰𑍁𑌦𑍍𑌰𑌕𑌃॥

உருத்திர பேதமேயாய் அடங்குவர் என்பதும் பிரளயாகலரே என்பதுங் காண்க.

ஆயின் பிள்ளையவர்களுக்குப் பிரளயாகலர் என்பவர் உருத்திரரே என்பது கருத்தாய் அவர் பெயர் விளங்கக்கூறுவது வேண்டினாராயின், கபாலீசன் முதலானோர் எனக் கூறாது பிரமன் முதலானோர் என மயங்கக் கூறுவானேன் எனில்; அற்றன்று: பிருதிவி தத்துவத்திலுள்ள புவனபேத நூற்றெட்டினுள் அண்டத்துட்புறத்துள்ள புவனம் ஆறனுக்குந் தலைவராவாருள் பாதலத்தில் காலாக்கினி யுருத்திரர் கூர்மாண்டர் ஆடகேசுரருமாகிய மூவர் போக, பூமிக்கு மேல் ஆகாயத்திலுள்ள மூன்று புவனத் தலைவராகிய பிரமா விஷ்ணு ருத்திரருள் முதலாதல்நோக்கி பிரமன் முதலானோர் எனக் கூறினர் என்க. இங்ஙனம் **மூலாகம வுபாகம** **பத்ததி** முதலியவற்றுள்ளும் உருத்திரர் பேதங்களைக் கூறுமிடத்து ஒவ்வோர் காரணம்பற்றிப் பிரசித்திப்பொருளை அந்தமாகவும் ஆதியாகவும் கூறுதல் வழக்காதல் நோக்கி பிரமன் முதலானோர் எனக் கூறியுள்ளனவுங்காண்க. இவற்றை விரிப்பிற் பெருகும்.

இங்ஙனம் பிரளயாகலர் புரியட்டக சரீரிகளாய் அவருளொருசாரர் கன்மானுகுண யோனிகளுறுவரென ஆகமங் கூறிற்றேல், புரியட்டகம் மாயாகாரிய தத்துவக் கூட்டத்தானியன்ற தனுவாதலாலும், சகலர் போலத் தூல தேகமும் பெறுதலாலும், அவரை மாயா பாசம் தொலைத்தவரென எங்ஙனங் கூறுவது ?...இனி, இக்கருத்தை உணராது, பிரமன் விட்டுணுமுதல் கிருமி ஈறுகவுள்ள உயிர்கள் மும்மலமுடையார் என்று கூறினரே எனின், (அது)...ஆகமவிதிகளைப் பெற்று அநுபவத்தாற் றெரிந்து கூறியவாறு அன்று. ஆதலின் அது பிள்ளையவர்கள் உரையை மறுத்தல் ஆற்றாதென்க.

இனி மறுத்தல் ஆற்றுதென்ற அம்முறையைச் சொல் வகையானும் பொருள்வகையானும் விரிக்கின்றாம். என்னை? (அவர்) " சகலர் மும்மலமுடையராகிய பிரமன் விட்டுணு முதல் கிருமி யீறாகவுள்ள உயிர்கள்" எனக் கூறியதால், மற்றைய விஞ்ஞானகலர் பிரளயாகலர் உயிர்த்தொகையில் உள்ளாரன்று, முத்தர் என்றவாறாயிற்று. அங்ஙனம் முத்தராகவே அவர்க்கு ஒரு மலமும் உள்ளது எனபது பொருந்தாது. இங்ஙனம் உயிர் முத்தர் என்பதன்பொருளும் ஓர்ந்துணர்க. ஆகவே, அது " **மூவகை யாருயிர்வர்க்கம்** " என்றதனோடு முரணுகின்றது.

அல்லதூஉம், ஒரு சாதிவகைப் பல பண்புப் பெயர்ப் பொருளவற்றின் ஆதியந்தம் கூறவந்தவிடத்து, ஆதிக்கு அச்சாதி இருமைப் பண்புப்பெயர்ப் பொருளையும் அந்தத்திற்கு அச்சாதிப் பண்புப்பெயரின் ஒரு பொருளையும் கூறலமையாது.

அங்ஙனமன்று; பல பண்பு என்றமையான், தொழில் வேற்றுமையால் சிறப்பியற்பண்பு பொதுவியற்பண்பு இழிவியற்பண்பு எனப்பொதுவகையினும் பண்பு மூவகைப் படுமாதலின், அம்மூவகையுங் குறித்தற்கு ஆதியந்தங் குறித்து வேறுபிரித்துப் பொதுவியற்பண்பி சிறப்பியற் பண்பியைச்சேர்த்து முதலென அடக்கி இழிவியற்பண்பியை ஈற்றினடக்கி அங்ஙனங் கூறியவாறெனில், அற்றன்று. அக்கூற்று சாதி நுகர்ச்சி ஒற்றுமையின் கண்ணதன்றிப் பண்பின்பாலதன்று. ஆகலான் நுகர்ச்சி ஒற்றுமையுடைய சாதியை விரிக்க வந்தவிடத்துப் பண்பு வகைப்பாடு பற்றிக் கூறவேண்டுவதின்று. விளங்குதற் கெனின், சிறப்பியற்பண்பியையும் இழிவியற் பண்பியையும் முதலுங் கடையுமாகக் குறித்தாற்போதும். அதுவே மரபுமாம். ஆகவே 'விட்டுணு முதல் கிருமி ஈறாக 'வெனில் பொது

வியற் பண்பியாகிய பிரமனைக் கூறவேண்டா. இடையிற் றானே போதரும். அங்ஙனமன்றிப் பண்பையுடைய பெயரைப் பிரித்துரைத்து முதலென ஓர் எண்ணுப் பண்பியாக அடக்குதல் பண்புப் பொதுமை கூறுமுகத்து வழூஉ: எண்ணுப் பண்பின் ஓரியற் பொதுப்பண்பி சேர்வதல்லது ஓரியல் வேற்றுமைப் பண்பிகள் தம்முட்சேராவாமாகலின். அற்றேல், பிரம விட்டுணுக்கள் ஓரியற் பொதுப்பண்பி யாகாரோவெனில், ஆகார்; நாமரூபக்கிரியை முழுவதும் வேற்றுமைப்படுதலான் என்க.

அற்றேல், பிள்ளையவர்கள் "பிரமன் முதலானோர்" எனக் கூறுதலின், அவன்மேற் சிறந்த விட்டுணுவும் உயிரெனக்கூறி மறுத்தற்குப் போலும் அங்ஙனங் கூறியதெனில், ஆண்டும் "விட்டுணு முதல் கிருமி ஈறாகிய" எனக் கூறினமையும்; "பிரமன் விட்டுணுமுதல்" என்பதும் வழூவேயாம் என்க. ஆகலின் சொல்வகையாலும் சொற்புணர்த்த வகையாலும், ஒருசார் பொருள் வகையாலும், அவ்வாசகம் வழூவேயாம் என்க. இதனை இன்னும் விரிக்கிற்பெருகும்.

இனி, பொருள் முழு வகையினுல் ஆராயினும் பொருந்தாது. என்னை? அவ்வொழிவிலொடுக்கத்து "வேதாகமப் பவுரி வீசும்" என்ற குருதோத்திர முதற்றிருவெண்பா* "கருணைபொழிவான் எடுத்தகை" என்றவிடத்து, பிள்ளையார் உபதேசமுன்ற முதலியவைகளைத் தெரித்தற்கு எடுத்துக்காட்ட, ஆண்டு எழுந்தருளியிருந்த (?) "தோடுடைய

* பொதுவினுபதேசம்:

வேதா கமப்பவுரி வீசுங் களாசநிலை
யாதார வெற்பி லபிடேகம்—போதத்
திருளிலெழு பாநு வெனதொழிவி லின்பக்
கருணைபொழி வானெடுத்த கை.

செவியன்" என்னுந் திருக்கடைக் காப்பின் திருவுளக்கிடையை விரித்து "பிரளயாகலர்க்கு அநுக்கிரகித்தலும் இது"* (என்றதனுலும் (?)); அங்ஙனம் மெய்ப்பொருள் வந்த கோலம் குருவடிவு என்பது

தோடு கூற்றுப் பித்தா மூன்றும்
பீடுடைத் தேசிகன் பேரரு ளாகும்
. . . †

என்றதனுல் பெறப்படுதலானும்; ஆண்டு எழுந்தருளிய குருவடிவத்தைப் பிரமன் விண்டு முதலாயினோர் ஆண்டும் கைலை முதலிய பிறாண்டும் தரிசித்ததாக அப்புராணமும் பிற புராணமும் கூறுதலினுலும்; அவர் நீங்கிய கீடாதியா யுள்ள மற்றைச் சகலர்கள் அங்ஙனம் எளிதில் தரிசித்தமை கூறப்பெருமையானும்; பிரம விஷ்ணுக்கள் சகலர் என்பதற்கு நியாயமெனனை ?

இங்ஙனம் சொல்வகை யறியாதாரோ நூல்வகை யறிவார்? அல்லதூஉம், அங்ஙனம் "சகலர் மும்மலமுடையராகிய பிரமன் விட்டுணுமுதல் கிருமி ஈருசவுள்ள உயிர்கள்" என்று ஒழிந்தாரேல், ஔவையார்

மாலய னங்கி இரவி மதியுமைபோ
டேழுஞ் சிவசத்தி யாறு ‡

எனவும், ஆளுடையவரசுகள்

. . . காண்டகு சோதி யார்க்குப்
பிரிவிலா வமரர் கூடிப் பெருந்தகைப் பிரானென் றேத்தும்
அரியலாற் றேவி யில்லை யையனை யாறனார்க்கே §

எனவும் வரும் பூர்வாசாரியர்கள் திருவாணைக் கென்னவிடை கொடுக்கக்(கூடும்)? பூர்வாசாரியர்கள் (இங்ஙனம்)

---

* சிதம்பர சுவாமிகள் உரை.

† அகஸ்தியர் தேவாரத் திரட்டு, திருப்பதிகக் கருத்துரை.

‡ ஔவை குறள், வீட்டு நெறிப்பால், எ.

§ "எரியலால் உருவமில்லை" என்னும் திருஐயாற்றுத் திருநேரிசை.

மறைமலையடிகள் நூல் நிலையம் MARAIMALAI ADIGAL

அப்பிரம விஷ்ணுக்களுக்குச் சிவசத்தியெனத் தெய்வத் தன்மை தரிப்ப(து காண்க).

அல்லதூஉம், கிரியார்ச்சனையிற் சத்தகுரு பூசையிலும், பிராசாத்திகம் ஆதாராதிதெய்வம் நிவர்த்தியாதிஅதிதெய்வம் பூதாதிதெய்வம் புவனாதிதெய்வம் கிருத்தியாதிதெய்வம் நவவடிவம் கூறியவற்றுள்ளும் பிறவாற்றானும் பிரம விஷ்ணுக்களைச் சிறப்பித்துத் தியானிக்கவும் பூசிக்கவு மாகக் கட்டளையிட்டபின், அவர்களைக் கிருமிக்கு ஒத்த கீழுயிர் என்று கூறுவது ஆமோ? அல்லதூஉம், சேரமான் பெருமாள் பொன் வண்ணத் தந்தாதியுள்

இடமால் வலந்தா னிடப்பால் துழாயவலப் பாலொண்கொன்றை
வடமா லிடந்துகி ரேல்வல மாழி யிடம்வலமான்
இடமால் கரிதால் வலஞ்சே திவனுக் கெழினலஞ்சேர்
குடமா விடமவலங் கொக்கரை யாமெங்கள் கூத்தனுக்கே *

எனவும், ஆளுடையவரசுகள்

. . . . .
வடிகொண்டார்ந் திலங்குமழு வலங்கைக் கொண்டார்
மாலையிடப் பாகத்தே மருவக் கொண்டார்
. . . . . †

எனவும் கூறியதற்கேற்ப, வைஷ்ணவத்துள்ளும் பேயாழ்வார் அருளிச்செய்த ௩-வது திருவந்தாதியுள்ளும்

தாழ்சடையு நீண்முடியு மொண்மழுவுஞ் சக்கரமுஞ்
சூழரவும் பொன்னாணுந் தோன்றுமால் — சூழுந்
திரண்டருவி பாயும் திருமலைமே லெந்தைக்
கிரண்டுருவு மொன்றா யிசைந்து

என்று ஒத்துக்கூறியிருத்தலாலும், விஷ்ணுவைக் கீடத்தோ டொப்பக் கூறு(வது பொருந்துமோ)?

---

* ௯-வது பாட்டு.

† "முடிகொண்டார" என்னும் தனித் திருத்தாண்டகம்.

ஆயின்

. . .

அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடுபேறாய் நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையும் கிழவோன் .
. . . . *

என்று திருவாசகம் கூறியருளிற்றாலோ எனின், ஆன்மாக் கட்கு மலந் தொலைப்பிக்கு முபாயமும் சிவத்தியல் விளக்கு முகமாகவும் கூறியதன்றி வேறன்று. இக்கருத்தை விரிப்பிற் பெருகுமாதலின் குருமுகத்தாலுணர்க.

அநுபந்தம் முற்றிற்று

க. ஒழிவிலோடுக்கம் முற்றிற்று

* திருவண்டப் பகுதி.

உ. தொண்ட மண்டல சதகம்

---

1. நூற்பெயர் இலக்கணம்

தொண்ட மண்டல சதகம்—*ஒருவா றித னிலக்கணம் விரிக்கின்றாம்.*

இஃது மூவகை மொழி இருவகைச் சந்தி முத் திறத் தொகை ஒருதலை நோக்க மூந்நிலை யிலக்கணச் செந்நிலைத்தொடர்.

முற்பாட் டுயர் பொருட் டலைமை யுடையதி னிலைமை, இடைப்பாட் டுடைய துரிமையுடைமை நிலைமை, பிற்பாட் டுடைமை யுரிமையுடைய துடைமையாய—இத்தொடரைச் சொற்றிறந் தோன்றத் தொடர்பின்மை செயின், தொண்டன் மண்டலம் சதகம் என்று செய்க.

இதனுள் தொண்டனென்பது வழக்கியற்பாடு ஒற்றுமைச்செறிவு வேற்றியற்காரணம் குறிப்புயர் நோக்கம் பொருள்விரியாக்கம் குற்றியல்வண்ணம் இடைப்பல்வயிற்றொகை முதலிய சொல்லியற்பாகு பாட்டினமைந்த முதற்றொகைச் சிறப் புயர்திணைக் காரணப்பொருட்பெயர். மண்டலமென்பது வட சொன் னோக்கியற் காரணப் பண்புகோ ளிடப் பெயர். சதகமென்பது வடசொற் பாட்டியற் காரண வெண்ணிலைக் குழூஉக் கோட்பெயர்.

இத்தொடர்க்கண் இயைபின்மையிற் பொருள் கொளின்: தொண்டன்-ஆதொண்டன், மண்டலம்-வட்டம், சதகம் - நூற்றினாலாய கூட்டம் என்று கொள்க. இயைபுண்மையிற் பொருள் கொளின்: தொண்டன்-ஆதொண்டனென்னு மோரரையன், மண்டலம்-இருபதின்காதவெல்லை வட்டமாய நாடு,

சதகம் - நூறு செய்யுட்களா லாய கூட்டம் என்று கொள்க. பொருத்த வியைபிற் பொருண்முடிபு கொளின்: ஆதொண்டனென்னு மரையனா லாளப் பட்ட விருபதின்காத வெல்லை வட்டமாய நாட்டின் வண்மையைக் குறித்த நூறு செய்யுட் கூட்டத்தா னாய வோர் வகை யாப்பென்று கொள்க. இங்ஙனம் வழங்கல் சொற்சுருங்கியல் பொருளாழ்பியல் குறிக் கோளியல் தொகையின்பம் அளவிசைப்பாடு பல் வயின்வழக்கு ஒருங்கியலுடைமை முதலிய தோன் றக் காரணம்பற்றிய பெயர்க்கோள்களை வழங்கு விக்குங் கலைவல்லோர் கண்ணிய நிலையென்றுணர்க. இஃதின்னும் விரிக்கிற் பெருகும்.

இதனுள் தொண்டமண்டல மென்பத னியலை விளங்க வகுத்துணர்த்துகவெனின்: ஆதொண்டந் தழைவயிற் கிடத்தப் பட்டதனா லாதொண்ட னெனக் காரணக்குறிப் பெயரேற்று, இரவி மர பின்கண் ணோரிறைமகனா லாளப்பட்ட வெதிரி லாட்சி யுடைமையின் இம் மண்டலத்திற்குத் தொண்டமண்டலமெனப் பெயர் வழங்கிற்று.

இனி, ஆதொண்டந் தழையானு மலரானு மியற் றிய தொங்கலணிந்தமையின் ஆதொண்டனெனப் பெயர் வழங்கிற் றென்பாரு முளராலோவெனின் : அங்ஙனங் கூறினு மிங்ஙனம் வழங்க லொத்த நிலை யென்க.

அற்றேல், ஆதொண்டந் தழைவயிற் கிடத்தப் பட்டவனை ஆதொண்டனென்று குறியீடுசெய்த லெங்ஙனமெனின்: மேற் கலைவல்லோர் கண்ணிய நிலையென்ற மதனா லுணர்கவென்க. அன்றி, கடம் பந்தழைவயிற் கிடத்தப்பட்டவனைக் கடம்பனென் றும், வேப்பந் தழையானு மலரானுந் தொடுத்த

தொங்க லணிந்தோனை வேம்பனென்றும்—இங்ங
னம் பலபட வழங்குங் காரணக் குறிப்பெயர்கள்
பலவுள வவற்றாற் றேர்ந்து தெளிகவென்க.

அற்றேல், ஆதொண்டன்மண்டல மெனல்வேண்
டும்; தொண்டமண்டல மெனல் எங்ஙனமெனின்:
நிறுத்தமொழிக்கண் ணீற்றுச் சிறப் புயர்திணை
யாண்பாற் படர்க்கை விகுதியாய அன் னென்பதன்
னகரமெய் குறித்து வருகிளவியோ டந்நிறுத்த
மொழி பிளவுபட் டிருசொன்னீர்மையிற் பொருந்
தாப் புணர்ச்சியாய்ப் புணர்ச்சியின்பம் பெறாமை
நோக்கி,அவை யொன்றுபட் டொரு சொன் னீர்மை
யிற்பொருத்தப் புணர்ச்சியாய்ப் புணர்ச்சி யின்பம்
பெறற்பொருட்டு ஒத்தகிழத்திக்குங் கிழவோற்
கும் புணர்ச்சியின்பந் தோன்றற்பொருட் டகன்று
நிற்கு முயிர்ப் பாங்கி போன் றகன்று நிற்பவும் ;
நிறுத்தமொழிக்கண் முதனிலை வேற்றுமை யொற்
றுமை விரவுறுப் பாகாரம் பல்வயின் வழக்குத்
தொகையின்ப முதலிய நோக்கித் தொகுக்கப்பட்
டுந் தொகாவியலின் ஞாபகவிடய வுருவி னருகிக்
கண்ணுற்று நிற்பவும்—தொண்டமண்டலமென்று
வழங்கிற் றென்க.

இஃது இருவயிற்றோற்றம் சிறப்பாட்சியுடை
மை பொருளடைச்சேர்பு ஒற்றுமைச்செறிவு ஒத்
திசைப்பேறு றுனித்துணர்புணர்வு முதலிய நோக்
கியலைப் பெற்றுத் தேயவழக்குச் சிறப்புடைச்
சொற்றொடரிற் போந்த காரணக் குறிபபெய
ரென்க.

தொண்டமண்டலமெனிற் காரணக் குறிவிளங்
கப் புலப்படலின்றாலோ வெனின்: மேற் சொற்
சுருங்கியன் முதலிய குறித்து வழங்குவித்தல்

கவிஞர் கண்ணியநிலை யென்றும், ஆதலிற் கூர்ந் தறிகவென்க.

கூர்ந்தறிதற் றன்மையது செய்யுள்வழக்கே யன்றிப் பாடைவழக்குந் தேயவழக்கு முதலிய வன்றோ வெனின் : இத்தொண்ட மண்டலமென்பது செய்யுள் வழக்குமுதற் பல்வகை வழக்கினும் பயின்று வரலானு முற்காலத்ததன்றிப் பிற்காலத்துக் காரணக்குறி யாக்கப்பெயராய் வழங்கலானும் புறப்பாட்டிற் பொருண்முடிபு வல்லுநரல்லார்க்கும் விளங்கப் புலப்படுதலானு மதனகப் பாட்டிற் செய்கை முடிபு முதலிய இயன்மாத்திரையே கூர்ந் தறிக வென்றுமென்க.

இஃது செய்யுண் முதலிய பல்வகை வழக்கினும் பயின்று வருதன் முதலிய இச்சதகயாப்பின்கண்ணும் காஞ்சிமான்மியத்தைக் குறித்த காப்பிய முதலியவற்றின்கண்ணும் பாடைவழக்குத் தேய வழக்கு நகர்வழக்கு முதலிய வழக்கியற்கண்ணும் பல்வகைப்பெயர்க்கு மிலக்கணம் புலப்படுத்தற் கருவியாய முந்துநூன் முதலிய நூன்முடிபின்கண்ணும் வழக்குணர்ச்சிக்கண்ணுங் காண்கவென்க.

அற்றேற் கூர்ந்தறிக வென்ற வகப்பாட்டிற் செய்கை முடிபு முதலிய விளங்கப் புலப்படுத்துக வெனின்:—பயன்றரூஉந் தொழிலது புடைபெயர்ச் சிக்கண் ணுரிமை தோற்றி யுரிமையுடைமைக்குமுதலாய முதற்பொருளெஞ்சிநிற்ப அம்முதலாய முதற் பொருட் டொழின் முடிபிட னேற்ற தன் றொழிற் பய னுறுதற்கிடனாய செய்பொரு ளம்முதற்பொருளோக்கிய லொருபுடை யொப்பத் தொழிற்பயன் றேற்றற்கிடனாய தரப்பொருள் வேற்றுரிமை யேற்றுத் தன்றொழின் முடிபின் முற்றிப் புடைபெயர்ச்சி

யி னுரிமைபெற்ற முதற்பொருண்மையி னொப்புமை பெற்றுந் தன் புடைபெயர்ச்சியி னுரிமை யேற்று வேற்றுரிமை முதற்பொருட் காரணத் தொழிற்பய னுறப்படூஉஞ் செய்பொருளைத் தன் கருமத் தொழிற் பயனுறப்படூஉஞ் செய்பொருளாப் புடை பெயர்ந்தத னுரிமையேற்ற முதலாய முதற்பொருட் பாடுபெற்றும் வந்த விரிசொற் றெரிநிலைவினைமுற்றா னணைந்த பெயர்க்கோணிலை நோக்காய—ஆதொண் டந் தழையிற் கிடத்தப்பட்டவன் ஆதொண்டைத் தழையிற் கிடத்தப்பட்டவன் ஆதொண்டந்தழை யானு மலரானு மியற்றப்பட்ட மாலையைத் தரித்த வன் என்பன தன் வினைமுதற் றொழிற்பயன் றேற்றுமிடனுந் தன் றொழிற்பய னுறப்படூஉஞ் செய்பொருளு மிடனாக ஆதொண்டந்தழையன் ஆதொண்டைத்தழையன் என விரிசொற் குறிப்பு வினைமுற்றா னணைந்த பெயர்க்கோணிலை நோக் காய்ப் பின்னர் இடப்பொரு ளவயவியுங் கருவிப் பொரு ளவயவியு மிடனாகப்பெற்று, ஆதொண்டை யென்பத னீற்றைகாரங் கெட் டஃதூர்ந்த மெய்ம் மேல் விகுதி அன் னூர்ந்து ஆதொண்டன் எனக் குறுந்தடியுஞ் செம்பட்டு மாயவாறு போற் றொகை நிலை யேற்றுப் பெயரேயாய் நின்றது.

அல்லதூஉம், ஆசிரியர் தொல்காப்பியர் கூறிய

பனையு மரையு மாவிரைக் கிளவியு
நினையுங் காலை யம்மொடு சிவணு
மையெ னிறுதி யரைவரைந்து கெடுமே
மெய்யவ ணொழிய வென்மனார் புலவர் 1

என்னுஞ் சூத்திரத்துள் நினையுங்காலை யென்பதனாற்

1 தொல்காப்பியம், எழுத்ததிகாரம், உயிர்மயங்கியல், அக.

றழை யென்னுஞ் சொல்வந்துழி தொண்டை யென்னுஞ்சொல் விறுதி யைகாரங்கெட் டஃதூர்ந்த மெய்யும்மே லம்முச்சாரியை யூர்ந்து நின்றதன்றே: அங்ஙனம் உயர்திணை யாண்பாற் படர்க்கை விகுதி யாய அன் னென்பதனை யேற்குமிடத் தத்தழை யென்ப தெஞ்சி யத் தழையிற் கிடத்தப்பட்டவ னென் றறிந்தோடற் குறியாத் தழையாற்போந்த அம்முச்சாரியையின் மகரவொற்று நீங்க நின்ற அகரத்தின் பின்னர் அவ்வுயர்திணை யாண்பால் விகுதி அன் னென்பதி னகர நீங்க நின்ற னகர வொற் றடுத்து ஆதொண்டன் என்றாயது எனினு மமையும். இதனை, முதனிலை இறுதிநிலை இடைநிலை முதலிய பல்வகை புறுப்புக்களிற் பல்வகை நோக்குடைப் பல்வகைப் பெயரும் செறிப்பிற் றிறப்பட நெறிப்படூஉம் வழக்கிற் பல்வகை விகாரத்தாற் செந்நிலைபெறாஉ மென விதித்த வுணர்வுடையோ ருயர் நெறி வழக்கா லுய்த்துணர்க.

இங்ஙனம், ஆதொண்டனென்னும் பெயர் முதற் பொருண் முடிபு தன் முடிபிற்பெற்ற தன்றொழிற் பய னுறப்படூஉஞ் செய்பொருட்டன்மை யகப்பாட்டினும், உடைப்பொருட் பிறிதி னுரிமையுடைமைத் தன்மைப் புறப்பாட்டினும், உயர் பொருளடைச் சிறப்பிடப் பெயர் அவ்விருவயினும் பொருந்த நின்ற மண்டலமென்பதனோடு மருவும் வழி, மேல் வகுத்தவண்ணந் தன்னீறும் முதலுந் தொகுத்தலைப் பெற்றதென்க. அல்லதூஉம், முத லெஞ்சிநின்ற இப்பெயர் மண்டலத்தோ டணைந்த வழி விகுதி அன் எஞ்சி அம்முச்சாரியை பெற்று வருமொழி நோக்கி மகரமொழியத் தொண்டமண்

டல மென்றாய தெனினு மமையும். இதனை ஆசிரியர் தொல்காப்பியர் கூறிய

> அப்பெயர் மெய்கெடுத் தன்கெடு வழியு
> நிற்றலு முரித்தே யம்மென் சாரியை
> மக்கண் முறைதொகூஉ மருங்கி னான [2]

என்னுஞ் சூத்திர நோக்கத்தாற்காண்க வென்க.

ஆதொண்டனென்பது தென்சொன் னோக்கு மண்டலமென்பது வடசொன்னோக்கு தம்முட் செறிவா னொத்தவேனும் பாடையா னொவ்வாமை பெறலின் அங்ஙனம் பெறாமை நோக்கியும், முன் நிலையாய வந்நிலைக்கும் பின் னிலையாய விந்நிலைக்கு மிலைச்சினையாதனோக்கியும், விசேடண விசேடியச் செந்நிலைமரபு நோக்கியும் இங்ஙன முதலு மீறுந் தொகுத்தலைப் பெற்றதெனினும்; முதனிலைவண்ண வொற்றுமை இசையொற்றுமை உருபொற்றுமை நோக்கியும் இறுதிநிலை சிறப்புநிலை இனவொற்றுமை நோக்கியுந் தொகுத்தலைப்பெற்ற தெனினு மமையும். இஃதின்னுங்கூறிற் பெருகும். ஆகலின் ஆசிரியர் தொல்காப்பியர் கூறிய

> உணரக் கூறிய புணரியன் மருங்கிற்
> கண்டுசெயற் குரியவை கண்ணினர் கொளலே [3]

என்னுஞ் சூத்திரக் கருத்தா னமைகவென்க.

அன்றி, ஆதிநாராயணன்புரம்-நாரணபுரம், ஆபூதன்மங்கலம் - பூதமங்கலம், பெரும்பற்றினாற் புலிப்பாதன் பூசித்தவூர் - பெரும்பற்றினாற் புலி பூசித்தவூர் - பெரும்பற்றப்புலியூர் - புலியூர் முதலிய பெயர்க்கோள்களையும்; புள்ளம் பூதன்குடி-

---

2 தொல்காப்பியம், எழுத்ததிகாரம், புள்ளிமயங்கியல், ௫௫.

3 தொல்காப்பியம், எழுத்ததிகாரம், புள்ளிமயங்கியல், ௧௧௦.

பூதங்குடி, கொற்றன்குடி-கொற்றங்குடி, சாத்தன் குடி - சாத்தங்குடி, கொற்றன்மங்கலம் - கொற்ற மங்கலும், சாத்தன் மங்கலம் - சாத்தமங்கலம், வேடன்மங்கலம் - வேட்டமங்கலம், வேடன்குடி-வேட்டங்குடி, சாத்தன்மங்கை - சாத்தமங்கை, விஜயன்மங்கை - விஜயமங்கை, கண்ணன்மங்கை-கண்ணமங்கை, கண்ணன்புரம் - கண்ணபுரம், கண்ணன்குடி - கண்ணங்குடி, சீராமன் விண்ண கரம் - சீராமவிண்ணகரம், வரகுணன் மங்கை - வரகுணமங்கை, ஐயைபுரம் - ஐயபுரம் முதலிய பெயர்க்கோள்களையும்; நந்தன் மண்டலம் - நந்த மண்டலம், சேரன்மண்டலம் - சேரமண்டலம், சோழன்மண்டலம் - சோழமண்டலம் முதலிய பெயர்க் கோள்களையும்—பற்றுகக் கொண்டமைக வென்க. இதனைப் பிற்காலத்து மரூஉவழக்கென்று கொள்வாருமுளராலோவெனின், அங்ஙனம் கொள் வது மரபன்று; கொள்கினுங் கொள்க வென்க.

இத்தொண்டமண்டல மென்பது பல்வகைப் புணர்ச்சிக்கும் பல்வகை வழக்கியற்கும் இயற்பா டின்னோசை முதலியவற்றிற்கும் ஒத்தநிலை யென்க.

இங்ஙனமன்றி, தொண்டைமண்டல மென்பாரு முளராலோ வெனின்: அங்ஙன மாறுபடக் கூறு வோர் நுண்ணிய அறிஞர் கண்ணிய நிலையும் மாற்றம் பொருளுறாஉ மாற்ற னிலையும் பல்வகைப் புணர்ப்பிற் செல்வகை நிலையுங் கடிபுகோ ணெறி யின் முடிபுறாஉ நிலையு மிழுக்கசுறாஉம் பல்வகை வழக்கிய னிலையு மொருவாற்றானு மோர்ந்துணர் கிலராய்ப் போலியியனிலை கோலுநரென்க. என்னை? இலக்கணநுட்பங் கூர்ந் துய்த் துணர்தற் றன்மை

புளரோ லங்ஙனங் கூறற் கியையா ராகலின்: அவர் சில வழூஉநெறி வழக்குப் பற்றிக் கூறுதன் மாத்தி ரைய ரன்றி விவகரிக்கக் கடவரல்லர்.

ஆயினும், அவர்க்கு மற்றவர்க்கும் அவ்வழக் கழிவழக்கே யன்றி யிழிவழக்குமா மென்றுணர்ச்சி தோன்றற் கியாமே அத்தலைக்கண் ணின் றவர்கூற் றாக விவகரித் ததனை மறுக்கின்றாம்:—

அவர் கூற்றாக விவகரித்தல்—தொண்டைத் தழை யானு மலரானு மியற்றிய மாலை யணிந்தவ னாண்ட மண்டலமாகலின், தொண்டைமண்டல மெனல் வேண்டும்.

அதனை மறுத்தல்—தொண்டைமண்டல மெனின், கொவ்வைத் தூற்றையுடைய மண்டல மென்றும் ஒருவாறு ஆதொண்டைத் தூற்றையுடைய மண்டல மென்றும் தெளிவின்றிக் கருதப்படுவ தன்றித் தொண்டைத் தழையானு மலரானு மியற்றிய மாலையணிந்தவனா லாளப்பட்ட மண்டல மென்று கருதப்படுவதன்று.

அல்லதூஉம், சேரன்மண்டலம் - சேரமண்ட லம், சோழன்மண்டலம் - சோழமண்டலம் என் பனபோ லிம் மண்டலத்திற்கு, முன்னர் துண்டீ ரனா லாளப் பட்டமையின் துண்டீரன்மண்டலம் - துண்டீரமண்டலம், துண்டீரன்புரம் - துண்டீர புரம் என்றும்; பின்னர் தண்டகனா லாளப்பட் டமையின் தண்டகன் நாடு - தண்டகநாடு, தண் டகன்புரம் - தண்டகபுரம் என்றும் பெயர் வழங் கின. அவைபோல், அதன்பின்னர் ஆதொண்டனா லாளப்பட்டமையின், ஆதொண்டன் மண்டலம்- ஆதொண்டமண்டலம் - தொண்டன்மண்டலம் -

தொண்டமண்டல மென்றே மரபு வழுவாமை வழங்கல் வேண்டும். இதற்குப் பிரமாணம்

முக்கணன் கணநா தர்க்கு முதன்மைத்தொண் டரா னண்டு
மிக்கதொண் டரா னடாய்த் தண்டக வேந்தன் றாங்கித்
தக்கதண் டகனன் னடாய்த் தபனன்மா குலத்துச் சோழன்
றொக்கதார்த் தொண்ட மான்காத் தாயது தொண்ட னடே.

இங்ஙனம் பல்காப்பியங்களினும் பலபிரபந்தங்களினும், பிரபல வித்துவான்களாக முன்னிருந்த ஔவையார் கம்பன் ஒட்டக்கூத்தன் முதலானோர்கள் பல்வகைக் காரணங் குறித்துச் செய்த பல்வகைச் செய்யுட்களினும், ஈண்டு முன்னும் பின்னும் வருந்தமைக்குப் பிரமாணங்க ளிருக்கின்றன. அவைகளை விரிக்கிற் பெருகும். ஆகலின் அவற்றைத் தனித்தனி காண்டொறு மாங்காங் குணர்ந் தமைக.

அங்ஙனமன்றித் தொண்டைமண்டல மெனின்: சான்றோர் வழித்தாய மரபு வழுவி மயங்குவதூஉமன்றிக் "காஞ்சிவிருக்க முடைமையா னங்கருடைவளாகத்திற்குக் காஞ்சிமண்டல மென்று வழங்கிற்று: அங்ஙனமே, தொண்டைத் தூறுடைமை பற்றித் தொண்டைமண்டல மென்று வழங்கிற் றிஃதே துணிபு" என்று திரிபுதோற்றும். அன்றித் தொண்டைத்தழையானு மலரானு மியற்றப்பட்ட தொங்கலணிந்த வோரரையனு லாளப்பட்ட மண்டலம் அவ்வரையனுக் குரிமை தோன்ற நிற்றலின்றிப் பரம்பரையா னன்றி யிடைப்பாட்டாற் பெற்ற அத் தொண்டையை வேற் றுரிமையாகப் பெறற்கு எவ்வாற்றானும் பொருத்த மின்று.

இதனைக் கல்வியிற் சாதாரணத் தன்மையுடையோரும் "வாதராயண சம்பந்தத்தினம் போலும்!" என்று எள்குவர்; அன்றிக் "குமரியைக் கொண்டவனை விட்டுக் கூடவந்தவனோடு கூட்டியனுப்பியது போலும்!" என் றசதியாடுவர். என்னின், கற்றுவல்லோர்முகப்பின் இஃதென்னாம்? இதன்கண் உரிமைமலைவு பொருண்மலைவு மரபுமலைவு வழக்குமலைவு தகுதிமலைவு உணர்ச்சிமலைவு யூகமலைவு நியாயமலைவு கருத்துமலைவு முதலிய மலைவின் றொகையே புலப்படுகின்றன. ஆகலின், தொண்டைமண்டல மெனலமைவன்று; தொண்டமண்டல மெனல் வேண்டும்.

அவர் கூற்றுக விவகரித்தல்—அஃதேல், அற்றன்று; பாண்டியன் மண்டலம் பாண்டிமண்டல மென்றாயதுபோல் தொண்டையன்மண்டலம் என்பது விகுதி அன் கெட்டுத் தொண்டைமண்டல மென்றாயது: ஆகலிற் றொண்டைமண்டல மெனல் வேண்டும்.

அதனை மறுத்தல்—பாண்டியன் மண்டலம் பாண்டிமண்டல மென்றாயது மரூஉவழக்கு. இஃதங்ஙனமன்று. மரூஉவழக்காயினும் பாண்டியென்பது குடிப்பெயர்க் கோளாய் அவ்வரையனையும் ஒற்றுமை யுரிமையா லம்மண்டலத்தையு மன்றி வேறு குறித்தலின்றி நிற்றலி னறிஞரா லமைத்துக் கொள்ளப்பட்டது. தொண்டை மண்டல மென்பதை மரூஉவழக்கி னமைத்துக்கொள்வேமெனின், இங்ஙனங் குறித்தலின்றிப் பல்வகையானும் வேறு குறித்து வழூஉ நிலையைப் பெறுகின்றது. என்னை? தொண்டைத் தழையானு மலரானுந் தொடுத்த தொங்க லணிந்தோனைத் தொண்டையன் எனின்:

பிற்காலத்தின் மக்கள் வரலா றுணராமையின் "பெருந் தொண்டையனைத் தொண்டைய னென்று வழங்கினர்கொல்? அன்றிப் புழைக்கை யுடைமை யாற் றும்பி முகத்தவன்கொல்?" என் றையுறுதற் கும், தொண்டு ஐய னென்று பிரித் தேற்ற பெற்றி கோடற்கும், ஒருவாற்றாற் கேள்வியுடையோருங் "கொவ்வைத் தழையிற் புனைந்த மாலையுடையன் கொல்? ஆதொண்டைத் தழையிற் கிடத்தப்பட்ட வன்கொல்?" என்றையுற்று மயங்குதற்கும் இட னாய்ச் சொல்வலி பொருள்வலி இன்னிசைவண்ண முதலிய சிதைவுற நின்று வழூஉநிலையைப் பெற்று மணடலத்தோ டணைந்து ஐயம் மயக்கம கவர் கோண் முதலிய இழுக்கினை யேற்று வழுவினும் வழுவாய் நிற்றலானும்; இங்ஙனம்வழங்கல் அறிஞர் வழக்கன்றாகலானும்; இதனை வழூஉநிலை யென்றாம். இஃது "உடற் றாய்மை கருதி நீராட் டுவந்துசென் றாண் டளற்றி னழுந்திய தொக்கு மென்று" என் குதற் கிடனன்றிச் சிறிது மமைத்துக்கோடற் கிட னன்று. ஆகலின், தொண்டை மண்டலமென லமை வன்று; தொண்ட மண்டல மெனல் வேண்டும்.

அவர் கூற்றாக விவகரித்தல்—அற்றேல், தொண் டை யென்பது ஆகுபெயராய் நின்று அரையனை யுணர்த்தி யுரிமைதோற்றி மண்டலத்தொடு புணர் ந்து தொண்டைமண்டல மென் றாயிற்று : அதனால் தொண்டை மண்டல மெனல் வேண்டும்.

அதனை மறுத்தல்—இடைப்பாட்டி னியதி யின்மை யின்றி வந்த கடம்பூர் என்பது கடம்பவிருக் கத்தையுடைய வூரென்று தன்னளவே புலப்படு த்து மன்றி ஆகுபெயராய்க் கடப்பமாலையைத் தரித் தவனூ ரென்று பிறிதளவு புலப்படுத்துவ தன்று.

என்னை? ஆகுபெயர் ஒன்றன் பெயரா னதற்கியை
பிறிதைத் தொன்முறை யுரைப்பதாகலின். அங்
ஙனமே பரம்பரையானன்றி இடைப்பாட்டி னியதி
யினை பின்றி வந்த தொண்டை மண்டலத்தொடு
புணர்ந்துழி தொண்டையை யுடைய மண்டல
மென்று தன்னள வுணர்த்துமன்றித் தொண்டை
யை யுடையான் மண்டல மென்று பிறிதி னள
வுணர்த்தற் கோர் வகையானும் வலியின்று. இஃது
'யூகமின்றி ஒன்று'குறித் தொன்றுவரைய வொன்று
பட்ட தென்னு முலக வழக்கி னினம் போலும் !'
என் றெள்குதற் கிடனாம். ஆதலிற் றொண்டை மண்
டலமென லமைவன்று; தொண்ட மண்டல மெனல்
வேண்டும்.

அவர்கூற்றாக விவகரித்தல்—அற்றேல், தொண்
டை யுடையனா லாளப்பட்டது தொண்டையென்று
ஈறுகெட் டை விகுதி யேற்றுச் சிறப்புப் பெயராய்
மண்டலத்தொடு புணர்ந்து அங்ஙனமாயிற்று: ஆக
லிற் றொண்டை மண்டல மெனல் வேண்டும்.

அதனை மறுத்தல்—ஐ யீற்றின் ஐகார விகுதி
போந்து கெட்டுப் புணரிற் குறியீ டின்மையிற் சிறப்
பன்று; இங்ஙனம் புணர்த்தல் இயற்பாடுமன்று;
அறிஞர் மரபுமன்று. அங்ஙன மாயினும் தொண்
டையை யுடையதென் றாகுமன்றித் தொண்டை
யுடையனா லாளப்பட்டதென் றொருவாற்றானு மாவ
தன்று. அன்றிச் சோழமண்டல முதலியவற்றோடு
முரணும். அங்ஙன மமைதியின்றிக் கூறினுஞ் சந்தி
யின்பத்தான் நாகைபட்டினம் நாகபட்டின மென்
றாயதுபோல், தொண்டைமண்டலம் தொண்டமண்
டலமென் றாதலேவேண்டும். இதனை முன்னர் விலக்
கியவற்றுட் காண்க. இஃது பல்வகை யிழுக்கினுஞ்

செல்வகைத்து. "இரும்பொற்பூண் டுரீஇச் சென்று கரும்பொற் றளை கைபுகுத்தியதி னினம்!" என்றெள்குதற் கிடனாம். ஆகலிற் றொண்டைமண்டல மென லமைவன்று; தொண்ட மண்டல மெனல் வேண்டும்.

அல்லதூஉம், இங்ஙனம் தொண்டை யென்பது பல்வகைப் பொருட்கிடனாய பெயர்த் திரிசொல். ஆதொண்டை யென்பது தன்னளவே புணர்த்தும் பெயரியற்சொல். இங்ஙனம் திரிசொல்லாற் சிறப்புப் பெயர்க் காரணக்குறி செய்தல் வழக்கறிந் தோர் மரபன்று. இயற்சொல்லாற் காரணக் குறிப் பெயரமைத்தலே யவரது மரபு. இஃது ஆதொண்டச் சக்கரவர்த்தி யென்று வழங்கும் அறிஞர் வழக்கா லறியப்படும்.

அவர் கூற்றாக விவகரித்தல்—அற்றேல், ஆதொண்டையன் என்பது மண்டலத்தொடு புணர்ந்துழி, முதலு மீறுங் கெட்டு அங்ஙன மாயிற்று: ஆகலின் தொண்டை மண்டல மெனல் வேண்டும்.

அதனை மறுத்தல்—ஆதொண்டையன் எனின், தொகையின்பமும் இசையின்பமும் செறிவுகோளு மின்றிப் புல்லென்கையானும், சுருங்கியற் பேரின்பங் குறித்து முன்னும் பின்னுந் தொகை செய்தமைத்த சான்றோர் ஓரெழுத்தா னீட்டியற்பெயர்ப் பாற்படுத்தி முடிபு வழூஉச் செயற் கியையா ராகலினும், இங்ஙனம் தொகுக்கப்படின் பொருளாட்சி முதலிய குன்ற லின்றிச் செந் நெறியிற் பெரும் பயன் றரலானும், அங்ஙன மமைத்தல் வழுவே யாம். இஃது ஆதொண்டையன் சக்ரவர்த்தி ஆதொண்டையச் சக்ரவர்த்தி யென்னாது, ஆதொ

ண்டன் சக்ரவர்த்தி ஆதொண்டச் சக்ரவர்த்தி யென்று வழங்கும் அறிஞர் வழக்கா லறியப்படும்.

அவர் கூற்றாக விவகரித்தல்—ஈண்டு ஆதொண்டைச் சக்ரவர்த்தி யெனின் வழு வென் னெனின்.

அதனை மறுத்தல்—அங்ஙனம்பெறின், அவ்வரையற்கு ஆதொண்டையாற் காரணக் குறிப் பெயரமைப்பான் கருதிய வன்றே கருதியதாதல் வேண்டும். அங்ஙன மின்றிப் பின்னர் செங்கோன்மை ஆண்மை முதலிய வண்மையுடைமை பற்றி முகமனு வமைக்கப்பட்டது ஆகலின், வழூஉ இங்ஙனமென்க. ஈண்டு ஆதொண்டன்சக்ரவர்த்தி ஆதொண்டச்சக்ரவர்த்தி யென்பது புடைப்புள கன்னிப் பொற்குலைக்கண்ணே இடைப்பிள வியையா விரட்டைப்பழம் போன் றொருபொருட் கிருவயி னெழூந் திடைப்பிள வறியாச் சிறப் பினப்பெயர். ஆதொண்டன்சோழன் ஆதொண்டச் சோழனென்பது மது. இதனை, தசரதன்சக்ரவர்த்தி - தசரதச் சக்ரவர்த்தி, நளன்சக்ரவர்த்தி - நளச்சக்ரவர்த்தி, புரூரன்சக்ரவர்த்தி - புரூரசசக்ரவர்த்தி, சோழன் ராஜன் - சோழராஜன், சேரன்ராஜன் - சேரராஜன், பாண்டியன்ராஜன்-பாண்டியராஜன், சோழன்மஹாராஜன்-சோழமஹாராஜன், சைவன்சோழன்-சைவச் சோழன், குலோத்துங்கன் பாண்டியன் - குலோத் துங்க பாண்டியன், சோழன்மன்னன் - சோழமன் னன், சேரன்மன்னன் - சேரமன்னன் என வழங் கும் பல்வகை முடிபு வழக்குகளாற் றெளிந்தமையப் படும்; ஆகலின் ஆதொண்ட னெனல் வேண்டும்: ஆதொண்டைய னெனல் இழுக்கு. இங்ஙனம் இழுக் காய ஆதொண்டைய னென்பது முதலு மீறுங் கெட்டு மண்டலத்தொடு புணர்ந்து தொண்டை

மண்டல மென் ருயிற் றெனினும், மேற் குறித்த பல்வகை வழூஉக்கட்கும் பேரிடனாகத் தக்கது. "இட னறிந்து பிறுண்டாத் தின வுண்ணி யெரிவிற் புழுங்கிற்று என்பதற்கும், கருத் தறியாமற் கலப் பான் புகுந்து அருத்த மிழுக்குமா லென்பதற்கு மினம் !" என்று எள்ளுதற் கிடனும். ஆகலிற் றொண்டை மண்டல மெனல் வழூஉ ; தொண்ட மண்டல மெனல்வேண்டும்.

அவர் கூற்ருக விவகரித்தல்—தொண்டைக்கா டுடைமையாற் றொண்டைமண்டலமெனல்வேண்டும்.

அதனை மறுத்தல்—இங்ஙனம் தொண்டமண்டல வரலாற்றை வகுக்குங் காப்பியத்திற் கண்டதே யன்று ; இவ்வா றுண் டென் றறிஞரா னிதுகாறி யாங் கேட்டதுமின்று: ஆகலின் வழூவாம். இஃது வழியறியாக் கன்று குழிவழியாச் சென் றென்பதற் கினம். இங்ஙனம வழியறியாது மொழியினும், பொய்கூறினும் பொருந்தக் கூறுக வென்னு மிழிந் தோர் வழக்கின்கண்ணு மேற்புடைத் தன்று. என்னையெனின் காஞ்சி தில்லை என்னு மரப்பெயர் கள் ஒற்றுமைபுரிமை குறித்து காஞ்சியைக் கண்டு தில்லையை யடைந்தா னென்று வழங்கப்படுகின் றன. அங்ஙனம் தொண்டையைக கண்டு என்று எவ் வகை வழக்கினும வழங்கப்பட்டதின் ருகலி னென்க. இதனுனுந் தொண்ட மண்டல மெனல் வேண்டும்.

அவர் கூற்ருக விவகரித்தல்—தொண்டைமான் என்னும் பெயருள் வேற் ருே ரரைய னிருந் ததி காரித்தமையின் தொண்டைமான் மண்டல மென் பது மான் கெட்டு அங்ஙன மாயிற்று : ஆகலிற் றொண்டை மண்டல மெனல் வேண்டும்.

அதனை மறுத்தல்—இங்ஙனம் புணரினும், மேற் குறித்த வழூஉ நிலைகட் கிடனும்.

அன்றித் தொண்டைமா னென்பதே வழூ. என்னை? தொண்டைமா னென்பது தனிமொழி தொடர்மொழி யென்பவற்று ளெம் மொழி? **விடை**: தனிமொழி. **வினா**: தனிமொழியாயின் இதற்கு முதனிலை இறுதிநிலை இடைநிலை என்னை? **விடை**: தொண்டை - முதனிலை, ஆன் - கடைநிலை, மகரம் - இடைநிலை யாம்.

அதனை மறுத்தல்—என்னின் முதனிலைக்கும் இறுதிநிலைக்கும் இடைப்பா டொத்துநிற்பது இங்ஙனம் வரூஉம் பெயர்கட்கு இடைநிலை. ஈண்டு முதனிலை யீற் றைகாரக் குறுக்கம் விலங்கிப் பொறுத்திசைப்ப விடைப்பாடின்றி யிறுதிநிலையோ டிணைந்து வேறு குறித்தலி னிடைநிலையி லமைவின்று. அன் னீறன்றி ஆ னீறு ஆறிறந்தன்றி யைந்திறந்தியையுந் தொடர்மொழிப் பெயர்க் கன்றி இங்ஙனம் உரித்தாவ தன்று, நயப்பாடின்மையின். ஆகலின் இறுதிநிலை யியலு மமைவின்று. விகாரத்தால் வேறு குறித்தலின் முதனிலை யியலு மமைவின்று.

அல்லதூஉம், இஃ திடைநிலை யாயின், கோமான் என்பதற்கும் அங்ஙனம் இடைநிலையாகல்வேண்டும். அங்ஙனமாயின், கோ-ம்-ஆன் : இவற்றுள், கோ - அரையன் என்னின், ஆன் விகுதி அதிகரிப்பின்றி மூங்கைபோலும் யானையுண்ட கனிபோலும் பெயர்ச்சியும் பயனு மின்றி வற்றன்மரணி னின்றது. ஆகலின் இஃது இங்ஙனமன்று; ஆகலின் அஃது அங்ஙனமன்று. இஃது கைபட லறியான் பொய்பட

லொன்றோ[4] வென்பதற் கினம். ஈண்டு, தொடர் மொழியாய்க் கோன்மன் - கோமான் என நிலைமொழி யீறுகெட்டு வருமொழி முத னீண்டது. இதனை வழுதிமன் என்னுங் காப்பிய வழக்கானுங் கண்டுணர்க. அன்றி, கோன்மஹான்-கோமான் என நிலைமொழி யீறுகெட்டு வருமொழி வடமொழி யாதலின் விகாரம் பெற்றுக் கோமான் என்றாயது. அன்றி கோன்மான் என நிலைமொழி யீறு கெட்டுக் கோமானென்றாயது. இங்ஙனமே தொண்டன்மன்-தொண்டன்மஹான்-தொண்டன்மான் என்பன தொண்டமானென்றாயது. மன் மஹான் மான் என்பவைக்குப் பெருமையுடையவ னென்பது பொருள். ஆகலின், தொண்டைமா னெனல் வழூ; தொண்டமா னெனல் வேண்டும். இங்ஙனமே சேரன்மான் - சேரமான், மலையன்மான்-மலையமான் முதலியவுங் காண்க. ஆகலின் மண்டலத்தோடு கூடியவழி தொண்ட மண்டல மெனல் வேண்டும். அன்றி, தொண்டனாடெனல் வேண்டும்; தொண்டைநா டெனல் வழூஉ. என்னை? சேரன்நாடு - சேரனாடு, சோழன்நாடு - சோழனாடு, பாண்டியன்நாடு - பாண்டியனாடு, மலையன்நாடு - மலையனாடு என்பதுபோல், தொண்டன்நாடு-தொண்டனாடு எனல் மரபு ஆகலின். தொண்டனாடு எனில் அடிய னென்ன முதல் வேறுகுறிக்குமே யெனின், அங்ஙனங் குறிப்பதில் ஆற்றலுமின்று பயனுமின்று. என்னை? ஆ வென்பது காரணவிடயமாக நின்று உரியானைக் குறிக்கின்ற தாகலின்; அன்றி, உடையானை யன்றி உடைமை குறித்தலின் றாகலி னென்க.

---

4 பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்—திருக்குறள், பேதைமை, ௬.

இங்ஙனம் பல்வகையாற் சொல்வகை செய்த லென்? தொண்டைமண்டல மெனின் மேற்குறித்த வண்ணம் உரிமைமலைவு பொருண்மலைவு மரபுமலைவு வழக்குமலைவு தகுதிமலைவு உணர்ச்சிமலைவு யூக மலைவு நியாயமலைவு கருத்துமலைவு ஐயங்கவர்கோள் மயக்கம் வேற்றுக்குறிப்பு வேற்றுரிமைநிலைமை நியதியின்மை இயைபின்மை சொல்வலிச்சிதைவு பொருள்வலிச்சிதைவு பொய்க்கோள் அனர்த்தம் இன்னிசைவண்ணச்சிதைவு பிளவுபாடு முதலிய பல்வகை வழுக்கட் கிடனும்.

அன்றி, ஆதொண்டை யென்பதனீற் றைகாரக் குறுக்கங் குற்றலகே பெற்றது. தொண்டை யென் பதனீற் றைகாரக குறுக்கங் குற்றலகோ டொற்ற லகு பெற்றது. என்னை? ஆதொண்டை: ஆ-தொண்-டை: ஈரலகு-ஓரலகு-அரையலகு-முதலிடைப்பாடு இருகலை-நடுவிடைப்பாடு காற்கலை - கடையிடைப் பாடு முக்காற்கலை ஆகலின், ஆதொண்டை யீற் றை காரக் குறுக்கங் குற்றலகே பெற்றது. தொண்டை: தொண்-டை: ஓரலகு-அரையலகு - முன்னிடைப் பாடு காற்கலை-பின்னிடைப்பாடு அரைக்கலை ஆக லின், தொண்டை யீற் றைகாரக்குறுக்கங் குறறல கோ டொற்றலகும் பெற்றது. இங்ஙனம் தொண் டை மண்டலத்தோடு புணருங்கால், மண்-ட-ல-ம்: ஓரலகு - அரையலகு - ஓரலகு - அரையலகு-நான் கிடைப்பாடு: கால்-கால்-அரை-அரை பெற்று வேற் றிசை விரவி நிற்றலின், புணர்ச்சியிடை ஐங்கலை யைப் பெற்றுப் பிரிந்து வேறு குறிக்கின்றது ஆகலி னும், தொண்டை மண்டல மெனல்வழு; தொண்ட மண்டல மெனல் வேண்டும்.

இங்ஙனம் பெயர்க் கோள்கட்கு இயற்சொற் பெயர் முதலிய, சொல்விரிப் பெயர் முதலிய, செஞ் சொற் பெயர் முதலிய, சாதிகூற்றுப் பெயர் முதலிய, ஒரு மொழிப் பெயர் முதலிய, உயர்திணைப் பெயர் முதலிய, பாற்பெயர் முதலிய, பொதுவிற் பொதுப் பெயர் முதலிய, தன்மைப் பெயர் முதலிய, வழக்குப் பெயர் முதலிய, வெளிப்படைப் பெயர் முதலிய, வரையியனடைப் பெயர் முதலிய, உயருரிமைப் பெயர் முதலிய, சிறப்புநிலைப் பெயர் முதலிய, சித்துப் பொருட்பெயர் முதலிய, இடு குறிப் பெயர் முதலிய, மரபு நிலைப்பெயர் முதலிய, எழுத்துத் தொடர்ப்பெயர் முதலிய, பொருணிலைப் பகுபதப் பெயர் முதலிய, பெருஞ் சொல்லாட்சிப் பெயர் முதலிய, முதனூல் வாய்பாட்டுப்பெயர் முதலிய—இவைமுதற் பெயர்ப்பாகுபாடுகளி னிலக் கணங்களும்; எழுத்துப் புணர்ச்சி, பதப் புணர்ச்சி, தொடர்புப் புணர்ச்சி, பொருட் புணர்ச்சி, வண்ணப் புணர்ச்சி, அளபுப் புணர்ச்சி, இயைபுப் புணர்ச்சி, சமநிலைப் புணர்ச்சி, கலவைப்புணர்ச்சி, தெரிநிலைப் புணர்ச்சி, குறிப்புப் புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சி, ஒற்றுமைப்புணர்ச்சி, சிறப்புடைப் புணர்ச்சி, பொதுவுடைப் புணர்ச்சி, இருமைப் புணர்ச்சி முதலிய புணர்ச்சி யிலக்கணங்களும்—கூர்ந்துணரார்க் குத் தொண்ட மண்டல மென்பதி னிலக்கணமும் புலப்படுவதன்று.

இங்ஙன முணரமாட்டாதார்—ஆதொண்டச்சக்ர வர்த்தி யென்பவர் தாமரசு செய்யுங்காலத்தில் தம்மாற் கட்டுவித்த ஆலயங்களிற் றம் பெய ரிலச் சினை சிலையின்கட் பொறிப்பித்தனர்; ஆண்டும் ஆதொண்டவென்றே இலக்கணவமைதி பெற்

றிருக்கின்றது: இதனை—திருவலிதாயம் திருமுல்லை வாயல் முதலிய சிவதலங்களிற் சென்றேனுங் கண்டு தெளியக் கடவர். இஃதின்னுங் கூறிற் பெருகும்.

தொண்ட மண்டல மென்பதைத் தொண்டை மண்டலமென்று இச்சென்னை நகரிலிருக்கின்ற வித்துவான்களிற் சிலர் மாறாக வழங்க, அது குறித்துச் சில பிரபுக்களும் வித்துவான்களும் உபாத்தியாயர்களும் "இவ்விரண்டில் இலக்கணவமைதியும் உலக வழக்கு முள்ளது யாது? அதனையொருவாறு தெரிவிக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டபடி

சிதம்பரம் இராமலிங்கபிள்ளையவர்களாற் றெரிவிக்கப்பட்டது.

1. நூற்பெயர் இலக்கணம் முற்றிற்று.

2. வழிபடு கடவுள் வணக்கப்பாட் டுரை

வழிபடு கடவுள் வணக்கம்

ஆசிரிய விருத்தம்

கொண்டலை நிகர்க்கும் வேளாண் குடியொடு தழீஇய தொண்
மண்டல சதகந் தன்னை வளமையான வகுப்ப தற்குப் [ட
புண்டர நுதலி ரண்டு புயமிசை யிருந்தி ரண்டு
குண்டல நிகரி ரண்டு குமரரை வணக்கஞ் செய்வாம்.

கோ . . . ம் : *இச்செய்யுள்—வியனுறு மெதிர தூஉம் வீழாக் கொடையும் பயனுறாஉந் தொழிலும் பழியாப் பண்பும் வாய்மையு மறிவு மாஅண்பு மாண் மையும் தூய்மையும் பொறையுந் தோஒற்றமு மன்பு முளங்கொ ளிரக்கமு மொழுக்கமு முதலா விளங்கு விழுக்குடி வேளாண்குடியே இத்தொண்ட மண்ட லத்திற் பெரும்பாலு மிறைகொளப்பட்டுத் தம் வளமையா னீண்டுறாஉ மற்றைக் குடிகட்கும் இம் மண்டலத்திற்கும் வளமை தோற்றிற்று—அஃது நெறிப்பானுஞ் செறிப்பானுந் தோன்ற வழிபடு கடவுட் பராஅய்ப் புலப்படுத்துவ லென்று புகுந் தமை யுணர்த்துகின்ற தென்க.*

எங்ஙனமெனின், "கொண்டலை நிகர்க்கும் வே ளாண்குடியொடு தழீஇய தொண்ட மண்டல சதகந் தன்னை வளமையான் வகுப்பதற்குக் குமரரை வணங்குவா" மென்ற துய்த்துணர்கவென்க. இஃது வற்புறுத்தற்கு வேளாண்குடியை யளவைமுகத் தான் வெளிப்படையின் விளங்கவைத்து மற்றைக் குடிகளை வேற்றுருபொடுவிற் பராமுகத்தாற் குறிப் பின்கட் சார்த்தி வைத்ததே யமையுமென்க. விள

ங்கு விழுக்குடி வேளாண்குடி யென்றதனாலன்றே அங்கையிற் கனிபோன் றிங்ஙனம் பெற்றாம்.

அஃ தீண்டெடற்றாற் பெறுது மெனின், கொண்டலை நிகர்க்கும் வேளாண்குடி யென்றதனாற் பெறுது மென்க. எங்ஙனமெனின், கொண்டலை-பருவப் புயலை, நிகர்க்கும்-ஒக்கும், வேளாண்குடி-வேளாண் குடிப் பிறப்பினர் எனவே: வேளாண்குடிப் பிறப்பி னர் கைம்மாறு கனவினுங் கருதலின்றி வரையாது வழங்கும் வள்ளற்றன்மை யுடையாரென்றும்; எவ் வாற்றா னுயர்ந்தோர்கட்குந் தம்மையன்றி உலகிய னடத்தப்படாச் சிறப்புடைக் கருவியாந் தன்மை யுடையரென்றும்; இங்ஙனம் வையகத்தார்க் கன்றி வானகத்தார்க்குங் குன்றா நன்றி குயிற்றுந ரென் றும்; தம்மானே யன்றித் தங்கருவியானுங் கருமத் தானும் எவ்வெவ் வளாகத் தெவ்வெவ் வுயிர்கட்கு மின்பந்தரூஉ மியலின ரென்றும்; ஆன்ற கல்வி, யூன்று கேள்வி, சான்ற வுணர்ச்சி, யேன்ற ஒழுக்க முதலிய உயர்நெறிக் குன்றத் தும்ப ரிம்பர் பல்காற் பயிலுறும் பாங்கின ரென்றும்; தொன்னெறி யரை யர்க்குத் துணைவராகிப் பகைப்புல னடுங்கிய படர்ந் தெதிருறீஇ வாய்விட் டார்த்து வாள் புடை பெயர் த்து விற்புடைத்தழீஇப் பொற்பொடு பெய்பு மாண் மைய ரென்றும்; தண்ணளி யுருக்கொடு தாங்கிச் செங்கோ னிலைபெறச்செய்யுந் தலைமையரென்றும்; எத்திறத்தவரு மெதிர்கொடு பராஅய்ப் பற்பல திறப்படூஉம் பரிசிற் பழிச்ச உயரிடத் தோங்கிய பெயருள ரென்றும்; கடவுளாணையிற் கடவாச்செறி வும் யாவருமதிக்கு மேன்மையுடைமையும் புலவராற் புனையும் புகழினீட்டமுங் களக்கறு மொண்மையும் விளக்குறு பசுமையும் பொய்யா மாற்றமும் போக்

கறு தோற்றமு மின்சுவை நிறைவு மெத்திற நலனு முடைய ரென்றும்—உவமைக் குறிப்பாற் பெறப் படுதலின் இங்ஙனமென்க. ஈண்டு வகுத்தவை கொண்டலின்கண்ணு முய்த் துணர்ந்து கொள்க. இஃது வகுத்த தன்றி விரிப்பிற் பெருகும்.

இனி, கொண்டலைநிகர்க்கும் வேளாண்குடி என்பதற்குக் கொண்டல் - கொண்டலைநடாத்தும், ஐ - தலைவனாகிய இந்திரனை, நிகர்க்கும் - ஒத்த, வேளாண் குடி - வேளாண்குடிப்பிறப்பினர் எனினு மமையும். இங்ஙனம் பெறுங்கால், வேளாண்குடிப் பிறப்பினர் தமது நல்லொழுக்க மென்னு மாணையாற் கொண்டலை யாங்காங்குப் பெய்வித்து நடத்தலும், ஐவகைத் திணையினு முய்வகைத் திணையாய மருதத் திணையை வளம்படுத்துக் காத்தலும், வேளாண் வேள்விக்கு வேந்தராதலும், விழாது தரூஉம் வேளாண்மைக்குரிய கருவியை யுடையராதலும், யாவராலும் விரும்பப்படூஉ மியற்கையராதலுங் கொள்க. ஈண்டு வகுத்தவை இந்திரன்மாட்டு முய்த்துணர்க. இஃதும் விரிப்பிற் பெருகும்.

அன்றி, கொண்டலென்ப திலக்கணையாற் காவற் கடவுளாய விண்டுவாகக் கொண்டு அக்கடவுளை யொத்த வேளாண்குடி யெனினு மமையும். இங்ஙனங் கொள்ளுங்கால், வேளாண்குடிப் பிறப்பினர் நடுநின் றெவ்வெவ் வுயிர்க்கு நுகர்ச்சி வருவித்தலும், பகைப்புலன் முருக்கிப் பாதுகாத்தலும், திருவிற்பொலிந்த சிறப்புடையராதலும், இன்சுவை யமுத மீந்தோர்க்கீதலும், பூமகட் குரிமை பூண்டு நிற்றலும், சத்துவத் தனிக்குணத்தானே பயிறலும், ஊக்கமுஞ் செவ்வியு முடைய ராதலுங்

கொள்க. ஈண்டு வகுத்தவை விண்டுவின் மாட்டு முய்த்துணர்க. இஃதும் விரிப்பிற் பெருகும்.

கொண்டலை நிகர்க்கும் வேளாண்குடியென விரியுவமையின்கண் ணுவமவுருபன்றி யையுருபும் விரித்ததிங்ஙனம் விரிப்பதற்குக் குறிப்புணர்த்த வென்க. உவமைக்கும் பொருட்கு மொருநோக்கத்தா னன்றிப் பலபட வகுத்த தெற்றெனின், உவமைப் பொருள் புகழ் பொருண் மிகை குறித் தழுக்கற்று முரணுதற் குறியா நிகர்க்குமென்னுந் தடுமா றுவம வுருபு விரித்தமையி னென்க. என்னை? ஆசிரியர் தொல்காப்பியர் உவம வுருபுகளை வகுத்து முடிபு செய்யுமிடத்து, "கடுப்ப வேய்ப்ப" 5 வென்னுஞ் சூத்திரத்தா னிகர்ப்ப வென்பது மெய்யுவம வுருபென்று வகுத்தவண்ண மவ்வுருபு ஈண்டஃதேலாது தொழில் பயன் முதலிய வேற்றதாகலின். அஃதே லிஃ தியாண்டும் வரைதலின்றோ வெனின் "தடுமா றுருபுக டாம்வரை யின்றே" 6 யென்ப வாகலின் விரும்புமிடத் தின் றென்க. அன்றி இஃ தழுக்கற்று முரணுதற் பெயர்ச்சிக்கட் போந்த வெச்சம் போறலி னங்ஙனங் குறிக்கவைத்த தெனினு மமையுமென்க. இவ்வுவமை நோக்கைச் "சுட்டிக் கூறா" 7 வென்னுஞ் சூத்திர நோக்கத்தா

---

5 கடுப்ப வேய்ப்ப மருளப் புரைய
வொட்ட வொடுங்க வோட நிகர்ப்பவென
றப்பா லெட்டே மெய்ப்பா லுவமம்.—
தொல்காப்பியம், பொருளதிகாரம், உவம இயல், ௰௫.

6 "தடுமா றுவமங் கடிவரை யின்றே" என்பது தொல்காப்பியம், பொருளதிகாரம், உவம இயல், ௩௫.

7 "சுட்டிக் கூறா வுவம மாயிற்
பொருளெதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளலே"—
தொல்காப்பியம், பொருளதிகாாம், உவமஇயல், ௭.

னுங் காண்க. உவமையும் பொருளு மொத்தல் வேண்டு மென்றவா ருெத்தவண்ண முய்த்துணர்க. அன்றி உவமப்போலி மறுக்கப்படா வாகலி னீண் டவற்றுள்ளு மேற்பன விரும்பினு மிழுக்கின் றென்க. இஃ தின்னும் விரிக்கிற் பெருகும்.

கொண்டலென்பது விரவு மிகையொலிக் காப்பிய வழக்குத் தொடரியற் பால்பகா வஃறிணைப் பல் பொருள் குறித்த வொருபெயர்த் திரிசொல். ஈண் டுச் சிறப் புய ருரிமைக் கருவி யவயவப் பொது நிலைப் பூதப் பொருட்டாகிய மேகத்தை யுணர்த் திற்று.

வேளாண்குடி யென்பது உயர்நிலைக் காப்பிய வழக்குச் சொன்னடைச் சிறப்பு முன்னிலைக் கார ணம் பின்னிலை யிடுகுறிச் சாதிக் கூற்றுத் தொடர் நிலை கருத்துப் பொருட்புறத் துயர்திணைக் காட் சிப்பொருட் பன்மைத் தோற்றத் தன் மொழித் தொகைச் சொற்ருெடர். இதனை வேளாண்மைக் குரிய குடிப்பிறப்பின ரொன்று விரித்துக்கொள்க. வேளாண்மை நன்றி ஈகை வேளாண்டொழின்மை முதலிய பல்பொருள் குறித்த வொருசொல். அஃது வேளாண்டொழி லுடைமையா னன்றி ஈகை முத லிய நற்செய்கை யுடைமைக்கு முரிய வோர் குடிப் பண்பாயிற்று. குடியென்பது குலம் ஊர் முதலிய குறித்த வோர் சொல். அஃ தீண்டு குலத்தின் மே னின்றது. அன்றி மருதத்திணை யூரென்பது மொன்று. வேளாண்டொழில் என்பதில் வேள் என்பது நன்னிலம், ஆண் என்பது உரிமைத்தலை மை, தொழில் என்பது முயன்று முடித்தல் : இத னால் நன்னிலந் திருத்திச் செந்நெறி பொங்கப் பைங் கூழ் விளைக்கு முரிமைத் தலைமைத் தொழில் என்

பது பெறப்பட்டது. அல்லதூஉம் வேள் என்பது விரும்பப்படுகை, ஆண்டொழில் - ஆண்மைத்தொழில்: இதனால் அரையரால் விரும்பப்படூஉம் மந்திரித் தலைமை சேனைத் தலைமை யென்னும் ஆண்மைத் தொழிலுடையோ ரென்பதூஉ மமையுமென்க. இதனையுடைய குடிப்பிறப்பினர் வேளாண் குடிப்பிறப்பினர் வேளாள ரென்க. இவ்வேளாண் குடிப்பிறப்பினர் ஈகை முதலிய நற்செய்கைகளின் மிக்கா ரென்பதற்கு வேறு கூறவேண்டுவ தின்று: இவர் குடிப்பெயரே தக்கசான்றென்க. அன்றி அந்தணர் அரையர் வணிகர் முதலியோர் தத்தமக்குரிய வொழுக்கங்களை நடத்தற்கு வேளாண்குடிப் பிறப்பினரது உதவி முற்றும் வேண்டுதலின், இவர் நெறி பெருநெறி யென்பதற்கு மைஐயமே சான்றென்க. இதனைத் தொல்காப்பியத்தில் "நாற்றமு"[8] மென்னுஞ் சூத்திரத்துள் "வேளாண் பெருநெறி" யென்றதனாற் காண்க. அன்றி யிவர்க்கிரித தொழிலுரிமைச் சிறப் பென்பதூஉம் இவரது மேம்பாட்டுத் தன்மையையு மரபியலிற்[9] காண்க. இதனை விரிக்கிற் பெருகும்.

2. வழிபடு கடவுள் வணக்கப்பாட் டுரை முற்றிற்று.

---

8 தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், உ௩: "வேளாண் பெருநெறி வேண்டிய விடத்தும்" என்பதற்குத் "தலைவற்குத் தான்சில கொடுத்தலைத் தலைவி வேண்டிய விடத்தும்" என்று பொருள் கூறுவது காண்க.

9 தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல்,
அ௦. வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்ல
தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி.
அ௧. வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்
வாய்ந்தன ரென்ப அவர்பெறும் பொருளே — என்பன காண்க.

3. சுவாமிகள் பதிப்பித்த நூலும் அவர்கள் எடுத்துக்காட்டிய அதன் மேற்கோள்களும்

சதகம்

கட்டளைக் கலித்துறை

சீர்கொண்ட கச்சித் திருவேகம்
பத்தான் செல்வமுக்கட்
கார்கொண்ட மும்மதத் தைங்கரந்
தாங்கிக் கடவிகடப்
பேர்கொண்ட சக்கரப் பிள்ளையைத்
தான்பெற்ற பேறதனால்
வார்கொண்ட கீர்த்தி படைத்ததன்
றோதொண்ட மண்டலமே.

மேற்கோள்

ஸ்காந்தம்

கலி விருத்தம்

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயக
னகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம். 1

சேவடி செய்வ தறியாத
மாவலி முன்புசென்று
மூவடி வேண்டுந் திருமான்
மருகனிம் மூவுலகுந்

1 *விநாயகர் காப்பு.*

காவடி யாக வொருதலை
மேவிய காஞ்சிபுர
மாவடி மேவும் பெருமான்
பதிதொண்ட மண்டலமே. உ

மேற்கோள்

ஸ்காந்தம்

ஆசிரிய விருத்தம்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
யேவருந் துதிக்க நின்ற விராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேண் மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.2

கயிலையுங் கச்சியும் விற்கோ
லமுநற் கழுக்குன்றமும்
பயில்வலி தாயமும் பாசூரு
மச்சிறு பாக்கமுநல்
லயிலையும் வல்லந் திருவொற்றி
யூரு மரசிலியு
மயிலையு மீசன் மகிழ்ந்ததன்
றேதொண்ட மண்டலமே. ௩

மேற்கோள்

1.

கட்டளைக் கலித்துறை

சுண்டீ டிரண்டு மலைநாட்டி
லொன்றுகொங் கேழுவையை
வாணுட்டீ ரேழ்நடு நாட்டெழு
மூன்றெறன்றைந் தாம்வடக்கிற்

---

2 சுப்பிரமணியர் துதி.

சோனாட் டொருநூற்றுத் தொண்ணூறென்
றோர்வர் துளுவத்தொன் று
நானாட் டியதொண்ட நன்னாட்டி
லாறைந் திருநகரே. 3

2. திருப்பதிக் கோவை

ஆசிரிய விருத்தம்

தண்ணார்தண் டலைப்பாதி ரிப்புலியூர் முண்டீச்
சரம்புறவார் பனங்காட்டூர் திருவாமாத் தூரே
யெண்ணாரண் ணாமலையு நடுநாட்டி லிருபத்
திரண்டாகு மிப்பாலே கம்பமேற் றளிவிண்
கண்ணேனுங்கு மதிலோண காந்தன்றளி யனேக
தங்காவ தங்கச்சி நெறிக்காரைக் காடே
யுண்ணாடு குரங்கணின்முட் டந்திருமா கறலோத்
தூர்வன்பார்த் தான்பனங்காட் டூர்வல்ல மாற்பேறே. 4

3.

இதுவுமது

ஊறலிலம் பையங்கோட்டூர் விற்கோல மாலங்கா
டியர்பாசூர் வெண்பாக்கங் கள்ளில்கா ளத்தி
யாறிறிரு வொற்றியூர் வலிதாயம் பாலி
வடமுல்லை வாயில்வேற் காடுதிரு மயிலை
யீறிறிரு வான்மியூர் கச்சூரா லக்கோயி
லிடைச்சுரங் கழுக்குன்ற மச்சிறுபாக் கம்மே
மாறிறிரு வக்கரையே யரசிலிதொல் லிரும்பை [டே. 5
மாகாளந் தொண்டநன்னாட் டெண்ணின்முப்பா னிரண்

இளைத்தெழு வெண்பிறை யார்கச்சி
யேகம்ப ரின்னருளால்
விளைத்தெழு நாலி லொருமருந்
தாலும் விலக்கரிதாய்

3 தனிப்பாடல் (?)
4 ௰௨-வது திருவிருத்தம்.
5 ௰௩-வது திருவிருத்தம்.

முளைத்தெழும் பொற்சிக ரம்போலு
 மம்மை முலைத்தழும்பும்
வளைத்தழும் பும்பெற் றிருப்பதன்
 றேதொண்ட மண்டலமே. ச

மேற்கோள்

காஞ்சிபுரத்தின் பழைய புராணம்

ஆசிரிய விருத்தம்

மங்கைநா யகிதன் வரிவளைத் தழும்பும்
 வளரிள முலைசெய்த சுவடும்
கொங்கைநா யகமுங் கண்டுகண் டுள்ளக்
 குறிப்புட னல்குவாய் கோவே
சிங்கநா யகமா யிருந்த நாரணனைச்
 சிம்புளா யடர்த்தசே வகனே
கங்கைநா யகனே கம்பனே கச்சிக்
 கடவுளே காக்குநா யகனே. 6

சேணார் கழுகு பழுகுதெய்
 வீகச் சிறப்புமன்றி
யேணாரும் பூதங் கொடுபோ
 வதுமன்றி யெண்ணிறெரல்சீர்க்
காணாது காண்பது கச்சியி
 லேயென்று காசினியோர்
வாணா ளளவுந் துதிப்பதன்
 றேதொண்ட மண்டலமே. ரு

மேற்கோள்

திருவாசகம்

பிட்டு நேர்பட மண்சு மந்த
 பெருந்து றைப்பெரும் பித்தனே
சட்ட நேர்பட வந்தி லாத
 சழக்க னேனுனைச் சார்ந்திலேன்

சிட்ட னேசிவ லோக னேசிறு
நாயி னுங்கடை யாயவெங்
கட்ட னேனையு மாட்கொள்வான் வந்து
காட்டி னுய்கழுக் குன்றிலே. 7

நீடார் துளப மணநாறு
கச்சியி னிலமொன் றுங்
கோடா விளக்கொடு சேர்நில
மொன்றுங் குலவுபுக
ழேடார் சுனையின் மலர்நில
மொன்றுமற் றெப்பொழுதும்
வாடாமற் காட்டவும் வல்லதன்
றேதொண்ட மண்டலமே. சு

மேற்கோள்

1.

நேரிசை வெண்பா

நீல மழைமுகிலோ நீலமணிக் குன்றமோ
கோல நிறைந்த குரைகடலோ—சோலையிளங்
காயா வனமோ கழுநீரோ கண்ணமங்கை
மாயா வுனதுவடி வம். 8

2. காஞ்சிபுரத்தின் பழைய புராணம்

(விருத்தம்)

எந்நாளு மொருசுனையி லிந்திரநீ லப்போது
மலர்ந்தே தோன்றும் 9

பூதவஞ் சூத முதலாக
நின்ற பொதும்பிற்சந்த
பாதவம் போன்மிக்க வேளாளர்
தங்கிய பான்மையினு

---

7 திருக்கழுக்குன்றப் பதிகம், உ-வது திருவிருத்தம்.
8 தனிப்பாடல் (?)

லாதவஞ் சூழ்தரு பல்கோடி
தேச மனைத்தினுமா
மாதவஞ் செய்ததன் றேதமிழ்
சேர்தொண்ட மண்டலமே. எ

மேற்கோள்

பஃறொடை வெண்பா

வையக மெல்லாங் கழனியா வையகத்துச்
செய்யகமே நாற்றிசையுட் டேயங்கள் செய்யகத்து
வான்கரும்பே தொண்ட வளநாடு வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள் சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாங் கட்டியுட்
டானேற்ற மான சருக்கரை மாமணியே
யானேற்றான் கச்சி யகம் 10

இன்னும் புகழ்நிற்க வோர்பழிக்
காமற் றெழுப தின்மர்
துன்னுந் தழல்புக் கொளித்ததெல்
லாஞ்சுரு திப்பொருளா
யுன்னும் புரிசைத் திருவாலங்
காட்டி னுரைபதிக
மன்னுந் தமிழில் வகுத்ததன்
றேதொண்ட மண்டலமே. அ

மேற்கோள்

திருக்கடைக் காப்பு

(பண் - தக்கராகம்)

துஞ்ச வருவாருந் தொழுவிப் பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப் பாரு முனைநட்டாய்

---

10 காரிகை, செய்யுளியல், ௪—பஃறொடை வெண்பாவிற்கு உதாரணம்.

வஞ்சம் படுத்தொருத்தி வாணாள் கொள்ளும் வகைகேட்
டஞ்சும் பழையனூ ராலங் காட்டெம் மடிகளே. 11

கண்ணார் கருணைக் கடற்றொண்ட
மான்கைக் கடாசலத்தைத்
தண்ணாரு முல்லைக் கொடிதடுத்
தாட்கொண்ட தன்மையெல்லாம்
பண்ணாருஞ் செஞ்சொற் றிருமுல்லை
வாயிற் பதிகஞ்சொல்ல
மண்ணாழி காலமு நிற்பதன்
றேதொண்ட மண்டலமே.

மேற்கோள்

1. திருப்பாட்டு

(பண் - தக்கேசி)

சொல்லரும் புகழான் றொண்டமான் களிற்றைச்
சூழ்கொடி முல்லையாற் கட்டிட்
டெல்லையி லின்ப மவன்பெற வெளிப்பட்
டருளிய விறைவனே யென்று
நல்லவர் பரவுந் திருமுல்லை வாயி
லுதனே நரைவிடை யேறீ
பல்கலைப் பொருளே படுதுயா களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 12

2.

இரட்டைப்புலவர்கள் பாடிய ஏகாம்பரநாத ருலா

முல்லைக் கொடிதடுத்த மூதூரும் 13

---

11 திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருஆலங்காட்டுத் திருப்பதிகம், ௧.

12 சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவடமுல்லைவாயில் திருப் பதிகம், ௰.

13 —தாவுபரி

மல்லற்றொடைத் தொண்ட மான்கடவுந் தேரையொரு
முல்லைக் கொடிதடுத்த மூதூரும்.

நன்கண்மை யாக வயாவுற்ற
 நோய்கண்டு நாடரிய
புன்கண்மை நோக்கியுஞ் சற்றுமெண்
 ணாதொர் புலவனுக்காத்
தன்கண்மை சூலி முதுகினிற்
 சோறிட்ட தன்மையினால்
வன்கண்மை செய்யவும் வல்லதன்
 றேதொண்ட மண்டலமே. ௧௦

மேற்கோள்

இரட்டை யாசிரிய விருத்தம் - மடக்கு

பன்றி கோடுழுத நந்தி வெற்பணிரு பார
 வெற்பினை யடுக்கிலான்
பாணன் வெம்பிணை மெடுத்தவன் கொடிய
 பாணன் வெம்பிணை மெடுக்கிலான்
சென்று நென்முளையை வாரினோன் புதிய
 திங்கள் வெண்முளையை வாரிலான்
செட்டி தன்பழி தவிர்த்த வன்பரிவு
 செய்து பெண்பழி தவிர்க்கிலான்
அன்று சூலிமுது கன்ன மிட்டவனெ
 னன்னை கூன்முது களிக்கிலான்
அங்கை யாடரவின் வாயி லிட்டவனெ
 னல்கு லாடரவு தீண்டிலான்
வென்றி மேவுதொடை யாடை கீறினவ
 னோமி யாடையது கீறிலான்
வீறு லாவுதமி ழாறை மேவுபா
 மேஸ்வரன் புதல்வ னெல்லனே 14

14 ஆறைக் கலம்பகம் (?)

வீறா ரிசையு நசையும்வல்
லோரிந்த மேன்மைசற்றுந்
தேறாத போதிது செப்புவ
ரால்வரைத் திண்புயத்தே
பேறான பாணன் பிணஞ்சுமந்
தேவரும் பெற்றிகொண்டே
மாறாத கீர்த்தி படைத்ததன்
றோதொண்ட மண்டலமே. கக

மேற்கோள்

பாணன் வெம்பிண மெடுத்தவன்

இதனை மேற்காட்டிய "பனிக்கோடுக்க" வென்னும் பாடலிற் காண்க. 15

கொங்கலர் மாலையுங் கல்லாய்
விடுமன்பு கொண்டெறிந்தா
விங்கல ராய்விடுங் கல்லா
னதுமென்ப தின்றறிந்தோந்
செங்கலி னாலெறிந் தேசிவ
னார்பதஞ் சேர்வர்சங்க
மங்கையின் மேவிய சாக்கிய
னார்தொண்ட மண்டலமே. கஉ

மேற்கோள்

1. திருத்தொண்டத் தொகை

([illegible])

மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கு மடியேன். 16

---

15 சதகப்பாட்டு, ம. முன் பக்கம் பார்க்க.

16 கூ-வது "வார்கொண்ட வனமுலையாள" என்னும் திருப்பாட்டு.

2. புராண சாரம்

ஆசிரிய விருத்தம்

சங்கமங்கை வருவேளாண் டலைவர் காஞ்சிச்
சாக்கியரோ டியைந்தவர்தந் தவறுஞ் சைவத்
துங்கமலி பொருளுமுணர்ந் தந்த வேடந்
துறவாதே சிவலிங்கந் தொழுவோர் கண்டோ
ரங்கன்மலர் திருமேனி யழுந்தச் சாத்தி
யமருநாண் மறந்தொருநா ளருந்தா தோடிச்
செங்கலெறிந் திடுமளவின் மகிழ்ந்த நாதன்
திருவருளா லமருலகஞ் சேர்ந்துளாரே. 17

தெள்ளத் தெளிந்தவர் செய்தக்க
தோர்முறை செய்யிலையா
வெள்ளத் தனைமலை யத்தனை
யாமென்ப தின்றறிந்தே தா
முள்ளற் கரிய தொடையாடை
கீறிய தொன்றுமொரு
வள்ளற் றகைமையொ டொத்துள
தாற்றெண்ட மண்டலமே. கரு

மேற்கோள்

வென்றி மேவுதொடை யாடைகீறி னவன்

இதனையும் மேற்காட்டிய "பன்றி கோடுழுத" வென்னும் பாடலிற் காண்க. 18

தாயினு நல்ல தயையுடை
யோர்க டமதுடலம்
வீயினுஞ் செய்கை விடுவர்கொல்
லோதங்கண் மெய்ம்முழுதுந்

---

17 ௬௧-வது திருவிருத்தம்.

18 சதகப்பாட்டு, ம. 76-ம் பக்கம் பார்க்க.

தீயினும் வீழ்வர் முதுகினுஞ்
சோறிட்டுச் சீறரவின்
வாயினுங் கையிடு வாரவர்
காண்டொண்ட மண்டலமே. கச

மேற்கோள்

1.

விருத்தம்

துளையிட்ட முள்ளெயிற் றரவின்வாய் முழையிற்
றுறுத்திட்ட வநசத்தினுல் 19

2.

சொச்சகம்

மாறே செயுமரவின் வாய்நீண்ட வும்பயந்து
பேறே மணியுதவப் பெற்றகுல மென்னும
லூறே பரத்தையர்க ளூன்வாயில் வைத்தகுறி
யாறேன் களந்தை யழகப் பெருமாளே. 20

மீனவர் நாட்டினுஞ் செம்பியர்
நாட்டினும் வில்லவர்கோ
னவ னட்டினு மிக்குதென்
பார்க ளதிசயமோ
கோனவ னட்டினும் முளையமு
தாகிற் குலவமுதார்
வானவர் நாட்டினு மிக்கதன்
றேதொண்ட மண்டலமே. கரு

---

20 தனிப்பாடல் (?)

மேற்கோள்

புராண சாரம்

ஆசிரிய விருத்தம்

மன்னியவே ளாண்டொன்மை யிளைசை மாறர்
வறுமையா லுணவுமிக மறந்து வைகி
யுன்னருநள் ளிருண்மழையி லுண்டி வேண்டி
யும்பர்பிரா னணையவய லுழுது வித்துஞ்
செந்நென்முளை யமுதமனை யலக்கா லாக்கிச்
சிறுபயிரின் கறியமுது திருந்தச் செய்து
பன்னலரு முணவருந்தற் கெழுந்த சோதிப்
பரலோக முழுதாண்ட பான்மை யாரே. 21

சாய்த்திட் டவர்க்குத் திருமேனி
முன்கையைச் சந்தனமாத்
தேய்த்திட் டவர்க்கெவர் நேரென்ப
பாலுங்கஞ் செந்தழலிற்
றோய்த்திட் டவருக்குச் சர்வாங்க
முந்திரி தூள்படவே
மாய்த்திட் டவர்க்கரி தோவெளி
தோதொண்ட மண்டலமே. கக

மேற்கோள்

சேக்கிழார் புராணம்

ஆசிரிய விருத்தம்

மாறுகொடு பழையனூர் நீலி செய்த
வஞ்சனையால் வணிகனுயி ரிழப்பத் தாங்கள்
கூறியசொற் பிழையாது துணிந்து செந்தீக்
குழியிலெழு பதுபேரு மூழ்கிக் கங்கை

---

21 எ-வது திருவிருத்தம்

யாறணிசெஞ் சடைத்திருவா லங்காட் டப்ப
ரண்டமுற நிமிர்ந்தாடு மடியின் கீழ்மெய்ப்
பேறுபெறும் வேளாளர் பெருமை யெம்மாற்
பிரித்தளவிட் டிவளவெனப் பேச லாமோ. 22

கேட்டாலு மின்பங் கிடைக்குங்கண்
டீர்கொண்ட கீர்த்தியொடு
பாட்டா லுயர்ந்த புகழேந்தி
சொன்ன படியறிந்து
பூட்டார் சிலைமன்னன் வையம்
பெறினும்பொய் தானுரைக்க
மாட்டா ரெனச்சொன்ன நாட்டார்
திகழ்தொண்ட மண்டலமே. கஎ

மேற்கோள்

ஆசிரிய விருத்தம்

வையம் பெறினும் பொய்யுரைக்க
மாட்டார் தொண்ட நாட்டாரென்
றையன் களந்தைப் புகழேந்தி
யாண்டா ருரைக்கு மவரோநீ
ரெய்யுஞ் சிலைசை மதவேளே
யெழுபார் புரக்கு மெங்கோவே
யையந் தவிர்த்த பெருமானே
யாவோ மடியோ மாவோமே. 23

கையா றிரண்டுடைக் காளைதன்
வாயிற் கவிதைகொண்ட
பொய்யா மொழிக்கும் புகலிட
மானது பொய்கையெல்லாஞ்

---

22 மூ-வது திருவிருத்தம்.

23 ஓர் பாண்டியன் (?) தனிப்பாடல்.

செய்யார் கமல மலரவண்
டானங்கள் சென்று திகழ்
மையார் குவளை வயல்புடை
சூழ்தொண்ட மண்டலமே. கஅ

மேற்கோள்

நேரிசை வெண்பா

விழுந்ததுளி யந்தரத்தே வேமென்றும் வீழ்ந்தா
லெழுந்து சுடர்சுடுமென் றேங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தே பெய்வளையும் போயினளே
பொய்யா மொழிப்பகைஞர் போல். 24

விண்ணிற் பிறக்கும் புகழ்க்குன்ற
நாடன் விளங்குதமிழ்ப்
பண்ணிற் பிறக்கும் பெரிய
புராணம் பகர்ந்தபிரா
னெண்ணிற் பிறக்கும் பததூளி
யென்றலை யெய்தவந்த
மண்ணிற் பிறக்கவும் வைக்குங்கொ
லோதொண்ட மண்டலமே. கசு

மேற்கோள்

1. சேக்கிழார் புராணம்

ஆசிரிய விருத்தம்

சேக்கி ழானமது தொண்டர் சீர்பரவ
நாமகிழ்ந் துலக மென்றுநம்
வாக்கி னலடி யெடுத்து ரைத்திட
வரைந்து நூல்செய்து முடித்தனன்

---

24 முருகக்கடவுள் தனிப்பாடல்.

காக்கும் வேல்வளவ நீயி தைக்கடிது
  உ கேளெ னக்கனக வெளியிலே
பூக்க மானதிரு வாக்கெ ழுந்தது
  திருச்சி லம்பொலியு முடனெழ. 25

2.

நேரிசை வெண்பா

கொண்டறவழ் தண்டலைசூழ் குன்றநகர்ச் சேக்கிழா
ரொண்டரணி யோருய்ய வோதினார்—தண்டலில்சீ
ரேன்றபுகழ் நாலா யிரத்திருநூற் றெண்பத்து
மூன்று திருவிருத்த மும். 26

தேமாம் பொழிறிகழ் சம்பந்தர்
  வாழுஞ் சிரபுரம்போற்
றேமா தவஞ்செய்த தெத்தனை
  யோதென் றமிழியல்சேர்
பாமாலை சூட மதுரநல்
  வாயிற் பதியுடனே
மாமா சிலாமணிச் சம்பந்தன்
  வாழ்தொண்ட மண்டலமே. உ0

மேற்கோள்

கட்டளைக் கலித்துறை

பொருமா கடலிடைத் தோன்றலல் லாது புணரிவெள்ளந்
தருமா மணியொன்று கண்டதுண் டோவையந் தந்தவனுந்
திருமாலும் போற்றுந்தென் னூரிற் சம்பந்த தேசிகனா
மொருமாசி லாமணி பேரின்ப வாரி யுதவியதே. 27

---

25 கூசு-வது திருவிருத்தம்.

26 தனிப்பாடல் (?)

27 தனிப்பாடல் (?)

பொய்யக மாகிய மாயாப்
பிரபஞ்சம் போக்குதற்குக்
கையக நெல்லிக் கனியதன்
றேகச்சி யேபெரிதாய்
மெய்யக மேபுரி காரிகைப்
பாட்டில் விளங்கவைத்த
வையக மென்னுந் தமிழே
புனைதொண்ட மண்டலமே. உசு

மேற்கோள்

பஃறொடை வெண்பா

வையக மெல்லாங் கழனியா வையகத்துச்
செய்யகமே நாற்றிசையுட் டேயங்கள் செய்யகத்து
வான்கரும்பே தொண்ட வளநாடு .
. . . .

இப்பாடலை யேழாவது பாட்டின் மேற்கோளிற் காண்க. 28

அஞ்சொன் முதுதமிழ் நால்வேந்தர்
வைகு மவையிலெளவை
செஞ்சொற் புனைகின்ற வேளாளர்
வைகுஞ் சிறப்புடைத்தால்
விஞ்சிய வேழ முடைத்தென்னும்
பாடல் விளம்பிப்பின்னும்
வஞ்சி வெளிய வெனும்பா
மொழிதொண்ட மண்டலமே. உஉ

மேற்கோள்

1.

நேரிசை வெண்பா

வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்

28 74-ம் பக்கம் பார்க்க.

றென்னாடு முத்துடைத்து தெண்ணீர் வயற்றொண்ட
நன்னாடு சான்றோ ருடைத்து. 29

2.

இன்னிசை வெண்பா

வஞ்சி வெளிய குருகெல்லாம் பஞ்சவன்ற
றன்மாடக் கூடலிற் கல்வலிது
சோழ னுறந்தைக் கரும்பினிது தொண்டமான்
கச்சியிற் காக்கை கரிது. 30

படவேங் கடற்கட லன்னதொல்
காப்பியப் பாயிரஞ்சொல்
விடவேங் கடலின்றி யேபனம்
பாரர்மற் றெல்லைசொல்லக்
கடவேங் கடலன்ன செந்தமிழ்க்
கேயென்று காட்டுதற்கு
வடவேங் கடந்தென் குமரியென்
றூர்தொண்ட மண்டலமே. ௨௫

மேற்கோள்

தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம்

வடவேங்கடந் தென்குமரி
யாயிடைத்
தமிழ்கூறு நல்லுல கத்து
வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலி
னெழுத்துஞ் சொல்லும் பொருளு நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவ

---

29 ஔவையார் தனிப்பாடல்.

30 ஷை யாப்பருங்கலம், ௯௫—விருத்தி பார்க்க.

னிலந்தரு திருவிற் பாண்டிய னவையத்
தறங்கரை நாவி னான்மறை முற்றிய
வதங்கோட் டாசாற் கரிறபத் தெரித்து
மயங்கா மரபி னெழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பி னைந்திர நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே. 31

இடஞ்சூழுங் காரிகை யாப்பிற்
குதாரண மென்றுகொண்ட
விடஞ்சூ ழரவென் றெழுவாயிற்
றோற்றி வெறிகமழ்வேங்
கடஞ்சூழ் கரடக் கடாக்களிற்
றுனியற் காளிம்பன்மேல்
வடஞ்சூ ழனச்சொன்ன பாமாலை
யுங்கொண்ட மண்டலமே. உச

மேற்கோள்

ஆசிரிய விருத்தம்

விடஞ்சூ ழரவி னிடைநுடங்க
வில்வாள் வீசி விரையார்வேங்
கடஞ்சூழ் நாடன் காளிம்பன்
கதிர்வேல் பாடு மாதங்கி
வடஞ்சூழ் கொங்கை மலைதாந்தாம்
வடிக்க ணீல மலர்தாந்தாந்
தடந்தோ ளிரண்டும் வேய்தாந்தா
மென்னுந் தன்கைத் தண்ணுமையே. 32

---

32 காரிகை, செய்யுளியல், க—ஆசிரிய விருத்தத்திற்கு உதாரணம.

படையிற் கொடையிற் பெரியோனை
யக்கணம் பாடக்கம்பற்
கடையக் கொடுத்திட வாங்கின
னுலரு மந்தமுத்தைக்
கடையிற் கடைசிய ருப்பிற்கு
மாறக் களகமென்ன
மடையிற் றாளஞ் சொரிவயல்
சூழ்தொண்ட மண்டலமே. உரு

மேற்கோள்

வெண்பா

புக்க விடைதழுவிக் கோடுழுத புண்களெல்லாந்
திக்கிலுயர் காளிம்பன் றென்புழன்மா—னக்கணமே [கு
தோள்வேது கொண்டிலளேற் சுந்தரப்பொற் றோன்றலுக்
வாழ்வேது கண்டிலேன் மற்று. 33

கிளப்பார் கிளப்ப வடிமடக்
காகக் கெழுமியசொல்
லளப்பா மதுரத் துடன்பூக்
கமலமென் றுய்ந்தெடுத்த
களப்பாள னெற்குன்ற வாணனந்
தாதிக் கலித்துறையே
வளப்பார் புகழை வளர்ப்பிக்கு
மாற்றொண்ட மண்டலமே. உசு

மேற்கோள்

1. திருப்புகலூ ரந்தாதி

கட்டளைக் கலித்துறை

பூக்க மலத்து விழிவளர் வானென்றும் போற்றியவூர்
மாக்கம லத்து மகிழ்கின்ற வூர்மது வாணிறைந்த

---

33 கம்பர் தனிப்பாடல்.

தேக்கம லத்து வழியே பாக்குந் திருப்புகலூர்
நோக்க மலத்துயர் சோதிநெஞ் சேநம்மை நோக்குதற்கே. 34

2. இதுவுமது

வளப்பா டிலாத வெருக்கு மிதழி மலருமன்ப
ருளப்பா டுறைபுக லூரருக் காதலி னோதிமிக்கோர் [சொற்
தளப்பா டிதுதமிழ்க் கென்னினுஞ் சாற்றுவன் சந்திரன்
களப்பாள னெற்குன்றை வாணனந் தாதிக் கலித்துறையே.35

போனத்தி னாலோர் புறவினை
யேற்றவன் போலவுமோ
ரேனத்தி னாலெதி ரேற்றவன்
போலவு மேன்றுகொண்ட
மீனத்தி னான்மற் றொருகோடி
செம்பொன் விலைகொடுத்த
மானத்தி னாலும் வலியதன்
றோதொண்ட மண்டலமே. உஎ

கூட்டுங் கரந்தங் கொழுநர்க்கல்
லாமற் கொடிவெருவ
வோட்டும் பொழுதுங் கரங்குவி
யாரமு தட்டுதற்கு
மூட்டுந் தழற்கொரு முன்றினில்
லார்கற்பு மூட்டியெரி
மாட்டுந் திறமனை தோறுமுண்
டேதொண்ட மண்டலமே. உஅ

பின்போர் தமைக்கண்டு பாவித்த
தோவன்றிப் பின்புவந்தோர்
தன்போ னடக்கப் பணிப்பித்த
தோதமிழ்க் கேயிரங்கி

முன்போம் புலவர்க்குப் பின்போயி
ஞனு முகுந்தனிது
வன்போ மனத்தினி லன்போசொல்
வீர்தொண்ட மண்டலமே. ௨௯

மேற்கோள்

1.

நேரிசை வெண்பா

கணிகண்ணன் செல்கின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டா—துணிவுடைய
செந்நாப் புலவனுஞ் செல்கின்றே னீயுநின்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள். 36

2.

இதுவுமது

முன்போம் புலவற்கு மூதறிவாற் பாய்சுருட்டிப்
பின்போஞ் சவரிப் பெருமாளே—யனபாகப்
பேய்முலைப்பா லுண்டவனே பேதையே னின்னமொரு
தாய்முலைப்பா லுண்ணமற் று. 37

சென்னியிற் சென்ற துகிலோடு
சௌனறு சிலரிழிந்தார்
பன்னியிற் சென்றது போலிழிந்
தார்சிலர் பாங்குடனே
பொன்னியிற் சென்று கரையேறி
னரைப் புணர்ந்ததன்று
வன்னியிற் சென்று கரையேறி
னார்தொண்ட மண்டலமே. ௩௦

---

36 திருமழிசை யாழ்வார் தனிப்பாடல்.

37 தனிப்பாடல் (?)

பொள்ளா றுழைவழி போய்த்தலை
நீட்டும் புலவன்முன்னுள்
கள்ளாறு செஞ்சொற் கலம்பக
மேகொண்டு காயம்விட்ட
தெள்ளாறை நந்தி யெனுந்தொண்ட
டான்கலி தீர்ப்பதற்கு
வள்வார் முரச மதிர்த்தாண்ட
துந்தொண்ட மண்டலமே. ௩௧

மேற்கோள்

1.

விருத்தம்

துயிலுணர்ந்து வெட்டுமெங்கள் தொண்ட வேந்தே. 38

2. நந்திக் கலம்பகம்

ஆசிரிய விருத்தம்

வானுறு மதியை யடைந்ததுன் வதனம்
வையக மடைந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை யடைந்ததுன் வீரங்
கற்பக மடைந்ததுன் கரங்க
டேனுறு மலரா ளரியிடஞ் சேர்ந்தாள்
செந்தழல் புகுந்ததுன் மேனி
யானுமென கலியு மெவ்விடம் புகுவே
மெந்தையே நந்திநா யகனே. 39

நீளத் திரிந்தென்று வெண்பாவி
னலன்று நின்றையர்கோன்
காளத்தி வாணனைப் பாடிய
பாடல் கருதுமண்ட

---

39 இறுதிப் பாட்டு.

கோளத் தினுஞ்சென்று பாதாளம்
புக்குக் குலவுசக்ர
வாளத் தினுஞ்சென்ற தாலெளி
தோதொண்ட மண்டலமே. ௯௨

மேற்கோள்

நேரிசை வெண்பா

நீளத் திரிந்துழன்றாய் நீங்கா நிழற்போலு
நாளைக் கிருத்தியோ நல்குரவே—காளத்தி
நின்றைக்கே சென்றக்கா னீயெங்கே நானெங்கே
யென்றைக்குக் காண்பே னினி. 40

பாகொன்று சொல்லியைப் பார்த்தமை
யாலன்று பாண்டியன்மு
னாகின்ற சிற்றிடை வேழம்பக்
கூத்தி நொடிவரையிற்
சாகின்ற போது தமிழ்சே
ரயன்றைச் சடையன்றன்மேன்
மாகுன் றெனச்சொன்ன பாமா
லையுந்தொண்ட மண்டலமே. ௯௩

மேற்கோள்

1.

கட்டளைக் கலித்துறை

மாகுன் றனையபொற் றோளான்
வழுதிமன் வான்கரும்பின்
பாகொன்று சொல்லியைப் பார்த்தெனைப்
பார்க்கிலன் பையப்பையப்

---

40 மதுரகவிராயர் தனிப்பாடல்

போகின்ற புள்ளினங் காள்புழற்
கோட்டம் புகுதவிரேற்
சாகின் றனளென்று சொல்வீ
ரயன்றைச் சடையனுக்கே. 41

2.

ஆசிரியப்பா

இரவ லாளரே பெருந்திரு வுறுக
வரவுமிழ் மணியு மலைகட லமிர்தத்
திங்கட் குழவியுஞ் சிங்கப் பாலுங்
குதிரை மருப்பு முதிரை வாலு
மீதென மொழியினு மில்லென மொழியான்
சடையனை யயன்றைத் தலைவனை நீர்போ
யுடையது கேளு முறுதியுள் ளோரே. 42

சொல்லையி லாகச் சொரிகவி
மாரி சுருதிவல்லான்
செல்லையில் சோலைக் குறுங்குடி
வாழ்நம்பி சென்றுகண்ட
வெல்லையி னீடுங் காடக்
கடாக்களி றென்றுசொன்ன
வல்லையிற் காளத்தி வாழ்வா
னதுந்தொண்ட மண்டலமே. ௩௪

மேற்கோள்

கட்டளைக் கலித்துறை

பொாடக் கயம்பிடி யென்றான் மதனணிப் பூவையுமா
தாடக் கமுஞ்சற் றறிந்தில ளேதனைத் தாள்பணியா
முாடக் கவுடக் கெடிமண்ட லீகர் முடிபிடுங்குங்
காடக் கடாக்களிற் றுய்வல்லை மாநகர்க் காளத்தியே. 43

---

41 ஓர் ஆடல்மகளின் தனிப்பாடல்.

42 இது ஒரு ஆடல்மகளின் தனிப்பாடல் என்றோ, அல்லது, அவள் கூறும் வழுதியின் தனிப்பாடல் எனறோ கருதப்படுகிறது.

43 திருக்குறுங்குடி நம்பி தனிப்பாடல்.

நூலார் கலைவல்ல செம்பியன்
கேட்க நொடித்துமிக்க
கோலா கலனொட்டக் கூத்தனை
யன்றுதற் கோலியென்று
மேலார் கவிசொல்லி நெய்த்தானத்
தேசென்று வென்றுகொண்ட
மாலார் களந்தைப் புகழேந்தி
யுந்தொண்ட மண்டலமே. ௩௫

மேற்கோள்

1

ஆசிரிய விருத்தம்

தற்கோ லிப்பூ சற்பா சத்தே
தப்பா மற்சா கைக்கே நிற்பீர்
முற்கோ லிக்கோ லிப்பூ சித்தே
முட்டா மற்சே வித்தே நிற்பீர்
வற்றா நெட்டோ டைப்பா ரச்சேன்
மைப்பூ கத்தே றித்தா விப்போய்
நெற்றா ளூற்றா லைப்பா கிற்சேர்
நெய்த்தா னத்தா னைச்சே வித்தே. 44

2

இதுவுமது

விக்கா வுக்கா வித்தா விப்போய்
விட்டார் நட்டார் சுட்டேர் புக்கா
ரிக்கா யத்தா சைப்பா டற்றே
யிற்றே டிப்போய் வைப்பீர் நிற்பீ
ரக்கா டப்பேய் தொக்கா டச்சூ
ழப்பா டத்தீ வெப்பா டப்பூ
ணைக்கா டக்கா னத்தா டப்போ
நெய்த்தா னத்தா னைத்தியா னித்தே. 45

---

44 புகழேந்திப் புலவர் தனிப்பாடல்.
45 ஒட்டக்கூத்தர் தனிப்பாடல்.

ஏரி னியற்றுங் களக்கோட்டை
யீந்தன்ன மிட்டுநல்ல
பாரி பறித்தென்னும் பாடல்கொண்
டோன் பண்பு சேர்பழுய
னூரி லிருப்பவ னௌவைதன்
பாடற் குவந்தபிரான்
மாரி யெனத்தரு கைக்காரி
யுந்தொண்ட மண்டலமே. ௩௬

மேற்கோள்

வெண்பா

பாரி பறித்த பறியும் பழையனூர்
காரி கொடுத்த களக்கோடும்—சேரமான்
வாரா யெனவழைத்த வாய்மையு மிம்மூன்று
நீலிச்சிற் றூடைக்கு நேர். 46

விழுவே னெனச்சென்று வீழ்ந்தாரி
லோர்மைந்தன் வேறுபட
வுழுவே லியிற்சென் றெருநீலி
முன்கை யுடையவற்குக்
கொழுவே படைக்கல மென்றுசொல்
லாமுனங் கூறியசொல்
வழுவே யெனப்பொன்று வல்லாள
னுந்தொண்ட மண்டலமே. ௩௭

மேற்கோள்

பழமொழி

முன்கை யுடையார்க்குக் கொழுவே படைக்கலம். 47

---

46 ஔவையார் தனிப்பாடல்.

வீறார் நெருப்பிடை வீழ்த்தவும்
　　பாடிமுன் வீழ்த்ததற்பி
னூறா நெருப்பினை யாறவும்
　　பாடி யடியவரைச்
சீறாத தெய்வத் திருஞான
　　சம்பந்தர் செய்ததமிழ்
மாறாது நிற்கப் படைத்ததென்
　　பார்தொண்ட மண்டலமே. ௩௮

ஏத்தளித் தாயிரம் பாடல்கொண்
　　டேநிறை யீந்தெருமைப்
போத்தளித் தாடையும் பூணார
　　முந்தந்து போதரவாய்க்
காத்தளித் தாதரித் திட்டதல்
　　லாமலுங் கம்பருக்கு
மாத்தளித் தாட்பட்டு வாழ்வதன்
　　றோதொண்ட மண்டலமே. ௩௯

புறவோ டுற்றசை போக்கிய
　　வேந்தன் புரிந்ததினு
மறவோ கொடிது கொடிதுகண்
　　டீரற னன்றுமற்றுப்
பிறவோ மறுத்துரை செய்யான்
　　மிகச்சிரம் பேர்த்துவைத்த
மறவோனைத் தாங்கிய வையமன்
　　றோதொண்ட மண்டலமே. ௪௰

மேற்கோள்

1.

தலையிங் தாவெனு மைந்தா தாலோ தாலேலோ
தண்குன் றைப்பதி யெல்லா தாலோ தாலேலோ. 48

---

48 எல்லப்பன் பிள்ளைத் தமிழ் (?)

2.

வெண்பா

ஆலெங்கே யங்கே யரும்பறவை யாற்றயிலு
மாலெங்கே யங்கே மலர்மடந்தை—சோலைதொறுஞ்
செங்கேத கைமணக்குஞ் செங்குன்றை யெல்லனெங்கே
யங்கே யிரவலரெல் லாம். 49

வள்ளல் சிலைப்பெரு மாணச்சர்
சாத்தர் வழுதிமுதற்
றள்ளுவ ணர்க்குந் தலையான
பேரையுந் தன்னுரையை
விள்ளுவ ணர்க்குந் திருக்காஞ்சி
வாழ்பரி மேலழகன்
வள்ளுவ ணர்க்கு வழிகாட்டி
ஞன்றொண்ட மண்டலமே.

மேற்கோள்

1.

வெண்பா

தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமே லழகர் பருதி—திருமலையர்
மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்
கெல்லையுரை செய்தா ரிவர். 50

2.

இதுவுமது

பாலெல்லா நல்லாவின் பாலாமோ பாரிலுள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற்

---

49 பல பட்டடைச் சொக்கநாதப் புலவர் தனிப்பாடல்.
50 தனிப்பாடல் (?)

பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகர்
தெரித்தவுரை யாமோ தெளி. 51

கண்ணுறலென் னெஞ்சத் தழுக்கறுத்
தேகடை யேன்றனையுந்
தண்ணுறுங் கூலிக் கடிமைகொண்
டேதடுத் தாண்டருளி
யெண்ணுறுங் காஞ்சித் திருக்குறிப்
புத்தொண்ட ரென்னுந்தெய்வ
வண்ணார் வடிவு கொடுபோந்
ததுந்தொண்ட மண்டலமே. ௪௨

மேற்கோள்

1. திருத்தொண்டத் தொகை

(பண் - கொல்லிக் கௌவாணம்)

திருக்குறிப்புத் தொண்டர்தம் மடியார்க்கு மடியேன் 52

2. புராணசாரம்

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கொந்தலர்பூம் பொழிற்கச்சி நகரே காலிக்
குலத்தலைவர் தவர்குறிப்புக் குறித்து ளார்பால்
வந்திறைவர் நமக்கின்று தாரீ ராகில்
வருந்துமுட லெனவாங்கி மாசு நீத்த
கந்தைபுல ராதொழிய மழையு மாலைக்
கடும்பொழுதும் வரக்கண்டு கலங்கிக் கன்மேற்
சிந்தமுடி புடைப்பளவிற் றிருவே கம்பர்
திருக்கைகொடு பிடித்துயர்வான் சேர்த்தி னாரே. 53

சயிலைத் திருமுலைப் பாலுறு
மட்டுண்ட தண்டமிழாற்

---

51 பரிமேலழகர் உரைப் பாயிரம்.

52 ரு-வது "மும்மையால்" என்னும் திருப்பாட்டு.

53 உஉ-வது திருவிருத்தம்.

குயிலைப் பணிகொண்டு வெந்தற
மாண்ட குடத்திலென்னை
யயிலைப் பொருகண் ணதிருப
மென்கிளி யாக்குவித்த
மயிலைப் பதியுஞ் சிவநேச
ருந்தொண்ட மண்டலமே. சரு

மேற்கோள்

1. பெரிய புராணம்

(விருத்தம்)

தம்மை யுள்ளவா றறிந்தபின் சங்கரற் கடிமை
மெய்ம்மை யேசெயும் விருப்பினின் மிக்கதோ ரன்பாற்
பொய்ம்மை நீக்கிமெய்ப் பொருளிது வெனக்கொளு முள்ள
செம்மை யேபுரி மனத்தினார் சிவநேச ரென்பார். 54 [ச்

2. திருக்கடைக் காப்பு

(பண் - சீகாமரம்)

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சுரமமர்ந்தா
னொட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய். 55

பிணிக்கோர் மருந்தனை யார்வாயி
லாரன்று பிஞ்ஞகனார்
பணிக்கோர் குறைவின்றி யந்தரி
யாகத்திற் பண்ணுவித்த
வணிக்கோ யிலும்பொற் சிகரமும்
வீதியு மாடரங்கு
மணிக்கோ புரமு முடையதென்
பார்தொண்ட மண்டலமே. சசா

---

54 திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம், கOகாடு-வது திருவிருத்தம்.

55 திருஞானசம்பந்த சுவாமிகள் திருமயிலைத் திருப்பதிகம், க.

மேற்கோள்

1. திருத்தொண்டத் தொகை

(பண் - கொல்லிக் கௌவாணம்)

துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியேன். 56

2. புராணசாரம்

ஆசிரிய விருத்தம்

ஞாயிலார் மதிற்றொண்ட நாட்டு மேன்மை
நண்ணுமயி லாபுரியின் வேளாண் டொன்மை
வாயிலார் மலைவில்லா னடியே போற்றி
மறவாமை தலைநின்ற மனமே செம்பொற்
கோயிலா வுயர்ஞானம் விளக்கா நீராக்
குலவியவா னந்தமன்பே யமுதாக் கொண்டு
தாயிலா னிருசரண நிகழ வேத்துந்
தன்மையா ரருள்சேர்ந்த நன்மை யாரே. 57

பேணிய செந்தமிழ்த் தாதனுக்
கேயன்பு பெற்றமையா
ணிய கம்பன் சிவிகையுந்
தாங்கி நயந்ததமிழ்
பூணிய நின்றதும் பொச்சாப்பி
லாது புகுந்துபின்னும்
வாணியத் தாதற்குத் தாதா
னதுந்தொண்ட மண்டலமே. சஙு

மேற்கோள்

கட்டளைக் கலித்துறை

ஓங்கிய செந்தமிழ்த் தாதற் கடிமையவ் வூரதனு
ணுங்கவி சொல்வது மில்லையென் றேகம்ப நாட்ன்சொல்ல

---

56 அ-வது " கறைக்கண்டன் " என்னும் திருப்பாட்டு.
57 நிசு - வது திருவிருத்தம்.

வாங்கவ னேறுஞ் சிவிகை சுமந்து மடைப்பையிட்டுந்
தாங்கவி கொண்டதுங் கூவந்தி யாக சமுத்திரமே. 58

பட்டாபி டேகம் பரித்தார்க்குண்
டோவிந்தப் பான்மைகெடக்
கெட்டார் கவிசொல்லி வந்தோர்க்கெல்
லாம்பொற் கிழியளித்துந்
தட்டா னுதவிடுங் கூவந்தி
யாக சமுத்திரத்தின்
மட்டார் கவிகொண்ட மண்டலங்
காண்டொண்ட மண்டலமே. சசு

மேற்கோள்

கட்டளைக் கலித்துறை

மட்டாருஞ் செங்கழு நீர்மணி மார்பனை வாழ்த்துமந்தக்
கிட்டாத யாசகர் கிட்டிவந் தாலதைக் கேட்டுமுன்னாட்
பட்டோலை வாசித் தவரவர்க் குள்ள பரிசிலெல்லாந்
தட்டா னளிப்பதுங் கூவந்தி யாக சமுத்திரமே. 59

தன்னா லிசைபெறக் கூவந்தி
யாக சமுத்திரமென்
றன்னா னொருவ னெடுந்தூண்டி
லிட்டட வாங்கொருமீன்
பொன்னா லமைத்துப் பொருந்திடச்
சேர்த்துப் புகழ்கொண்டதான்
மன்னா வுலகத்து மன்னிய
சீர்த்தொண்ட மண்டலமே. சஎ

மேற்கோள்

வெண்பா

இடுவார் சிலரு மிடாதார் பலரும்
வடுவிலா வையத் திருக்கப்—படுபாவீ

58 தனிப்பாடல். 59 தனிப்பாடல் (?)

கூவத்து நாரணனைக் கொன்றாயே கற்பகப்பூங்
காவெட்ட லாமோ கரிக்கு. 60

ஈட்டால மன்னவன் பின்னை
யறிய வெனக்கெனமுன்
கேட்டா னதற்குமுன் சென்றதவ்
வாருயிர் கேட்டவர்க்கு
நீட்டா விடினுந் தனக்கெனக்
கேட்பினு நெஞ்சமுய்ய
மாட்டா திரண்டுமுன் கற்றில
தோதொண்ட மண்டலமே. சஅ

உளத்துத் தயையற்ற வோர்புல
வோனுக் குடையுதவிக்
குளத்துப் புனலை யுடுத்துநின்
றேபின்பு கூவியவைக்
களத்துப் புகுதக் கலையுடுத்
தேகரை யேறிவந்த
வளத்துப் புகழ்பெற்ற வல்லாள
னுந்தொண்ட மண்டலமே. சகூ

வில்லைச் செருப்பிட்ட காலா
லுதைத்து வியனுலகிற்
சொல்லற் கரிய புகழ்கொடுத்
தோன்றாட்ட வீரன்றன்னாற்
பல்லக்கிலே யன்றி மண்படு
மோவெனும் பாடல்கொண்ட
வல்லப் பதிக்கச்சி யப்பனும்
வாழ்தொண்ட மண்டலமே. ருo

---

60 ஒப்பிலாமணிப் புலவர் தனிப்பாடல்.

மேற்கோள்

வெண்பா

மண்படுமோ வெய்யலிலே வாடுமோ புல்லரிரு
கண்படுமோ வன்பாகக் கற்றவற்கு—மண்புகழ
மெச்சியப்பா லும்புகழும் வீறுவல்லை யாளவந்த
கச்சியப்ப னையுதைத்த கால். 61

மிண்டரை வெல்லும் வளர்சிங்க
ராயன் விலைகொடுப்பத்
தண்டமிழ் மேக முறத்தூரில்
வேதியன் றானும்விற்பக்
கொண்டவன் பின்சென்று மண்டலத்
தேபுகழ் கொண்டபிரான்
வண்டமிழ்க் கும்ப னனதாரி
யுந்தொண்ட மண்டலமே. ௫௧

மேற்கோள்

வெண்பா

கம்பனென்றுங் கும்பனென்றுங் காளியொட்டக் கூத்தனென்றுங்
கும்பமுனி யென்றும்பேர் கொள்வரே—அம்புவியின்
மன்னு வலர்புகழும் வாயலனை தாரியப்ப
னங்காளி லேயிருந்தக் கால். 62

கொல்லையிற் பாற்பசு மேய்ப்போன்
கறப்பவன் கொண்டுசென்றே
யெல்லையிற் சேர்ப்பவன் பாலடு
வோனிவை யித்தனையும்
சொல்லையிற் பாவல னோரோர்
கவிசொல்லச் சொல்லநல்கும்
வல்லையிற் காளத்தி வாழ்வான
துந்தொண்ட மண்டலமே. ௫௨

61 வீர கவிராயர் தனிப்பாடல். 62 தனிப்பாடல்.

மேற்கோள்

1.

வெண்பா

பள்ளமே செய்யுட் பயிரையெல்லாங் கொள்ளுமுடி
வெள்ளமே யும்மையுநாம் வென்றோமே—புள்ளலம்பும்
பொற்காவி வாவிவல்லைப் பூபதிகா ளத்தியெனு
நற்கார் நெடுமுடியை நட்டு. 63

2.

கட்டளைக் கலித்துறை

பெற்றா ளொருபிள்ளை யென்மனை யாட்டியப் பிள்ளைக்குப்
பற்றாது கஞ்சி குடிக்குந் தரமன்று பாலிரக்கச் [பால்
சிற்றா ளில்லைமற் றெல்லா வறுமையுந் தீரவொரு
கற்றாத் தரவல்லை யோவல்ல மாநகர்க் காளத்தியே. 64

3.

இதுவுமது

வழிமேல் விழிவைத்து வாடாம லென்மனை யாளைமற்றோர்
பழியாமற் பிள்ளையும் பாலென் றழாமற் பகைரொனுஞ்சொன்
மொழியாம லென்னை வரவிட்ட பாவி முசித்துச்சதை
கழியாம லாவளித் தான்வல்ல மாநகர்க் காளத்தியே. 65

சீருறும் பாடல்பன் னீரா
யிரமுஞ் செழுந்தமிழ்க்கு
வீரர்தஞ் சங்கப் பலகையி
லேற்றிய வித்தகனூர்
பாரதம் பாடும் பெருந்தேவர்
வாழும் பழம்பதிகாண்
மாருதம் பூவின் மணம்வீ
சிடுந்தொண்ட மண்டலமே. ருரு

---

63 திருக்குறுங்குடி நம்பி தனிப்பாடல்.
64 ஷை
65 ஷை

மேற்கோள்

வெண்பா

கடல்கிழிய வோடுங் கலம்போல வொன்று
ருடல்கிழிய வொள்வாள் விதிர்த்து—மடல்கிழியும்
பைம்பொற்றார் மன்னர் படுநடைவே யோடிற்றே
செம்பொற்றண் டேந்தினான் றேர். 66

சொல்லாயு மௌவை பரிவாய்த்
தனக்கிட்ட சோறுலக
மெல்லாம் பெறுமென்று பாட்டோதப்
பெற்றவ ளின்னருளாற்
கல்லாரற் சுற்றிக் கிணறேறிப்
பாயுங் கழனிபெற்றான்
வல்லாண்மைப் பூத மகிபால
னுந்தொண்ட மண்டலமே. ௫௪

மேற்கோள்

வெண்பா

வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டு
முரமுரலு ரும்புளித்த மோரும்—விரகுடனே
புள்ளலூர்ப் பூதன் புகழ்ந்து விருந்திட்டா
னெல்லா வுலகும் பெறும். 67

ஆரான் முடியுமிக் காரியந்
தோடவி ழாத்திமலர்த்
தாரானை வேம்பின் றொடையானைப்
பெண்ணையந் தாமனையும்
போராடிக் காவலில் வைத்தவப்
பாட்டும் புனைந்ததன்றே
வாரார் மோட்டிளங் கொங்கைநல்
லாய்தொண்ட மண்டலமே. ௫௫

66 பெருந்தேவனார் பாரதம் (?) 67 ஔவையார் தனிப்பாடல்.

குழுவார் குடிமக்க ளானகண்
ணுளர் குறும்படக்கி
எழுவா யமைந்த மநுநீதி
யாற்பதி னெண்மரபு
முழுவா னரித்துக் கிடந்து
விடாம லுலகுக்கெல்லாம்
வழுவா தமைக்கவும் வல்லது
தொண்ட மண்டலமே. ருசு

அழுவதுங் கொண்டு புலம்பாது
நஞ்சுண் டதுமறைத்தே
ழுவதுங் கொண்டு புகழ்க்கம்ப
நாட னெழுப்பவிசை
முழுவதுங் கொண்டொரு சொற்பேச
நெய்யின் முழுகிக்கையின்
மழுவதுங் கொண்டு புகழ்கொண்ட
தாற்றொண்ட மண்டலமே. ருஎ

மேற்கோள்

வெண்பா

ஆழியான் பள்ளி யணையே யவன்கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே—யூழியான்
பூணே யப்பூணன் புரமெரித்த பொற்சிலையி
ஞணே யகல நட. 68

நேயத் துடன்பிறந் தோன்பிணை
யூடி நெருப்பவித்துத்
தாயொப் பெனவெதிர் கொண்டழைத்
தேதன் னுடனெனவே

---

68 கம்பர் தனிப்பாடல்.

யாயத் தமிழ்கொண் டருங்கவி
ராயனுக் கன்புசெய்த
வாயற் பதியில் வடுகனும்
வாழ்தொண்ட மண்டலமே. ருஅ

மேற்கோள்

கட்டளைக் கலித்துறை

தன்னுடன் கூடப் பிறந்த சகோதரத் தம்பியுயி
ரங்கிலை மாண்டது தோன்றுமன் மூடிவைத் தன்னமிட்டான்
மன்னவர் போற்றிட வாழ்செங் கலங்கை வடுகனுக்குக்
கன்னனுஞ் சோமனு மோவிணை யாகக் கழறுவதே. 69

நெடுக விரித்துப் பிணமூடி
ஞென்மக னீயெனில்வா
கடுக வெனக்குமுன் மூந்தவென்
றேயோர் கவிதைசொல்லி
முடுக வழைப்ப மனையாள்
பிணந்தனை மூடிச்சென்ற
வடுக னளித்த மகன்வாய
லான்றொண்ட மண்டலமே. ருகூ

மேற்கோள்

வெண்பா

முந்தவினை யோன்மாள முத்தமிழோற் கன்னமிட்ட
வந்தவடுகன் மகனுயின்—வந்தென்
றலைக்கலியா ணத்துக்கே தான்பிணத்தை மூடி
யிலக்கணமாச் செய்குவைநீ யே. 70

பயிரைப் பெரும்பன்றி தின்றதற்
காகப் பரிசனத்தோ
ருயிரைப் பருகி யுடலவர்க்
கீய வொருபுலவோன்

---

69 புகழேந்திப் புலவர் (?) தனிப்பாடல்.
70 ஷை

செயிரப் புடைத்ததுந் தானே
பொறுத்தந்தச் செய்யுதவும்
வயிரப்ப னென்பவன் வாழ்வா
னதுந்தொண்ட மண்டலமே. ௬௦

ஈரக் கருக்கரி வாள்கொண்டு
போகையி லின்புலவோ
னேரொக்க வேநின்று வண்டோ
விடுமென நின்றுதனஞ்
சேரக் கொடுப்பவொன் றில்லாமன்
மன்னவன் செம்பொனெல்லாம்
வாரிக் கொடுக்கத் துணியவல்
லான்றொண்ட மண்டலமே. ௬௧

மேற்கோள்

வெண்பா

வண்டோ விடுந்தொண்ட மண்டலத்தா னேதியாக
மூண்டோ விலையோ வுரை. 71

பண்டை நிகண்டு திவாகரம்
பிங்கலம் பன்னுரிச்சொ
லெண்டிசை யின்சொல் வடமொழி
செய்யுளெல் லாமுணர்ந்தே
தண்டமிழ் கொண்டு நிகண்டுசூ
ளாமணி தானுரைத்த
மண்ட லவன்குடி கொண்டது
நீடொண்ட மண்டலமே. ௬௨

காரார் களந்தைப் புகழேந்தி
சொன்ன கலம்பகத்தி
னேரான தையும் படியென்ற
பாடலை நேரியர்கோன்

சீராகச் செப்பிய நற்பாடல்
கொண்டவன் செஞ்சியர்கோன்
மாராபி ராமனங் கொற்றந்தை
யூர்தொண்ட மண்டலமே. ௬௩

மேற்கோள்

விருத்தம்

நையும் படியே நாங்கொற்ற
நங்கோன் செஞ்சி வரைமீதே
யையம் பெறுநுண் ணிடைமடவா
யகிலின் றூப முகிலன்று
பெய்யுந் துளியோ மழையன்று
பிரசத் துளியே பிழையாது
வையம் பெறினும் பொய்யுரைக்க
மாட்டார் தொண்ட நாட்டாரே. 72

தாறற்ற செந்தமி ழொப்பாரி
யென்னுந் தமிழ்புனைந்தோன்
சேறைப் பதிசந்த்ர சேகர
வாணன்முன் சென்றவந்நாள்
வீறுற் றனரென்று வேளா
ளரைமன் விலங்கிலிட
மாறற்கு வந்து முடிசூட்டி
னன்தொண்ட மண்டலமே. ௬௪

மேற்கோள்

கட்டளைக் கலித்துறை

ஒப்பாரி யாய்கின் மகவைத்
தெருவி லொருத்திகண்டே
யப்பா வெனவெடுத் தாளணைத்
தாளன்னை தானுமென்று

---

72 புகழேந்திப் புலவர்—செஞ்சிக்கலம்பகம். (?)

டப்பாதன் மைந்தனென் றனங்க
னேதலை சாய்த்து நின்றாள்
செப்பா யவளெவள் காண்சேறை
வாழ்சந்த்ர சேகரனே. 73

தன்னூர்ச் சனகையிற் சன்மதி
மாமுனி தந்தமைந்த
னன்னா லுரைத்த பவணந்தி
மாமுனி நற்பதியுஞ்
சின்னா லுரைத்த குணவீர
பண்டிதன் சேர்பதியு
மன்னா புரத்திரு வன்னமின்
னேதொண்ட மண்டலமே. கூ௫

மேற்கோள்

1.

அகவற்பா

மலர்தலை யுலகின் மல்கிரு ளகல
. . . பவணந்தி
யென்னு நாமத் திருந்தவத் தோனே. 74

2.

வெண்பா

பண்பார் கவிஞர் வியந்தெடுத்த பாட்டியலை
வெண்பா வந்தாதி விளம்பினன்—மண்பாவும்
கோடாத சீர்த்திக் குணவீர பண்டிதனும்
பீடார் களந்தைப் பிரான். 75

உளரார் மலிபுலி யூர்க்கோட்ட
நற்குன்றத் தூரிலுள்ள
தீரார் வளமலி பாக்கிழ
வோன்புகழ் சேக்கிழவோன்

---

73 கம்பர் தனிப்பாடல். 74 நன்னூல், சிறப்புப் பாயிரம்.
75 வெண்பாப் பாட்டியல், சிறப்புப் பாயிரம்.

காராளன் கூடற் கிழவோன்
முதுமொழிக் காஞ்சிசொற்ற
வாரார் புரிசைக் கிழவோனும்
வாழ்தொண்ட மண்டலமே. ௬௬

நீண்டார் வணங்குந் திருவாலங்
காடர்க்கு நெல்லமுதே
வேண்டா வெனக்கிந்தக் கூழே
யமைகென்று வேண்டியகூ
ழாண்டா ரொருவ ரறுபத்து
மூவரி லன்புவைத்து
மாண்டா ரவர்க்கு வளநாடு
நீடொண்ட மண்டலமே. ௬௭

நன்றாய் விளைந்ததை வேதியர்க்
கீந்தந்த நன்மையினாற்
பொன்றான் விளைந்திட நெற்போல
வேயதைப் போரடித்துக்
குன்றாக் குவித்ததை நெற்பரி
மாற்றங் கொடுத்தளித்தான்
மன்றார் களந்தைக் குடிதாங்கி
யுந்தொண்ட மண்டலமே. ௬௮

மேற்கோள்

வெண்பா

பொன்னெல்லை யெல்லாம் பொதிப்பொதியாய்ப் பூசுரற்குச்
செந்நெல்லே போலச் சிறந்தளித்தான்—பன்னகத்தின்
சீரார் மணியைவிலை செய்யானுஞ் செய்யகளத்
தூரானுஞ் செய்கரும மொன்று. 76

---

76 தனிப்பாடல் (?)

வெங்கொலேக் கஞ்சி யடைக்கலந்
　　தான்புக வேந்தன் மைந்த
னுங்கலே யாம லொளித்துவைத்
　　தேதன் னொருமகவை
யிங்கிவன் றனைவ னென்றே
　　யடையலர்க் கீந்துவிட்டான்
மங்கலஞ் சேர்கிடங் கிற்பெரு
　　மான்றொண்ட மண்டலமே. ௬௬

மேற்கோள்

விருத்தம்

வந்தவுயிர் தனையளித்தான் கிடங்கில் வேந்தன்
　　வயலுழா னறமடங்கா தெனவு ரைத்தான்
செந்தமிழோர் கிளைவளர்த்தான் வேலூர் மன்னன்
　　செம்பியன்முன் வயிறிடந்தான் பேரை யூரா
னந்தமுள நாணளித்தான் வீடே ராதி
　　யடையாத வாசலா னிடையா லத்தா
னந்தனுட னமுதுண்டான் பேரா வூரா
　　னடைப்பரியா யிரங்கொடுத்தா னறை யானே. 77

எண்ணுன் கறந்தொண்ட மண்டலத்
　　தார்க்கன்றி யில்லையெனத்
தண்ணுர் வயலுழான் றன்சொல
　　வேந்தன் றலைதடிந்த
தெண்ணுமன் மன்னனு மப்படி
　　யேசொல விப்படியின்
மண்ணுளும் வேந்தன் வரிசைபெற்
　　றான்றொண்ட மண்டலமே. ௭0

மேற்கோள்

"வந்தவுயிர் தனை"யென்னும் பாடலிற் காண்க. 78

---

77 ஆறைக் கலம்பகம் (?)
78 முன் செய்யுளின் மேற்கோள்.

கோனூ ருழவுக் குடியா
னவன்றன் குமிழம்பட்டு
வேனூர்க் கிழாரொரு வேளாளன்
பஞ்சம் விடியளவு
நானூரி லுள்ள புலவோர்க்குந்
தேசத்து நாவலர்க்கு
மானூறு மன்னங் கொடுத்தளித்
தான்றொண்ட மண்டலமே. எக

மேற்கோள்

ஷை பாடலிற் காண்க. 79

நறுங்கூ ழெனையன்றி யுண்டனை
யோவென நாணிவயி
றிறுங்கூர் நுதிவடி வாளாற்
பிளந்திட் டிருங்கரினை (?)
யுறுங்கூழ் புறத்தி லிருந்தானுக்
குய்த்துப்பி லாதபுற்கை
வறுங்கூழ் சொரிந்திட்ட முற்றவுண்
டான்றொண்ட மண்டலமே. எஉ

மேற்கோள்

ஷை பாடலிற் காண்க. 80

போதாருந் தண்பொழில் வீடூ
ரதிபன் புலவர்க்கெல்லாந்
தாதா வெனக்கொடி கட்டுத
லாலவன் றன்மனையை

---

79 சுகு-வது சதகச் செய்யுளின் மேற்கோள்.
80 ஷை

நீதா வெனவொரு பாவாணன்
கேட்பவந் நேரிழையை
மாதா வெனவழைத் தானென்கொ
லாந்தொண்ட மண்டலமே. எக

மேற்கோள்

அந்தமுள நாணளித்தான் வீரோதி. 81

கடைவா யலினின்றி யாசகர்
கூப்பிடக் காதிலது
தடையா யவனும் பசியால்
வருந்தத் தடையகற்றி
அடையாத வாச லுடையா
னெனும்பெய ராதரித்தான்
மடையார் கழனி யிடையாலத்
தான்றொண்ட மண்டலமே. எஉ

மேற்கோள்

ஷை பாடலிற் காண்க. 82

தரையார் மழையுந் தபனனும்
போலத் தடையுமின்றி
யுரையாது நீசனொ டுண்டமை
யாலுமொ ரூனமின்றித்
திரையார் புவியிற் புகழே
படைத்துத் தினந்தினமும்
வரையாது வள்ளன்மை காட்டுவ
தாற்றொண்ட மண்டலமே. எங

---

81 சுகூ-வது சதகச் செய்யுளின் மேற்கோள் பார்க்க.
82 ஷை

மேற்கோள்

நந்தனுட னமுதுண்டான் பேராரூரான். 83

கூற்றார்ப் புலவ னொருபரி
கேட்பக் கொடைமதத்தா
லாற்றார்க் கிழான்பரி யாயிர
மீந்தன னாதலினால்
வேற்றார் பலவிது நம்மூ
ரெனும்படி வெம்பசியை
மாற்றார் பலவுள மண்டலங்
காண்டொண்ட மண்டலமே. எசு

மேற்கோள்

நடைப்பரி யாயிரங் கொடுத்தா னுறையானே. 84

ஏதிலுந் தொண்டர்க் கிசையா
தனகுற்ற மின்பஞ்செய் தாற்
றீதிலு நன்மை பெறலா
மெனவையந் தேறத்தெவ்வைச்
சூதிலும் வென்று புலனைந்தும்
வென்றெம தாதரையும்
வாதிலும் வென்று வருமூர்க்
கருந்தொண்ட மண்டலமே. எஎ

மேற்கோள்

1.

(பண் - கொல்லிக் கௌவாணம்)

நாட்டமிகு தண்டிக்கு மூர்க்கருக்கு மடியேன். 85

---

83 அசு-வது சதகச் செய்யுளின் மேற்கோள் பார்க்க.
84 ஷை
85 திருத்தொண்டத் தொகை, ரு-வது "வம்பறு வரிவண்டு" என்னும் திருப்பாட்டு.

2.

விருத்தம்

தொண்டவள நன்னாட்டு வேற்காட் டேர்வாழ்
தொல்லுழவர் நற்சூதர் சூது வென்று
கொண்டபொருள் கொண்டன்பர்க் கமுத ளிக்கும்
கொள்கையினாற் றிருக்குடந்தைக் குறுகி யுள்ளார்
விண்டிசைவு குழறுமொழி வீணர் மாள
வெகுண்டிடலான் மூர்க்கரென விளம்பு நாம
மெண்டிசையு மிகவுடையா ரண்ட ரேத்து
மேழுலகு முடனாளு மியல்பி னாரே. 86

மெய்ப்பார் மனைவியைக் கொள்வாரு
மற்று விளக்குமுட்டக்
கைப்பாணி கொண்டு கழுத்தீர்ந்
துதிரங் கலத்துளட்டிப்
பொய்ப்பார் புகழ வகல்விளக்
கோடு புகழ்விளக்கு
வைப்பார் கலியர் திருவொற்றி
யூர்தொண்ட மண்டலமே. எஅ

மேற்கோள்

1.

விருத்தம்

தடமலர்சூ ழொற்றியூர் நகருள் வாழுஞ்
சக்கரப்பா டியாகுலமெய்த் தவமா யுள்ளார்
படர்புகழார் கலியனார் நலியுங் கூற்றைப்
பாய்ந்தவற்கு விளக்கெரிக்கும் பரிவான் மற்றோ
ருடலிலராய்ச் செக்குழல்வார்க் கதுவு நேரா
துயர்மனைவி யைக்கொள்வா ருளரு மின்றி
மிடற்றுதிரங் கலனிறைய வரிய நாதன்
வியன்கைகொடு பிடிப்பவருண் மேவி னாரே. 87

---

86 புராணசாரம், ௯எ-வது திருவிருத்தம்.

87 புராணசாரம், ௬௦-வது திருவிருத்தம்.

2. திருத்தொண்டத் தொகை

(பண் - கொல்லிக் கௌவாணம்)

கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பற் கடியேன். 88

கொத்தலர் கோதை வியன்பாண்டி
மண்டலக் கொம்பைத்தன்பால்
வைத்திருந் தாங்கவ டன்கேள்வன்
றேடி வரவவற்கே
யுய்த்திரு வோர்க்கும் வரிசையு
மாற்றி யுடனுஞ்சென்று
மைத்துனக் கேண்மை படைத்ததன்
றேதொண்ட மண்டலமே. எசு

மோதிச் சிவந்த கவிகாள
மேக மொழிந்தவெண்பாப்
பாதிக்கு முந்திப் பரிசளித்
தோன்களப் பாளனெனு
மாதிக்கம் பெற்றவ ளூழூர்
முதலி யாசிருப்பா
மாதிக்கெ லாம்புகல் கின்றதொல்
சீர்த்தொண்ட மண்டலமே. அ0

மேற்கோள்

வெண்பா

உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்ற வொருகோடி
வெள்ளங்கா லந்திரிந்து விட்டோமே—தெள்ளுதமி
ழூழூர் முதலி யாசர்பிரா னிங்கிருக்கப்
போழூ ரறியாமற் போய். 89

---

88 எ-வது "பொய்யடிமை யில்லாத புலவர்" என்னும் திருப்பாட்டு.

89 காளமேகப் புலவர் தனிப்பாடல்.

வேலி யழித்துக் கரும்பையெல்
லாந்தின்ன விட்டிரவோர்
காலில் வணக்கமுஞ் செய்தேத்திப்
பின்னுங் கரும்பு தின்னக்
கூலி யளந்துங் கொடுத்தா
ளொருவன் குமணனைப்போல்
வாலிதின் மிக்க கொடையாள
னுந்தொண்ட மண்டலமே. அக

உணலைப் பசும்பொன் முதலான
வற்றை யுதவிப்பின்னுங்
குணலச்சை யுள்ளவர் கேட்கவுங்
கூசுவர் கொல்லெனவே
யெணலைக் கருதி யெழுதிவைப்
பீரென வின்மறைந்து
மணலைப் பரப்பிய முன்றிலுள்
ளான்றொண்ட மண்டலமே. அஉ

பன்னுந் தமிழ்க்கவன் மாமனை
தாதி பரிசளிப்ப
முன்னம்பி காளிக்கு நெற்குன்ற
வாண முதலியென்போன்
பின்னுஞ் சிலபல பொன்னுங்
கொடுத்துத்தன் பேர்நிறுத்த
மன்னுந் தமிழு முரைத்தா
னவன்றொண்ட மண்டலமே. அங

மேற்கோள்

கட்டளைக் கலித்துறை

கற்குங் கவிவல்லை யாதவர் கோனம்பி காளிக்கியாம்
விற்கும் பரிசன மாகிவிட் டோம்வட வேங்கடமும்

பொற்குன்ற மும்புகழ் கங்கா நதியும் பொதியமும்போ
னெற்குன் றமுநம் மரபுமென் னாளு நிலைநிற்கவே. 90

சீரொன்று தேவர் முதலாத
லாற்றில்லை வாழ்முதலி
யாரென்று நாமம் படைத்தது
போன்மற் றவருமந்தப்
பேரொன்று பெற்றது வேளாண்
முதன்மையைப் பெற்றல்லவோ
வாரொன்று பூண்முலை யாரெளி
தோதொண்ட மண்டலமே. ௮௪

கசிட்டன் புடைய விராவணன்
வீழக் கயிலையுறைந்
தசிட்டன் றிருவடித் தாமரை
பூசிக்கச் சார்ந்தபசு
விசிட்டந் தருமுலைப் பாலாறு
கொண்டு விருப்பமுடன்
வசிட்டன் றவஞ்செய்த மண்டலங்
காண்டொண்ட மண்டலமே. ௮௫

மேற்கோள்

கலித்துறை

கழிந்த பற்றுடை வசிட்டன திருக்கையாங் கவினார்
மொழிந்த நந்தியம் பெருவரை மொய்த்தருள் முகில்கள்
பொழிந்த நீரது பொற்புறு தாழியிற் பொங்கி
வழிந்த பாலெனத் திசைதொறு மிழிந்தது மன்னோ. 91

வெல்லாமல் வென்றுநற் சந்தனக்
காட்டத்தின் மேலிருந்து

---

90 நெற்குன்றவாண முதலியார் தனிப்பாடல்.

91 கந்தபுராணம், ஆற்றுப்படலம், கூ-வது செய்யுள்.

நல்லாறை நந்திக் கலம்பகங்
கேட்டபி னற்றுணைக்குக்
கொல்லா புரிசந்த்ரன் மாமுடி
சூட்டக் குடைகவித்து
மல்லார் புரித்தொண்ட மானான
துந்தொண்ட மண்டலமே. அசு

மேற்கோள்

கட்டளைக் கலித்துறை

நேற்றினு மின்று மிகுந்தது காத னிலவெனுங் கூன்
கூற்றினு மன்னை கொடியள்கண்டாய் மள்ளர் கொன்றபழஞ்
சேற்றினு மேதிக் குளம்பா னெருக்குண்ட செங்கருப்பஞ்
சாற்றினுஞ் சங்கந் தவழுங்கொல் லாபுரி சந்திரனே. 92

அந்தப் புரமு மறுநான்கு
கோட்டகத் தாருமொன் றாய்க்
கந்தப் புராணம்பன் னீரா
யிரஞ்சொன்ன கச்சியப்பர்
தந்தப்பல் லக்குச் சிவிகையுந்
தாங்கியச் சந்நிதிக்கே
வந்தப் புராண மரங்கேற்றி
னார்தொண்ட மண்டலமே. அஎ

உறைவா ளரச னொறுப்பானென்
றஞ்சி யொளித்ததுவும்
பிறவாமல் வைத்தவர் பேணாத
லாலவர் பேர்புனைந்து
திறவா ணிபர்முதற் சாதியுள்
ளோரன்று செய்தநன்றி
மறவாம லின்னமும் பாராட்
டிடுந்தொண்ட மண்டலமே. அஅ

---

92 நந்திக்கலம்பகம் பாடிய தொண்டமான் தனிப்பாடல்.

மேதைப் புலவரெண் ணேகாம்
பரசம்பு மெச்சநெடுங்
காதைப் புலவ ரிரட்டையர்
பாடுங் கலம்பகமு
மோதற் கரியநல் லேகம்ப
வாண ருலாவுமந்த
மாதைப் பனுவலும பாராட்
டிடுந்தொண்ட மண்டலமே. அசு

மேற்கோள்

கட்டளைக் கலித்துறை

எறிக்கும் புகழ்க்கச்சி யேகாம்
பரசம்ப னெண்டிசையும்
பொறிக்கும் புலிக்கொடி யான்புயம்
வேட்டபின் பூவையன்னாள்
வெறிக்குங் குமக்கொங்கை மீதே
விழிசொரி வெள்ளந்துள்ளித்
தெறிக்குந் திவலை யழிக்குஞ்சிந்
தூரத் திலதத்தையே. 93

தாளாண்மை யுள்ள புகழ்க்கிருஷ்ண
ராயன் சமுகத்திலே
வேளாண் மகளிரைப் போலே
விநோதித்து வேடங்கொண்டு
கோளார் வயிரியர் கூத்தாடத்
தங்கள் குடிமையெண்ணி
வாளா லவனுயிர் மாய்த்ததன்
றேதொண்ட மண்டலமே. கூ0

---

93 இரட்டையர்—பல்லவராயன் கோவை (?)

தருவுற்ற காளத்தி கச்சியந்
தாதியுந் தண்டமிழ்தேர்
திருவொற்றி யூரிற் குறுந்தொகை
தானுந் திரைகடலைப்
பொருவுற்ற கச்சிம விதே
ரனமுன் புகல்கவியு
மருவுற்ற கூந்தன் மின்னேயுண்டு
காண்டொண்ட மண்டலமே. கூக

மேற்கோள்

1.

காளத்தியுங் கயிலாயமு நேரென்பர் 94

2.

அறந்தா னியற்று மவனிலுங்கோடி யதிகமில்லம் 95

3.

ஓங்குகட லுடுத்த வொற்றி யூர! 96

4.

மலிதேரான் கச்சியு மாகடலுந் தம்மு
ளொலியும் பெருமையு மொக்கும்—97

---

95 பட்டினத்துப் பிள்ளையார் திருவேகம்பமாலை, க-வது திருவிருத்தம்.

"மெய்த்தொண்டர் செல்லுநெறியறி யேன்மிக நற்பணிசெய்
கைத்தொண்டர் தம்மிலு நற்றொண் டுவந்தில னுண்பதற்கே
பொய்த்தொண்டு பேசிப் புறம்புற மேயுனைப் போற்றுகின்ற
இத்தொண்ட னேன்பணி கொள்ளுதி யோகச்சி யேகம்பனே"
எனனும் தொடக்கமுடைய திருவந்தாதியும் காண்க.

96 பட்டினத்துப் பிள்ளையார் திருவொற்றியூர் ஒருபாவொருபஃது, எ-வது பாட்டு.

97 —மலிதேரான்

கச்சி படுவ கடல்படா கச்சி
கடல்படுவ வெல்லாம் படும்.—காரிகை, செய்யுளியல்,
ஈ-வது இன்னிசை வெண்பாவிற்கு உதாரணம்.

பண்டையோர் நாளை யிலோரேழ்
கலிங்கப் பரணிகொண்டு
செண்டையு மேருவிற் றீட்டுவித்
தோன்கழற் செம்பியன்செய்
தொண்டநன் ளுடு புரக்கின்ற
கோனந்தித் தோன்றலெங்கள்
வண்டையர் கோனங் கருணா
கரன்றொண்ட மண்டலமே. ௯௨

மேற்கோள்

தாழிசை

இறைமொ ழிந்தளவி லெழுக லிங்கமிவை
யெறிவெ னென்றுகழ றெழுதனன்
மறைமொ ழிந்தபடி மரபில் வந்தகுல
திலகன் வண்டைநக ராசனே. 98

தேர்கொடுத் தோனும் பரிகொடுத்
தோனுந் திருமணையிற்
ருர்கொடுத தோனுந் தலைகொடுத்
தோனுந் தமிழினுக்கா
வூர்கொடுத் தோனு முயிர்கொடுத்
தோனு முதைகொடுக்க
மார்கொடுத் தோனு மனைவோரு
ளார்தொண்ட மண்டலமே. ௯௩

துரைத்தியாக ராயர்முன் சுந்தரர்க்
காவொரு தூதுசென்ற
விரைத்தா மரைமணம் வீசுதல்
போல்விடப் பாய்சுருட்டித்

98 கலிங்கத்துப்பரணி, மக, காளிக்குக் கூளி கூறியது, ௩௰.

திரைத்தா வணத்தி லொருபுல
வோன்பின்பு சென்றசெந்தா
மரைத்தாண் மணமின்ன நாறுங்கண்
ணர்தொண்ட மண்டலமே. ௬௪

வானப்பிர காசப் புகழ்க்கிருஷ்ண
ராயற்கு மஞ்சரிப்பா
கானப்பிர காசப் புகழாய்ந்து
கச்சிக் கலம்பகஞ்செய்
ஞானப்பிர காச குருராயன்
வாழ்ந்து நலஞ்சிறந்த
மானப்பிர காச முடையோர்
வளர்தொண்ட மண்டலமே. ௬௫

மந்தா கினியிற் றிரிவேணி
சங்கத்தின் மாண்டொருவன்
மந்தா கினியுற்ற பாதாளம்
புக்கு வணங்கிநின்று
மந்தா கினிக்கு மகவாகக்
கேட்ட வரங்கொடுப்ப
மந்தா கினிக்கு மரபான
துந்தொண்ட மண்டலமே. ௬௬

காவிய மாகிய காமீகங்
கண்டுகங் காகுலத்தோ
ரோவிய சூத்திர ராக
விருபத்து நான்குயர்ந்த
மேவிய கோட்டத்தி லுங்கரி
கால வளவன்மிக்க
வாவிய மேன்மை கொடுத்தளித்
தான்றொண்ட மண்டலமே. ௬௭

யுகமேழு கோடி யிருபதி
லக்கமு முள்ளமட்டுஞ்
சகமேழு மேழும் புகழே
நிறுத்தித தமிழ்புனைந்து
புகழ்மேழி வாகைப் பதாகையும்
வீரப் புலிக்கொடியு
மகமேரு விற்சென்று தீட்டிய
தாற்றொண்ட மண்டலமே. கூஅ

நாடான கோட்ட மிருபத்து
நான்கினு ணற்றண்டகத்
தாடாத செக்கு மரையாத
வம்மியு மாகிவளர்
பீடாதி பீடத் திருக்காமக்
கோட்டம் பிறங்குகச்சி
மாடா திபரெனுங் காலாண்ட
ருந்தொண்ட மண்டலமே. கூகூ

இன்னவர் காலத்தி லெத்தனை
பேர்மற் றிவர்களுக்கு
முன்னவர் காலத்தி லெத்தனை
பேரிம் முதலிகடம்
பின்னவர் காலத்தி லெத்தனை
பேர்கள் பிறப்பவர்முன்
மன்னவர் காலத் தொடர்புடைத்
தாற்றொண்ட மண்டலமே. க00

நிலைவாழ்வு பெற்றிடும் வேளாளர்
வாழிநன் னீருழவு
நலைவாழி யேகம்பர் சந்நிதி
வாழிசங் காழிதண்டு

சிலைவாழி வாழி திருநெடு
மாறிரு வேங்கடமா
மலைவாழி யெண்ணெண் கலைவாழி
வாழ்தொண்ட மண்டலமே. கoக

நூற்கு அநுபந்தம்

1.

தகைவந்த சீர்த்தொண்ட மண்டலத்
தார்தஞ் சரிதையையித்
தொகையென் றொருவாக்குஞ் சொல்லப்
படாதுசொன் னாலுமிக்க
நகைவந் திடுஞ்சொற் புலவோர்
சபையினி னாமுநம்மால்
வகைவந்த மாத்திரஞ் சொல்லிவைத்
தோமிந்த மண்டலத்தே. 99

2.

காவைவென் றிடுகத் தூரி
கண்மணிக் கறுப்ப னென்னு
மாவையம் பதியான் றொண்ட
மண்டல சதகங் கேட்டு
நாவலர் புகழ்ந்து மெய்ச்ச
நவநிதி பொழிந்து நன்றாப்
பூவுல கெங்கும் போற்றப்
புகழ்நிலை நிறுத்தி னானே. 100 க

---

99 இது இந்நூலின் அவைபடக்கம என்று தோன்றுகிறது.

100 இது முதல் ஐந்து செய்யுட்களும் இந்தச் சதகம் அரங்கேற்றுகைக்கு உதவிய கறுப்பன் என்னும் வள்ளலை இந்நூலாசிரியர் அவ்வமயம் புகழ்ந்து கூறியனவாகும். இவற்

கன்மாரி காத்தமுகிற் கத்தூரி
யருண்மாவைக் கறுப்ப னென்னு
மின்மாரி தனதுகிளை யத்தனையுஞ்
சபைகூட்டி வியந்து கேட்டுச்
சொன்மாரி பொழிந்திடவே சிரகரகம்
பிதஞ்செய்து சுருளுந் தந்து
பொன்மாரி பொழிந்துதந்தப் பல்லக்குச்
சுமந்துமிகு புகழ்பெற் றானே. ௨

ஓர்கறுப்பு மில்லாத தொண்டவள
நன்னாட்டி லுசித வேளைச்
சீர்கறுப்பொன் றில்லாத கத்தூரி
மன்னனருள் சேயைப் பார்மே
லார்கறுப்ப னென்றுசொல்லி யழைத்தாலு
நாமவனை யன்பி னாலே
பேர்கறுப்ப னிறஞ்சிவப்பன் கீர்த்தியினால்
வெளுப்பனெனப் பேசு வோமே. ௩

எல்லப்ப னம்மையப்பன் றருதிருவேங்
கடநாத னெழிற்சீ ராமன்
வல்லக்கொண் டையன்மாதை வேங்கடே
சுரன்போல வரிசை செய்தான்
செல்வத்தம் பியருடனே கத்தூரி
மகன்கறுப்பன் றெருவீ திக்கே
பல்லக்குத் தான்சுமந்தா னதுநமக்கோ
ராயிரம்பொன் பரிசு தானே. ௪

னோடு பின்வரும் செய்யுளும் அவர் அவ்வமயம் கூறிய தாகக் கருதப்படுகிறது:

கூடுந் திரைகொண் டிவன்வேளை பார்த்துக் குறுகலர்கள்
தேடுந்தென் மாவைக் கறுப்பனெங் கோனெஞ் சிவிகைதனைப்
பாடுந் தமிழ்ப்பெரு மானொட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனைப் போலச் சுமந்தனனே.

இந்தச் சதக மரங்கேற்று
　　கைக்கிசைந் தேனெவரும்
வந்திக்குமா வைக்கத் தூரிக்
　　கறுப்பன் வளமைபெறு
புந்திக் குலாவுநள் ளாறர்தம்
　　பாதம் பொருந்துமன்பன்
வந்துற் பவிக்க மகிழ்வான
　　துந்தொண்ட மண்டலமே. ௱

3. சுவாமிகள் பதிப்பித்த நூலும் அவர்கள் எடுத்துக்காட்டிய அதன் மேற்கோள்களும் முடிந்தன.

இந்நூலாசிரியரைப் பற்றிச் சுவாமிகள் பதித்த குறிப்பு

இத்தொண்ட மண்டல சதகஞ் செய்த புலவர் செங்குந்த மரபிற்றோன்றிச் சிவானுக்கிரகத்தால் தமிழ்க்கலை முழுதும் பயின்று, தெய்வீகம் விளங்கிய நல்வாக்கினைப் பெற்று, 101 சிதம்பரத்தில் நடேசர் பொன்பணம் ஐந்து பஞ்சாட்சரப் படியில் வைத்தருளக் கொண்டு, அதனாற் **படிக்காசுபுலவர்** என்று பெயர் பெற்றவர்.

உ. தொண்ட மண்டல சதகம் முற்றிற்று.

---

101 இப்புலவர் பெருமான் வாக்கினை வியந்து பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் பாடியது :

மட்டாருந் தென்களந்தைப் படிக்காச
　　னுரைத்ததமிழ் வரைந்த வேட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலு மூவுலகும்
　　பரிமளிக்கும் பரிந்தவ் வேட்டைத்
தொட்டாலுங் கைமணக்குஞ் சொன்னாலும்
　　வாய்மணக்குந் துய்ய சேற்றில்
நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே
　　பாட்டினறு நளினந் தானே.

௬. உலகெலாம் என்னும் மெய்ம் மொழிப் பொருள் விளக்கம்

1. மெய்ம் மொழிப் பொருள் விளக்கம் ஆமாறு

இஃது **உலகெலாம்** என்னும் **மெய்ம் மொழிப் பொருள் விளக்கம்** என்பது எங்ஙனமெனின்: திருவருளின்பத்தை யங்கைக் கனியிற் பெற்ற பெரியரையும் அத் திருவருளையும வாச்சிய லக்ஷியமாகக் கொண்ட பெரிய புராணத்திற் றெய்வத் தற்சிறப்புச் செந்தமிழ்ச் செய்யுட்கண் எல்லாம் வல்லவிறைவன்றிருவருளா லெடுத்துக் கொடுக்கப்பட்ட **உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்** என்னு மெய்ம் மொழியினது பொருள் விளக்கமாகலின் மெய்ம் மொழிப் பொருள் விளக்கமென் றுயிற் றென்க.

இதனை மெய்ம் மொழி யென்ற தென்னை யெனின்: உணர்ந்தோர்—இழிகுண வாங்கார மொழியாய மனிதர் மொழியினும் சமகுணவாங்கார மொழியாய தேவர் மொழி மெய்ம்மொழி யென்பர்; அதனினும், உயர் குண வாங்கார மொழியாய முனிவர் மொழி மெய்ம் மொழி யென்பர்; அதனினும், இயல்புப் பிரகிருதி மொழியாய அரிபிரமாதியர் மொழி மெய்ம் மொழி யென்பர்; அதனினும், சுத்தாசுத்த மாயா மொழியாய உருத்திராதியர் மொழி மெய்ம் மொழி யென்பர். இங்ஙன மன்றி, மொழித்திறன் றெரிந்து முடிபு முற்றுணர்ந்தோர் அபர வயிந்தவப் பிரணவ மொழியாய சதாசிவாதியர் மொழியே மெய்ம்மொழி யென்பர் என்னின்: இவ்வபர வயிந்து

வப் பிரணவ மொழிக்கு உபாதான வுபகரண வதி கரண வியாபக சித்தமாய் சுத்த வியோமாகாரமாய் விளங்குகின்ற திருவருட் பர வயிந்துவத் துரியத் திருவாக்கான் மொழிந்த உலகெலாம் என்னு மொழியை மெய்ம் மொழி யென்ற விறும்பூ தன் றென்க. வே றியை பிய லடை யொன்று வழக்கின்க ணின்மையிற் கூறியதன்றி இஃதோ ரியை பிய லடையு மன்றென்க.

இதனைத் திருவருட் பரவயிந்துவத் துரிய மொழி யென்றது எங்ஙன மெனின்: சுத்த முதலிய மாயா காரிய வாகாயங்களினன்றி, நாதாதீதமாய், சிதாகாச மென்று வேதாக மங்களான் மீக்கூறப்பட்ட சிற் சபைக்கட் டோன்றிய மொழி யாகலின் அங்ஙனங் கூறிய தென்க.

ஆயி னிவ் வடை மொழிப் பொருட் டுணி பென்னை யெனின்: வாச்சியப் பொருளாங்கால் மெய்ம்மையை யுடைய மொழி யென்று வேற்றுமை வழியான் விரித்து அபர வயிந்துவப் பிரணவ மொழிக்கும், லக்ஷியப் பொருளாங்கால் மெய்ம்மையாகிய மொழி யென் றல்வழியான் விரித்து திருவருட் பர வயிந்து வத் துரிய மொழிக்கு மியைபுகோட றுணி பென்க.

இங்ஙனம் வாச்சியலக்ஷிய மொழி வரலா றென்னை யெனின்: மனிதர் தேவர் முநிவர் அரிபிரமர் உருத் திராதியர் மொழியாய வாங்கார மொழி பிரகிருதி மொழி மாயை மொழி யென்பவை அசுத்தமுஞ் சுத் தாசுத்தமு மாகிய சத்தார்த்தப் பிரபஞ்ச காரண வைகரியாதி நான்கு வாக்கின்காரியமொழி யாகலின் மெய்ம் மொழி யன் றென்க. சதாசிவாதி மொழி யாகிய பிரணவ மொழி சுத்த சத்தார்த்தப் பிர

பஞ்ச காரணமாகிய அபர வயிந்துவ காரிய மொழி யாகலின் வாச்சிய மெய்ம் மொழி யாயிற் றென்க. பரசிவ மொழியாய திருவருட் டுரிய மொழி, துரிய சத்தார்த்தப் பிரபஞ்ச காரணமாய்ச் சிற்சத்தி பர விந்துவிற் பதிதலான் நாதமாத்திரத்தி னுண்டாய மொழி யாகலின், லக்ஷிய மெய்ம் மொழி யாயிற் றென்க.

இஃது மெய்ம் மொழி யென்பதைப் பெரிய புரா ணத்துள்

> அருளி னீர்மைத் திருத்தொண் டறிவருந்
> தெருளி னீரிது செப்புதற் காமெனின்
> மருளின் மெய்ம்மொழி வானிழல் கூறிய
> பொருளி னாகு மெனப்புகல் வாமன்றே. 1

என்ற செய்யுளுள்ளுங் காண்க வென்க.

இஃது அபர வாக்கிய விவகார மன் றாகலின் விசேட விலக்கண மியற்பட விரித்த திலமென்க.

இம மெய்ம் மொழிப் பொருள் விளக்கத்தி னெல்லை யெங்ஙன மெனின்: யோகாந்த கலாந்த நாதாந்த போதாந்த வேதாந்த சித்தாந்த மென் னுஞ் சடாந் தானுபவ சாத்தியர்களு மவற்றை விரு மபி யவ் வழிக்க ணின்ற சாதகர்களு மந்தரானுபவ திட்டாந்தமாக உபாசிக்க விளங்குகின்ற சிதம்பர ராசியத்தைக் குறிக்குஞ் சிற்சபைக்கண்ணே, சேக் கிழா ரென்னுந் தெய்வப் புலவர் பொருட் டிறைவர் பரமாகாய வாக்கான் மொழியப்பட்டுச் சமரசா நு பவ சாட்சாத்காரமாய் ஆநந்தத்தினு நடிக்கின்ற சிதம்பர நடனத் திருவருட் பதத்தை வாச்சிய

---

1 பாயிரம். கூ-வது திருவிருத்தம், அவையடக்கம்.

லக்ஷியமாகக் கொள்ளப்பட்ட தாகலின், சடாந்த சமரச லக்ஷியப் பொரு ளெல்லையை யுடைய தென்க.

இனி **உலகெலாம்** என்பதன் மட்டன்றி, **உணர்ந்தோதற் கரியவன்** என்ற தொடர்காறு மத்திருவருட்பர வயிர்துவத் துரியத் திருவாக்கி னெழுந்த மெய்ம் மொழி யென் றையமறக் கொள்க வென்க. எங்ஙனமெனின்: திருவருட் புலமை சான்ற சேக்கிழா ரென்னும் பெரியர் செயற்கரிய வென் றரையன் பணித்தவா றடுத்த கருவிகண் முறைப்பட வொன்றேனு மின்றி முடித்தற் கெங்ஙனங் கூடுமென் றையுற் றழுங்கிய வுள்ளத்தோ டருட் பொதுவின்கட் போந்து பணிந்து பழிச்சித் திருவருட் பெருமையைச் சிந்தித்து நிற்ப, ஆண் டிறைவர் அவர் கருதிய பெருஞ் செயன் முடித்தற் பொருட் டுளங் கொண்டு சிற்ச பைக்கட் புறத் துலகெலா மென்று மவ ரகத் தந் நிலைக்கண் உணர்ந்தோதற் கரியவனென்று மொழிந் தருளியவா றென்க.

அங்ஙன மொழிதற் கியைபு எங்ஙனமெனின்: உலகெலா மென்பது பல நோக்குடைப் பெரு மொழியாகலின் எந் நோக்கங் கருதி மொழிந்தன ரிறைவ ரந் நோக்க மவ ரறிந்தே முடித்தல் வேண்டு மற்றையர் முடித்தற் கணுத்துணையுங் கூடா. அன்றித் திருவருட் டுரியத் திருவாக்கி னெழுந்த பயனிலை முற்றுக் குறைமொழியை மற்ற வாக்கான் முடித்தற் கியை பெவ்வாற்றானு மிறைத்தனையு மின்று. அன்றி, சிவசுதந்தரச் செயற் குறையைச் சீவசுதந்தரத்தான் முடித்தலுங் கூடா. அன்றி யிது காறு மிறைவ ரருள் வடிவாற் பக்குவர்கட் குபதேச முதலிய திருவாக் களித்தவற்று ளிங்ஙனங் குறை

மொழி யளித்ததின்று. அங்ஙன மளித்த லத் திருவருட் டுரியத் திருவாக்கி னியலு மன்று. ஆகலி னென்க.

ஆயி னோரிடத்தே மொழியாது அகத்தும் புறத்தும் மொழிந்த தென்னையெனின்: அக்காலை யருட் பொதுவின்க ணின்ற வந்தண ரறவோர் முதலிய பலரு மவர்வழி மற்றையோரும் சேக்கிழா ரென்னும் பேரிற் சிறந்த பேரறிவுடைய பெரியர் திருவருட் டுணையா லிப் பெருங் காப்பிய முடித்தனர். இஃது மாயைத் துணையாற் றேவர் முனிவர் மனித ரியற்றிய மற்றைக் காப்பியங்கள் போ லெளி தன் றென் றன்புகொண் டனுபவித் துய்தற்பொருட்டு மம் மெய்ம் மொழியைக் கேட்டுச் சேக்கிழாரது புறக்கரணங்கள் சுத்தியாதற்பொருட்டும், புறத்தே யுலகெலா மென் றெழுந்து தத்துவபடலத்தான் மயங்கிய வவர தான்ம திருட்டியைப் படல நீக்கி யறிவு விளக்கிச் சுத்தி செய்தற்பொருட் டகத்தே யுணர்ந் தோதற் கரியவ னென்று முடிந்த தென்க.

ஆயி னகத்தும் புறத்து மொழிதற் களவை யெங்ஙனமெனின்: திருவருட் பர வயிந்துவத் துரிய மொழி புறத்தே யெழுந் தகத்தே நிறைந்தது சுத்தி செய்தற் கருணையான் வாயுப்போல வென்னுஞ் சுதன்மியமாகிய விக்கருதல் வியாத்தியா னறிக வென்க. என்னையெனின்: பொருட் புலப்பாட் டின்கட் சிற்சத்தியானது பர விந்துவிற் பதிதலு மதனா லதன்க ணாத முண்டாதலு முண்மை யாத லிற் பக்கமும் பக்கத்தன்மையும் பெறப்பட்டன. வரலாற்றுப் புலப்பாட்டின்க ணகத்தும் புறத்தும் சுத்தி செய்தற் கருணையா னன்றி யம் மொழி

தோன்றாதாகலிற் சிதைக்கப்படா வளவைத் திறன் பெறப்பட்டது. உறழ்ச்சிப் புலப்பாட்டின்கணோர்ச்சிப் பொருள் வான்புறத் தெழூந் தகத்து நிரம்புத லெங்ஙன மங்ஙனந் திருவருட் பர வயிந்துவப் புறத் தெழுந்து வாக் ககத்து நிரம்புதல் கூடு மாகலி னளக்கப்படுகை மாறுபடாமை பெறப்பட்டது. ஆகலி லசம்பவ மவ்வியாத்தி யதிவியாத்திகளு மின்று. இதனால் வியாத்தி முறை காண்க வென்க.

இனி யிம் மெய்ம் மொழிக்குப் பொருள் விளக்கஞ் செய்யுமிடத்துக் காட்சியுங் கருதலு மின்றியு முரை யளவையும் வேண்டுங்கால் வேதாகம முதலிய குறித்தல் வேண்டுமோ வெனின், குறித்தல் வேண்டா. என்னை யெனின்:—

இங்ஙனம் வருணாசிரம மானத்தாற் பந்தப்பட் டேகதேசத்தான் வழங்குகின்ற வேதம் வருணாசிரம மானத்தாற் பந்தப்படாது யாண்டும் பூரணத்தான் வழங்கு மெய்ம் மொழிக்குப் பிரமாண மாகா வென்க. அன்றியும் வேதங்களோர் காலத்தி லுருத்திரனாலும் வேறோர் காலத்தில் விண்டுவாலும் பிறிதோர் காலத்திற் பிரமனாலும் மற்றோர் காலத்திற் பராசரன் வியாசன் முதலிய முனிவராலுந் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் பலவாறு விகாரப்படுகின்றன வாய்; தாதுக்கள் பிரத்தியயங்கள் பிராதிபத்தியங்கள் முதலிய வியலுறுப்பும், வர்ன்னம் பதம் ஜடை முதலிய வியல் விசேட வுறுப்பும், உதாத்தம் அநுதாத்தம் சுரிதக முதலிய விசையுறுப்பும், சிக்ஷை கற்பம் வியாகரணம் நிருத்தம் சோதிடம் சத்தம் முதலிய வங்கவுறுப்பும், ஆயுணூல் தநுநூல் காந்தருவநூன் முதலிய வுபவுறுப்பு முடையன வாய்; பஞ்சப் பிரம்ம மந்திரந் தத்துவத்திரய

